ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.
ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ ஆடி௴ 4௳ (19—7—1931) | மலர் 12

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

பாலர் பரிபாலனம்

ஆசிரியர்—வைத்திய பாஸ்கர

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள்.

செடி, கொடி, மரம் முதலியவைகள் முளையிலிருந்து வளர்ந்து பயனடைவதற்கு வேண்டிய அனுகூலங்கள் இல்லா விடத்து அவை செழித்து வளர்ந்து பயனடையாது பட்டழிந்து போவது போல, நமநாடும் மக்களும் முளையிலிருந்தே நல்ல முறையில் வளர்த்தாலன்றி நோயின்றி உடல் நலத்துடனும், பலத்துடனும் நீண்டநாள் உலகில் வாழ வியலாது. சுயராஜியம் பெற்று மற்றநாட்டு மக்களுடன் சமத்துவமாக வாழப் பெரிதும் விரும்பும் மக்கள், பாலருந்தும் பாலர் பருவத்திலேயே மக்களை நோயின்றி அயல் நாட்டாரைப்போல உடல் பலத்தோடு வளர்த்தற்குரியவகையைக் கற்கவேண்டும். மற்ற நாட்டினற்கும் நமக்குமுள்ள உடல் பலத்தையும் மனோபலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கின் இவை விளங்காமற்போகா. இதற்குக்காரணம் நாம் வாழும் நிலத்தியல்பும் வறுமையுமெனச்சிலர் கூறினும் அது முற்றிலும் பொருந்தாது. இதற்கு அறியாமையே முக்கியகாரணமாகும். ஆதலால் மக்களைப் பெற்று வளர்க்கும் ஒவ்வொருதாய்மாருக்கும், பிள்ளைப்பேறு பார்க்கும் மருத்துவச்சிகளுக்கும், ஆஸ்பத்திரி நர்சுகளுக்கும், வைத்திய மாணவர்கட்கும், பொதுவாக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இப்பாலர் பரிபாலனம் இன்றியமையாத அரிய நூலாகும். படிக்கும்போது மட்டும் சிறிது மகிழ்ச்சியைத்தந்து வேறுபயன் ஒன்றுமில்லாத பல நாவல்கள், வேடிக்கைக் கதைகளைப் போன்றதல்ல. மனிதப்பிறவியில் அடையவேண்டிய இன்பங்களுக்கெல்லாம் அடிப்படையானது இப்பாலர் பரிபாலனம்.

விலை ரூ. 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

கேட்லாக்கும் சுகவழியும், இனாம்.

தந்திவிலாசம் "மருத்துவன்" சென்னை.
டெலிபோன் நெ. 2584.

தமிழ் வைத்திய சாலை,
221. தங்கசாலை வீதி, சென்னை.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவறாதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டு௴ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணா 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவே விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், முடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன் செலவு, கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 6, 7 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

நிமிஷக்கணக்கில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்துமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியதின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேதா & Co., 234, சைனாபஜார் ரோட் மதராஸ்.
வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

குணமில்லாவிடில் பணம் வாப்பீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷகணக்கில் குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

கடந்த 12 வருஷங்களாக இந்திய ஏழைமக்களின் கல்வி விஷயமாய் தபால் மூலமும், நேரிலும் உழைத்துவரும் ஸ்தாபனம் இதுவே!

முந்துங்கள்! 2000 மாணவர்கள். | முந்துங்கள்!! 2000 மாணவர்கள்.

தமிழ்நாட்டு பெற்றோர்களே!

மெட்ரிக்குலேஷனுக்குரிய அறிவை

உங்கள் பிள்ளைகள் ஹைஸ்கூலில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடில், தபால்மூலம் வீட்டிலிருந்தபடியே, தொழில் செய்துகொண்டு சவகாச நேரங்களில் கற்றுக் கொள்ளலாம். கவர்ன்மண்ட் பரீக்ஷைக்கு போக இஷ்டப்படின் போகலாம். S. S. L. C. படித்து தவறியவர்கள் நமது கோர்ஸ்களை முடித்து சீனியர் பாஸ்செய்து காலேஜில் சேரலாம். தமிழ் (or) இங்கிலீஷ் பிராஸ்பக்டசுக்கு 1-அணா ஸ்டாம்பு உடன் அனுப்பவும்.

டைரக்டர்,
அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்
இன்ஸ்டிடியூட், ஆறுமுகநேரி. S. I. R.

பார்ப்பானும், படித்தவனும், பணக்காரனும் பாமரமக்களின் பரம விரோதிகளேயாவார்கள்.

(ருஷிய ராணி—லெனின்.)

கொங்கு வேளாளர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

(கைவல்யம்)

கோயமுத்தூர் ஜில்லாவில் ஒரு கிராமத்தில் சுப்பண்ண கவுண்டர் தன்னுடைய கிணற்றில் தாழ்ந்த ஜாதிக்காரர்களைத் தண்ணீர் எடுக்க விட்டதைப் பல சபைகளில் புகழ்கின்றார்கள். அவர்செய்கைச்சத்தியத்திற்கும், நியாயத்திற்கும் புகழ்ச்சிக்கும் உரியதேயாகும். அதனால் அவருக்குவந்த சிறு துன்பங்கள் வருத்தப்படக்கூடியதாயிருக்கிறது. கோயமுத்தூர் ஜில்லாவும், மதுரை, திருச்சிறாப்பள்ளி, சேலம் ஜில்லாக்களின் சிலபகுதியும் சேர்ந்தது கொங்குநாடு பண்டைகாலத்தில் கொல்லிமலை, பழனிமலை, வெள்ளியமலை, பாலமலை என்னும் நான்கு மலையை எல்லையாகக்கொண்டு இருபத்திநான்கு நாடுகளாகக் கொங்குநாடு பிரிக்கப்பட்டிருந்தது. இந்த நாட்டில் பெருங் குடிமக்களாக வாழ்ந்து பல அதிகாரங்களை வகித்தவர்கள் கொங்குநாட்டு வேளாளர்கள். அதிக்கீர்த்திபெற்றபெருங்குடும்பங்களில் பழையகோட்டைப்பட்டக்காரர் குடும்பம் பெரும் புகழ் படைத்தது. அநேக வித்வான்களால் மதிக்கப்பட்டு பல புலவர்களால் பிரபந்தங்கள் கேட்டு அநேகம் பண்டிதர்களுக்கு வெகுமதியளித்தும் பெரும் உரை யாசிரியர்களைப் போஷித்தும் வந்தார்கள். தங்கள் சத்துருக்களையெல்லாம் ஜெயித்து ஆங்கிலேயர்களுக்கு உதவியும் செய்தார்கள். தங்கள் ஜாதிக்கு சமய ஆசாரங்களுக்கு ஆச்சாரியாகவும் விசாரணை கர்த்தாவாகவுமிருந்தார்கள்.

முன்னூற்றைம்பது வருடங்களுக்கு முன் வண்ணாஜாதியில் வீரபத்திரக் கவிராயரென்று பெரும் பண்டிதர் ஒருவரிருந்தார். அவர் ஒருசமயம் பழையகோட்டைக்கு வந்தார். வந்த வித்வானை அந்தக்காலத்திலிருந்த பட்டக்காரரான நல்லதம்பிச் சக்கரை மன்றாடியார் உபசரித்து கூடவைத் துணவருந்தி அந்த வித்வான்கேட்டுக் கொண்டபடி எச்சில்வாயை கழுவியும் விட்டார். அதைக்கண்ட வித்வான்சந்தோஷமடைந்து அந்தப்பழையகோட்டை பட்டக்காரர் பேரில் காதல் என்னும் பிரபந்தத்தைப் பாடினார். அது எட்டுப் பிரதியாகவே இருந்தது. அதை 1913 வருடம் சைவசமாஜ காரியதரிசி, தி. அ. முத்துசாமிக்கோனாரால் அச்சிடப்பட்டிருக்கிறது. அந்தக்காதலிலுள்ள ஒரு கண்ணியைக் கீழே எழுதுகிறேன். அதைப்பார்த்து உங்கள் முன்னோர்கள் தீண்டாமையை விட்டுவிட்டதினால் எவ்வளவு புகழ் அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுவீர்கள்.

பண்டு பறையனென்று பாராமல்
கூடவைத்தே, புண்டுபுகழ் படைத்த
உத்தமக்காமிண்டனெங்கோன்.

இது 46-ம் கண்ணியாகும். இந்த பிரபந்தம் அரங்கேற்றுகையில் இருபத்திநான்கு நாட்டுக் கவுண்டர்களும் பெரியதனக்காரர்களும், மற்ற பட்டக்காரர்களும் வந்திருக்கிறார்கள். அந்த காலத்திலேயே பழையகோட்டைப் பட்டக்காரருக்குக் காடையூர் பட்டக்காரர் சட்டகர், பதூர் பட்டக்காரர் மைத்துனர். இப்பொழுது சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரரும் மைத்துனரே, சேலம் ஜில்லாவிலுள்ள டாக்டர் சுப்பராயன் வகையறாக்களான சேலம் மிட்டாதாரர்களும் சிறிது தலைமுறைக்குமுன் சம்மந்திகளே ஆவார்கள்.

விஜயநகர ராஜியம் அழிந்துபோன பின் கொங்குநாடு மைசூர் ராஜியத்தின் கீழ்வந்துவிட்டது. கன்னடியர் ராஜியத்தில் சிறு நாட்டு அதிகாரிகளுக்குக் கொடுக்கும் பட்டங்களில் ஒன்று காமிண்டன் என்பது. அந்தப் பட்டமானது அந்தக்காலத்தில் பழையகோட்டைப் பட்டக்காரருக்கு மைசூர் ராஜாவால் கொடுக்கப்பட்டிருந்தது. அதையும் ஒரு கீர்த்தியாக அந்த வித்வான் பாடினார். ஆனதால் அந்தக்காலத்திலேயே தீண்டாமையைத்தள்ளுவது புகழும் கீர்த்தியுமென்று ஏற்பட்டது. அதிலும் கொங்கு நாட்டுப்பெரும் கீர்த்திபடைத்த பட்டக்காரர் தீண்டாமையை விட்டுவிடவும் அதை பெரும் புகழாக வித்வான் பாடவும் அதை இருபத்திநான்கு நாட்டுப் பெருங்குடிமக்களும் அவர்கள் சிப்பந்திகளும் ஆமோதித்து திருப்தியடையவும் ஏற்பட்ட கொங்குவேளாளர்களின் 96 கீர்த்திகளில் ஒன்றாகவும் சேர்ந்து விட்டது. மங்கிப் போன முன்னோர்களின் கீர்த்தியைக் கொண்டுவந்த சுப்பண்ணக் கவுண்டருக்கு கொங்குநாடு நன்றிபாராட்ட வேண்டும்.

இந்த சமயம் காங்கிரஸ் காரர்களுக்கும் ஒன்று சொல்லுகிறோம். உலகம் தோன்றியநாள் முதற்கொண்டு புரட்சிகள் தோன்றிக்கொண்டே வந்திருக்கின்றன. அந்தப் புரட்சிகள் எத்தன்மையுடையன வாயிருந்தாலும் உண்மை, சமத்துவம், ஒற்றுமை என்னும் பாதையில்தான் செல்லவேண்டும். அப்படியல்லாத எந்தக்கிளர்ச்சிகளும் ஜெயமடைந்ததில்லை. ஜனசமூகங்களுக்கு நன்மையை உண்டு பண்ணாது.

விருதுநகர் விருந்து.

விருதுநகர் காஸ்மாபாலிட்டன் கிளப்பில் 6-7-31 தேதி பகலில் திருவாளர்கள். கந்த நாடார் பி. ஏ. பி. எல். அவர்களுக்கும், வி.வி.இராமசாமி அவர்களுக்கும் முறையேகல்விச் சங்கத்திலும், தேவஸ்தானக் கமிட்டியிலும் மெம்பரானதற்கு அவர்களது சிநேகிதர்களால் ஒரு நல்ல விருந்து நடத்தப்பட்டது. அதில் சைவம், வைணவம் என்கின்ற இரண்டுவித சாப்பாடும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. விருந்துக்குச் சுமார் 200 பிரபல கனவான்களை அழைக்கப்பட்டிருந்தார்கள். விருந்து நடந்தவுடன் திரு. ஈ. வெ. இராமசாமி அக்கிராசனத்தில் விருந்தாளிகளைப் பாராட்டி சிலர் பேசி விருந்தாளிகளும் பதிலுரைத்தவுடன் தலைவர் முடிவுரைகூறி மாலையிடப் பட்டபின் கூட்டம் முடிவுக்கு வந்தது.

திரு. ஈ. வெ. இராமசாமி பேசியதாவது.

கனவான்களே!

திரு. வி. வி. இராமசாமி அவர்கள் சுயமரியாதைக்காரர்கள் தேவஸ்தானக் கமிட்டிக்குப் போகலாமா எனக்கேட்பது ஒரு நல்ல கேள்வியேயாகும்.

நான் சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டு 4, 5 வருஷம் தேவஸ்தானக் கமிட்டியில் பிரசிடெண்டாகவும், வைஸ் பிரசிடெண்டாகவும் இருந்தேன். தேவஸ்தான செல்வங்களை பொதுநலத்திற்குப் பயன்படும்படி செய்யக்கூடுமானால் அது நல்ல வேலைதான். அங்குபோக வேண்டியதும் அவசியந்தான் என்று கருதியே அங்கு இருந்தேன். இந்த எண்ணத்தினமீதே தேவஸ்தான சட்டத்தையும் ஆதரித்தேன். ஆனால் அவை சரியான பலனைக் கொடுக்கவில்லை.

ஆகவே நான் இராஜிநாமாச் செய்தேன். எனது சகபாடிகள் எனது இராஜிநாமாவை ஒப்பாமல் எனது அபிப்பிராயத்தை ஆதரிப்பதாயும் ஆனால் பொது ஜனங்கள் அபிப்பிராயம் விரோதமென்றும் சொன்னார்கள். ஆனாலும் நான் வேறு வேலையில் இந்த கவனம் செலுத்தலாம் என்று ஒதுங்கிக் கொண்டேன். தகுந்த சகபாடிகள் இருந்தால் அதை நல்வழிப்படுத்தலாம் என்பதும் ஒரு அளவுக்கு உண்மைதான். இராமநாதபுரம் தேவஸ்தானக் கமிட்டி பிரசிடெண்ட் திரு. இராமச்சந்திரன் அவர்கள் நல்ல முயற்சிகள் எடுத்து இருக்கிறார். அது கைகூடுவதற்கு நமது இராமசாமி போன்றவர்கள் உதவி மிக நல்லதாகும். வெறும் சாமி பூஜைகளையும், உற்சவங்களையும் நடத்திக் கொடுப்பதற்குச் சுயமரியாதைக்காரர் அங்கு போவது அவசியமற்ற காரியமாகும்.

ஆதலால் கோவில்களின் பேரால் இருக்கும் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கவும் கோவில்களின் பேராலுள்ள செல்வங்களெல்லாம் மக்கள் நலத்திற்கு உதவவும் வேலை செய்யவேண்டியது முக்கிய அவசியமாகும். அந்த பணங்களில் நமக்குச் சம்பந்தமில்லை என்று நாம் சும்மா இருந்துவிட்டால் அவர்களுக்கு நன்மையேயொழிய நட்டம் ஒன்றும் இல்லை.

ஆகையால் இந்தவித அபிப்பிராயமுள்ள திரு. இராமசாமியைத் தெரிந்தெடுத்தவர்களும் இதே அபிப்பிராயத்தோடுதான் தெரிந்தெடுத்திருப்பார்கள். ஏனென்றால் திரு. வி. வி. இராமசாமி அபிப்பிராயம் யாரும் தெரிந்ததேயாகும். ஆதலால் அப்படிப்பட்டவர்களின் விருப்பத்திற்கு இணங்கிய திரு. இராமசாமி தனது கடமையைச் செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

இதுபோலவே கல்வி இலாகாவுக்கும் திரு. கந்தநாடார் பி. ஏ, பி. எல். அவர்களைத் தெரிந்தெடுக்கப்பட்டது நமக்கு இலாபமேயாகும். கல்வி இலாகா பார்ப்பனீயமயமாய் இருக்கின்றது. கல்வி வருணாச்சிரமக் கல்வியாய் இருக்கின்றது. பாடப் புத்தகங்கள் புராணப் புத்தகங்களாக இருக்கின்றது. இத்துறையில் புகுந்து அவற்றைப் பகுத்தறிவுக்குப் பயன்படும்படி செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும்.

இன்று இந்தியாவின் இழி நிலைமைக்கு மதமும், கல்வியுமேயாகும். பழயகால கல்வியை சங்கத்தின் மூலம் அடக்கி வைத்து பார்ப்பனீயத்திற்கு எதிரான எதற்கும் இடம் இல்லாமல் செய்துவிட்டார்கள். புஸ்த

“தீண்டாமை போகவேண்டும், இல்லையேல் நாம் சுயராஜியத்திற்கு அருகதையுடையவர்களாக மாட்டோம்” என்று மகாத்மா சொன்னது எல்லாருக்கும் தெரியும். அப்படியிருக்க சுயராஜியம் வந்தால் தீண்டாமை போய்விடுமென்று சொல்லுவதில் நியாயம், உண்மையிருக்கிறதா? தீண்டாமையைப்பற்றி நீங்கள் மகாத்மா காந்திக்குச்சொல்லுகிறீர்களா? தீண்டப்படாதார்களுக்குச் சொல்லுகிறீர்களா? குரு சொன்ன வார்த்தையை நமது நாட்டில் கேட்பதில்லை. பார்ப்பானே எல்லாவற்றிற்கும் குருவாயிருக்கையில் பார்ப்பனனுக்கும் குரு உண்டோ? தெய்வத்தைக்காட்டி மனிதனை ஏமாற்றுவதுபோல குருவைக்காட்டி மற்றவர்களைத் தங்களுக்கு வசப்படுத்திக்கொள்ள வழிகண்டுபிடிக்கும் வாழ்க்கையைக் கொண்ட பார்ப்பனன் குருவார்த்தையைக்கேட்பதாயிருந்தால் சங்கராச்சாரியின்வார்த்தையையும் குருவின் ஜாதி வழக்கத்தையும் கூரத்தாழ்வார் பட்டர் முதலிய ஆச்சாரிகளின் வார்த்தைகளையும் பார்ப்பனர்கள் தள்ளி சாரதாசட்டத்தை ஒழிக்க வழிகள் தேடுவார்களா? சோடாகுடிப்பதற்கும், சுத்தத்தண்ணீர் குடிப்பதற்குமுள்ள வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளாத நாம் சுத்த சுயராஜியத்திற்கு அருகதையுடையவர்களென்று சொல்லிக் கொள்ளுகிறோம்.

கங்களை அறங்கேற்றுவது என்பதே கட்டுப்பாடுபாகும்என்பதுதான் அருத்தம். இப்போதையயூனிவர்சிட்டி என்பது அக்கால சங்கமாகவும், அறங்கேற்றுவது டெக்ஸ்ட்புக் கமிட்டியில் பாசாகவேண்டியதாகவுமே இருக்கின்றது.

அந்தக் கமிட்டியில் மதம் இல்லாதவர்களும், கடவுள் பைத்தியம் இல்லாதவர்களுமான பகுத்தறிவாளர்கள் இருக்கவேண்டும். நமது யூனிவர்சிட்டிப் படிப்பு மூடநம்பிக்கையைப் பலப்படுத்துவதாகும். இதிலிருந்து யாரும் அறிவு பெற்றுவிட முடியாது. வேண்டுமானால் கிராமபோன் ஆகலாம். ஆதலால் அத்துறைகளில் சுயமரியாதைக்காரர்கள் புகுந்து முதலாவது உபாத்தியாயர்களை வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவப்படி நியமிக்க வேண்டும். உபாத்தியாயர்களுக்கு நல்ல படிப்பு கொடுக்கவேண்டும். அறிவுக்கு ஆதாரமான புஸ்தகங்கள் பிள்ளைகளுக்குக் கொடுபடவேண்டும். இது முதலிய காரியங்கள் கல்வித்துறையில் செய்ய வேண்டியிருப்பதால் அதற்கேற்றவர்கள் போக நேருவது நன்மையேயாகும்.

ஆதலால் நீங்கள் இந்தக் கருத்தின் மீதே தெரிந்தெடுத்துப் போற்றுகின்றீர்கள் என்று நினைக்கின்றேன் என்று பேசினார்.

திரு. வீ. வி. இராமசாமி அவர்கள் தேவஸ்தானக் கமிட்டிக்குத் தான் போக ஆசைப்படவில்லை என்றும், பல நண்பர்கள் சேர்ந்து நமது இயக்கத்திற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கவேண்டியது கடமையென்றும் சொன்னதால் ஒப்புக்கொண்டேன் என்றும், அது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது இனித்தான் உணரவேண்டுமென்றும், ஆனாலும் நமது இயக்கத்திற்கு ஆகும் சமயம் நேர்ந்தபோதெல்லாம் கூடிய வரை பாடுபட தவறமாட்டேன் என்றும் சொன்னார்.

பிறகு திரு. கந்த நாடார் அவர்களும் கல்வி இலாகாவில் செய்ய வேண்டிய விஷயங்களைப்பற்றித் தலைவர் சொன்னவைகள் எல்லாம் எடுகேஷனல் கவுன்சிலில் செய்ய முடியுமோ என்பது சந்தேகம் என்றும், ஆனாலும் கூடியதை யெல்லாம் செய்யத் தயாராயிருப்பதாகவும், இம்மாதிரி விருந்துகளில் அநேக விஷயங்கள் விளங்குவதுடன் ஒற்றுமைக்கும் உற்சாகத்திற்கும் இடமேற்படுகின்றதென்றும் சொன்னார்.

பிறகு திருவாளர் முத்துசங்கர நாடாரவர்களைப் பாராட்டி அவர் இதுபோலவே உள்ளூர் எலக்ஷன் காரியங்கள் வரும்போது அதற்குத் தகுந்த கனவான்களைப் பிடித்துப் போட்டியில்லாமல் தேர்தல்களை நடத்தி மக்களை உற்சாகப்படுத்தி ஊரையும் ஒற்றுமைப்படுத்தி வைக்கும் விஷயத்தில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் உபன்யாசகர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பிறகுமாலையிட்டுச்சந்தனம்,பன்னீர், வெற்றிலைபாக்கு வழங்கப்பட்டது.

இன்னுமா வைதீகப்பித்து!

கும்பகோணம் N. இராம இரநதினம் ஐயர்.

கும்பகோணத்தில் சமீபத்தில் நடந்த தஞ்சைஜில்லா பிராமணர்கள் மகாநாட்டில் நிறைவேறியுள்ள தீர்மானங்களை சமதர்மஉணர்ச்சியுடைய எவனும் பொறுக்க முடியாது. தேசமே ஒரு முகப்பட்டு, கண்விழித்தெழுந்து, சமூக சீர்திருத்தத்திற்காக ஓலமிடும் இக்காலத்தில், சமூகத்திலேயே சிறுபான்மையோரான பிராமணர்கள் எப்பொழுதும் போலவே பாமரமக்களை அடிமைக்குழியிலேயே கிடத்திவைக்கவேண்டுமென முயற்சிப்பது பெரிதும் வருந்தத்தக்க விஷயமாகும்.

பண்டைக்காலம் முதலாய் 'தீண்டாதார்' என ஒதுக்கிவைத்ததின் காரணத்தை முன்னிட்டு அவர்களை சாசுவதமாய் அதே நிலையில்தான் வைத்திருக்க வேண்டுமென்ற நியதி ஏதேனும் இருக்கின்றதா? தீண்டாதார் என ஒதுக்கிவைத்ததும், மேல் வகுப்பார் என ஒதுக்கிவைத்துக் கொண்டதும், நாமாகச்செய்து கொண்ட காரியமேயொழிய இயற்கையமைப்பல்ல.

பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ரரென்று பிரிக்கப்பட்ட ஒவ்வொரு வகுப்பாரும், ஒவ்வொரு தொழிலைச் செய்ய வேண்டுமென விதித்தனர். இம்மாதிரி நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டதின் காரணத்தைக் கொஞ்சம் விசாலமான நோக்கத்துடன் பரிசீலனை செய்தால் விஷயம் புலப்படும்.

உலகத்தில் எல்லாவிதத் தொழில்களும் செவ்வனே நடைபெறுவதற்காக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழில் அளிக்கப்பட்டது. பலஹீனமுள்ளவர்களும், திரேகவலிமையற்றவர்களுமான பிராமணர்களுக்கு, வித்தைகற்றுக்கொடுக்கும் தொழில் அளிக்கப்பட்டது. குரு என்ற முறைமையில் ஏனையவகுப்போர் இவர்களுக்கு மரியாதை செலுத்தி வந்தனர். மேலும் ஒருவன் எளியவனாயிருந்தால் பலம் பொருந்திய மற்றொருவன் அவ்வெளியவனுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியது உலக முறையாகும். அவன் எளியவனாயிருக்கிறான் என்பதற்காக அவனுக்கு சாஸ்தியான சலுகையும் காட்டப்படுகிறது. அவன் எது செய்தாலும், 'பாபம்! ஏதோ செய்துவிட்டான். அதோவிட்டுவிடு. அவன் நமக்கு ஒரு ஈடா?'' என்று சொல்லி சலுகைகாட்டுகிறோம். இதன் பயனாக அவனுக்கு தைரியம் சாஸ்தியாகி தான் செய்வதை வழக்கமாகக் கொள்கிறான். நாளடைவில் இந்த வழக்கத்தை ஓர் உரிமையாகவும் கொண்டாடத்தலைப்படுகிறான். இதே மாதிரி எளியவர்களும் அன்றாடம் உணவைப்பிச்சை எடுத்துச்சாப்பிட வேண்டியவர்களுமான பிராமணர்களுக்கு ஏனையவகுப்பார் கொடுத்துக்கொண்டிருந்த சலுகையின் பயனாக இப்பொழுது அவர்கள் 'நாங்கள் பிரம்மாவின் சிரசிலிருந்து வெடித்து வந்தவர்கள். ஆகையால் நாங்கள் உங்களெல்லோரையும் விட உயர்ந்தவர்கள்' என்று மார்தட்டுகின்றனர். இவ்வுணர்ச்சிக்கு காரணம் யாது?

நம்முடைய மனைவிமார்கள் காலையிலெழுந்து சாணம் கரைத்து வீடு மெழுகி சுத்தம் செய்வதாலும், குழந்தைகளுடைய மலஜலாதிகளில் உழன்றுகொண்டிருப்பதாலும், அவர்களை நம்முடைய பந்தியில் சேர்த்துச் சாப்பிடாமல் 'நீதோட்டி' என்று சொல்லியா தள்ளிவிடுகிறோம்?

அதேமாதிரி தீண்டாதார் என்று சொல்லப்படும் ஆதிதிராவிடர்களும், வயல் வெளிகளில் தத்தம் வேலை முடிந்தவுடன், எல்லாம்வல்ல இறைவனால் பேதாபேதமின்றி சிருஷ்டிக்கப்பட்டவர்களும், நம்மினத்தவர்களுமான மனிதவர்க்கத்தினிடையே பழகுவதற்கு உரிமை இல்லையா? இது என்ன அநீதி?

உண்மையான இந்தியன் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவனுக்கும், நமது ஆதிதிராவிட சகோதரர் நசுக்கப்படும் மாதிரியைப்பார்த்து இரத்தம் கொதிக்கவில்லையா?

சிறக ஆதிதிராவிடர்கள் கோவில்களுக்கு வரக்கூடாதென்றும், வேண்டுமாயின் அவர்கள் தனியாகத் கோவில்கள் கட்டிக்கொள்ளட்டுமென்றும் கூசாது தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனரே? அந்த ஓலையை அவர்களே திருப்பி வாசித்துக் கொள்ளக்கூடாதா? பிராமணர்களுக்கு, அதுவும் தஞ்சை ஜில்லா பிராமணர்களுக்கு ஏராளமான செல்வமும், மதத்தின் போர்வை பொது ஜனங்களை ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் மடாதிபதிகளின் தயவும், ஆதரவும் இருக்கிறது. இவர்கள் சிருஷ்டித்துக்கொள்ளலாம். அந்தக் கோவில்களின் சொத்தை தாராளமாய் சாப்பிடலாம். ஆனால் பாவம்! உங்களைப் போல் ஆதிதிராவிடர்கள் பணத்துக்கும், காசுக்கும் எங்கே போவார்கள்? ஆகையால் பிராமண சபையார் மிகவும் பெரிய மனது பண்ணி தங்கள் கோவில்களை ஆதிதிராவிடர்களின் உபயோகத்துக்கு விட்டுவிட்டு, தங்களுக்கு வேண்டுமாயின் வேறுகோவில்கள் கட்டிக்கொள்ளட்டும்.

கும்பகோணம் சநாதனதர்மிகளுடையவும், வைதீகயோகிகளுடையவுமான யோக்கியதை உலகமறிந்து கிடக்க, இவர்கள் ஏன் பாபம்! வீணில்பிதற்ற வேண்டும்? ஆகையால் வைதீகர்களே! உங்களுடைய காலம் குறுகிவிட்டது! உங்களுடைய வைதீக "மடிசஞ்சி"களை சீல் செய்து 'கட்டுப்பெட்டி' யில் போட்டுப் பூட்டிவிடுங்கள். உங்கள் சாயம் வெளுத்துவிட்டது. பழைய ஜம்பம்சாயாது.

பருத்தித்துறையும் தேவதாசி நடனமும்.

கொளும்பு-சதாசிவம்.

பரமாஸ்திகப்பூடிகளாய் விளங்கும் நம்மியாழ்ப்பாணவாசிகள் தம்முன் நெடுங்காலமாயநுஷ்டானத்திலிருந்த தாய்ச் சாஸ்திரங்களிற் கூறப்பட்ட தாய்க்கொள்ளும் தேவதாசி நடனத்தையோரிருகோவில்களில் முற்றாய் நீக்கி விட்டனர்.

இவத்தைக் கண்ணுற்றுச் சென்றவாண்டு பருத்தித்துறையும் தன்னகத்தேயுள்ள சிவன்கோவில், பொலிகண்டிக்கந்தவனமாதியனவற்றின் திருவிழாக்களிலிருந்து தேவதாசி நடனத்தைத்தடுத்துவிட்டது. இதனால் தேவதா பக்தியின் நித்தேவதாசிகளிலன்பு பூண்டோர் மேற்படி கோவில்களையணுடாது விட்டனர். விடவே திருவிழாக்களில் வாகனம், தீவர்த்தியாதியனவேந்துவாரின்றியுந் திருவிழாநடத்துவார்தானுமின்றியும் மிக வருந்தினர். வாகனந்தூக்குவதற்கு வீடுவீடாய்ச்சென்று கூலிக்காரரைப் பிடித்துவந்து திருவிழாக்களை நடப்பித்தனரென்றால் நம்மவர் தேவதாசிகளிற்கொண்டபற்று எத்துணை மகாத்மியம்பொருந்தியதென்பது தானே விளங்கும்! ஆலயவீதிகள் தோறுந் தேங்கிவழிந்த சனத்திரளிதனால் மனமடிவுகொண்டு கோவிலையே நினையாதுவிட்டனர். கோவில் அதிகாரிகளுந்தங்கள் வருவாயில் மண் விழுந்ததேயென வேங்கினர்.

மேற்படி கோவில்கள் நடனம் தடை பட்டதால் தொண்டர்களின் கடவுள்பக்தியும் குறைவதாயிற்று. வாலிபரின் பரிகாசங்களும், காமவிகாரங்களுஞ்செல்ல வழியில்லாது திகைத்தன.

இதனாலிவ்வாண்டு கோவிற்றருமகர்த்தாக்கள் சட்டாயமாய்த்தாசி நடனத்துக்குச் சம்மதிக்கவேண்டியவர்களானார்கள். சென்ற சிலநாட்களின்முன் முழுமுதற்கடவுளாய்க் கொள்ளும் சிவன்கோவிலில் நடந்த ஒவ்வொரு திருவிழாவும் பழையபடியே தாசி நடனத்தோடு கூடியனவாயிருந்தன. சந்நவனமுமிவ்விதமே வருந்திருவிழாக்களில் தேவதாசி நடனஞ்செய்ய அநுமதிக்கப்பட்டிருப்பதாயறிகின்றேன்.

காமலீலைகள் புரிந்துதிரிந்த கடவுளுக்கு அவர்பக்தர் காமச்சேட்டைகளைப் புரிவிப்பதைக்காண்பதே மிகப்பெரிய வழிபாடாகும். ஈசனெப்படியோ தாசனப்படியாம்.

ஆகவே நமது பாழ்பட்ட காமத்தின்புறஞ்சமய வாதிகளையுங் கடவுளையுங்கொண்ட சைவசமயமிருக்கும்வரைக்கு மிந்தியாவுக்கு மதனோடு சேர்ந்த நமக்கும் மிகவிகழ்ச்சியேயன்றி மீட்சியில்லை யென்பது வாஸ்தவம்.

(தொடரும்)

22. திடபதார்த்தமே எதற்கும் மூலகாரணம்.

உலகத்திலுள்ள சகல விஷயங்களும் ஒரு திடபதார்த்தத்திலிருந்தே உண்டாகியிருக்கவேண்டுமென்பதே உண்மையும் இயற்கையுமாகும். ஏனெனில் திடபதார்த்தமானது நமது பஞ்சேந்திரியங்களால் உணர்ந்து ருசுப்படுத்தக்கூடியது. அதன் பலன்களை நாம் ஒவ்வொரு நிமிஷமும் உணர முடிகிறது. ஆகவேஇதை விட்டு விட்டு, உலகத்திலுள்ள சகல வஸ்துக்களையும் உண்டாக்கியது அறியமுடியாத ஒரு சக்தியென்றும், ஒரு ஆத்மா என்றும் சொல்வது எவ்வளவு அபத்தமென்பது புலப்படவில்லையா? ஏனெனில், அஸ்திவாரமில்லாத ஒன்று உருவம், குணம் இல்லாத ஒன்று ஆத்மா, அதாவது சூன்யம் என்று சொல்லப்படும் ஒன்று—எதையாவது சிருஷ்டிக்கவோ, அசைக்கவோ முடியுமா வென்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே பரிசிக்க முடியாத ஒரு சூன்யமானது எதையும் சாதிக்க முடியாது என்பது விளங்கவில்லையா?

23. தற்காலம் மதங்கள் சொல்லும் கடவுள் என்பது என்ன?

நமது முன்னோர்கள் சிருஷ்டித்த கடவுள்களாவது ஆக்கவும், அழிக்கவும் இன்னும் பிறகாரியங்களைச் செய்யக்கூடியனவாகவும் இருந்தன! ஆனால் தற்கால மதங்களால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் கடவுள்களோ பலஹீனமும், பேடித்தனமும் கொண்டவைகளாகவே இருக்கின்றன. கடவுளைப்பற்றிக் கூறியிருப்பதை கொண்டு பார்க்கப்போனால்-இக் கடவுளால் ஒரு இடத்தில் இருக்கமுடியாது; ஒரு வஸ்துவை அசைக்கமுடியாது; ஒரு உலகத்தை—அதாவது கண்ணால் பார்க்கக்கூடிய உலகத்தை—சிருஷ்டிக்கவும்முடியாது; மனிதர்களையோ, குட்டித் தெய்வங்களையோ, மகாத்மாக்களையோ, ரிஷிகளையோ, தேவர்களையோ உண்டாக்கவும் முடியாது. ஆகவே இந்த மனோதத்துவக் கடவுளானது இரண்டு கைகளுமில்லாத ஒரு தொழிலாளியைப்போன்றதே யாகும். அதனால் தான் இந்தக்கடவுளால் சிருஷ்டிக்கப்படுவதெல்லாம் சந்தேகங்களும், அபத்தங்களும், மயக்கங்களும், முட்டாள் தனங்களும், சண்டைகளும், புரட்டுகளும், அர்த்தமற்ற ஆபாசங்களுமாகவே இருக்கின்றன.

பகுத்தறிவு (அல்லது) கத்தோலிக்க குரு, "ஜீன்மெஸ்லியரின்" மரணஸாசனம்.

(மொழிபெயர்ப்பாளர் S. குருசாமி B. A.)

கட்டுரை 6.

காப்பிரைட்.

முன் தொடர்ச்சி.

24. சூரியவணக்கத்திலாகிலும் சிறிது அர்த்தமுண்டு.

மனிதனுக்குக் கடவுள் என்ற ஒன்று வேண்டியது அவசியமாயிருந்திருந்தால், கண்ணுக்குத் தெரியும் கடவுளும் எல்லா ஜனங்களாலும் பூஜிக்கப்படுவதுமாகிய சூரியனை ஏன் கடவுளாக வைத்துக்கொள்ளவில்லை? உலகத்திற்கே வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு வஸ்துவைவிட மனிதசமூகத்திற்கு நன்மை செய்வது ஏதாவதிருக்கிறதா? எல்லா ஜீவன்களுக்கும் உயிர்கொடுப்பது அந்தச் சூரியனல்லவா? இயற்கையை உயிர்ப்பித்து அழகுபடுத்துவது சூரியனல்லவா? சூரியன் மறைந்ததும் இயற்கையே மறைந்து அதன் அழகே குன்றிவிட வில்லையா? எனவே மனித சமூகத்திற்கு சக்தியையும், பெருமையையும், சுறுசுறுப்பையும், பெரிய எண்ணங்களையும் கொடுத்துதவுகின்ற சூரியனையல்லவா இயற்கைக்கெல்லாம் மூலகாரணமாய்க் கொள்ளவேண்டும்? அதையல்லவா, உலகத்தின் உயிர்நாயகனாகக் கொள்ளவேண்டும்? ஆகவே, அதையல்லவா கடவுளாகக்கொள்ள வேண்டும்? இப்படிச் சொல்வதில் சிலர் சிரிக்கலாம். இதில் ஒன்றும் அதிக மௌடீகத்தன்மையில்லை. ஏனெனில், இந்தக் கடவுள் இருப்பதையாவது நாம் கண்ணால் பார்க்கிறோம். அதன் பலனையாவது நாம் அநுபவிக்கிறோம். உணர்கிறோம். ஆனால்,—

25. நீங்கள் சொல்லும் ஆன்மாவான கடவுளோ?

மதப்பற்றுடையவர்கள் கடவுளைப்பற்றிச் சொல்வதென்ன? கடவுளானவர் கை, கால் இல்லாமலே எதையும் செய்யக்கூடியவராம்! அவர், தன் மனோசக்தியின் படியே எதையும் செய்து முடித்து விடுகிறாராம்! அப்படியானால் நான் ஒன்று கேட்கிறேன்.

இந்த 'மனோசக்தி' என்பதையுடையதாகச் சொல்லப்படும் இக்கடவுள் என்பது என்ன? அந்த 'மனோசக்தி' தான் எதைப் பற்றியதாக இருக்கக்கூடும்? யோசித்துச் சொல்லுங்கள். நாம் பிசாசுகளிலும், மோகினிகளிலும், கந்தர்வர்களிலும், கொள்ளிவாய்ப் பிசாசுகளிலும், தேவர்களிலும், ராக்ஷதர்களிலும் நம்புவதற்கும் இத்தகைய ஒரு ஆத்மாவான கடவுளுக்கும் ஒரு வஸ்துவுக்கும் சம்பந்தமிருப்பதாக நம்பும் அறிவீனத்திற்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா என்பதை எண்ணிப்பாருங்கள். அபத்தத்தில் இரண்டும் ஒன்றுதான். ஆகவே, எப்பொழுது இத்தகைய ஒரு அர்த்தமற்ற கடவுளை ஒப்புக்கொள்ள ஆரம்பித்து விடுகிறோமோ, அந்த நிமிஷத்திலிருந்தே, அதுசம்பந்தமான கட்டுக்கதைகளிலும், பொய்மூட்டைகளிலும், புராணப்புரட்டுகளிலும் கற்பனைக் களஞ்சியங்களிலும் நம்ப ஆரம்பித்து விடுகிறோம். மதக்காரர்கள் என்பவர்கள் பாமரமக்களைக் குழந்தையை நடத்துவது போல் நடத்துகிறார்கள். எப்படிக் குழந்தைகள் தாங்கள் கேட்கும் கதைகளைப் பற்றி சந்தேகப்படாமலிருக்கும்படி செய்கின்றோமோ, அதைப் போலவே தான் மதக்காரர்களும் பாமரமக்களிடத்தில் நடந்து கொள்ளுகிறார்கள். (குழந்தையிடத்தில் 'பூச்சாண்டி' என்கிறோம். மதக்காரர்கள் 'கடவுள்' என்கிறார்கள்.)

26. கடவுள் என்றால் என்ன?

கடவுள் என்ற ஒன்று இருப்பதாகச் சொல்வதை மறுக்கவேண்டுமென்றால், செய்யவேண்டிய காரியம் ஒன்றுதான். மதக்காரனைக்கூப்பிட்டு, "நீ சொல்லும் கடவுளை சற்று வர்ணி; பார்க்கலாம்" என்று சொன்னால் போதும். அவன் முதல வார்த்தை சொல்ல ஆரம்பித்தவுடனேயே, அவன் சொல்லும் வார்த்தைக்கும் கடவுள் என்பதன் கருத்துக்கும் முற்றிலும் முரண்பாடாக இருப்பதைக் கண்டுகொள்ளலாம். ஆகவே, மறுபடியும் கேட்கிறேன். இந்தக்கடவுள் என்பது என்ன? சொல்லுங்கள். நம்மால் அறிய முடியாத இயற்கைத் தத்துவங்களைக் குறிப்பிடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அர்த்தமற்ற வார்த்தையே யாகும். அல்லது, நீளம், அகலம், கனம் இல்லாத கணிதசம்பந்தமான ஒருபுள்ளியோ என்னவோ? இதனால் தான் டேவிட் ஹ்யூம் என்ற தத்துவஞானி, மதக்காரர்களைப் பற்றிச் சொல்லும்போது பின்வருமாறு வெகு வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறார்:—

"ஆர்கிமெடீஸ் என்பவர் (ஒரு பிரபல விஞ்ஞான சாஸ்திரி) உலகத்தை அசைக்கக்கூடிய ஒரு புள்ளி எது என்று நீண்டகாலம் ஆராய்ச்சிசெய்து கொண்டிருந்தார். நமது மதஸ்தர்கள் அது தான் 'கடவுள்' என்று கண்டுபிடித்து விட்டார்கள்! (எவ்வளவு சிரமமான ஆராய்ச்சி பாருங்கள்!)"

27. மதத்திலிருக்கும் முரண்பாடுகள்.

உயிர், உடல், உருவம் இல்லாத ஒன்று; ஆனால் அளவிட முடியாமல் எங்கும் நிறைந்த ஒன்று; சர்வவல்லமையான ஒன்று; ஆனால் தான் விரும்புவதைச் செய்யச் சக்தியில்லாத ஒன்று; ஜீவகாருண்யமே உருவான ஒன்று; ஆனால் வருத்தத்தையே எல்லோர்க்கும் கொடுத்திருக்கும் ஒன்று; சமாதானத்தையே கோரும் ஒன்று; ஆனால் தன் ஆட்சியிலுள்ள எல்லாவற்றையும் குழப்பத்திலேயே வைத்திருக்கும் ஒன்று;—இத்தகைய ஒன்று இருப்பதாகவும் அதற்குமுன் மண்டி போட்டு வணங்கவேண்டுமென்றும், எல்லா மதங்களும் சொல்லுகின்றன. ஆகவே இவ்வளவையும் தெரிந்த நாம் இந்த மதங்கள் சொல்லும் கடவுள் என்பது என்னவென்பதை இனி விபரமாய் ஆராய்வோம்.

(தொடரும்)

சித்தோடு.

சீர்திருத்த சங்கம் திறப்புவிழா:—

இவ்வூர் வாலிபர்களின் முயற்சியால் சீர்திருத்த சங்கமொன்று 5-7-31 மாலை 6 மணிக்கு டாக்டர் எம். கிருஷ்ணசாமி L.M.P. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அது சமயம் பல அன்பர்கள் அரிய சொற்பொழிவுகளாற்றினர்களென ஒருநிருபர் எழுதுகிறார்.

மதங்கள் சம்பந்தமாகச் சொல்லுமிடத்து எல்லா மதங்களும் ஏறக்குறைய ஒரே யோக்கியதையையுடையன வென்பது உண்மையே. ஆனால் நாகரீகத்திலும் அறிவுவளர்ச்சியிலும் மாத்திரம் காலத்திற்குக்காலம் வேறுபடுகிறதென்பதை யாரும் மறுக்கமுடியாது. நாகரீகம் என்பது உலகத்திற்கே பொது என்றும் மனித சமூகத்திற்கு அது ஒரு பொதுவான ஆஸ்தியென்றும் கொள்வதை விடுத்து தற்காலத்தில் இந்தியத்தலைவர்களும் பிறரும் ஐரோப்பிய நாகரீகம், இந்திய நாகரீகம் என்ற வேற்றுமையைக்கிளப்பிவிட்டு, ஐரோப்பாசம்பந்தமான எதையும் வெறுத்தும், இந்தியாவிற்கு வேண்டியது ராமராஜியத்தைத்தவிர வேறு எதையும் பொறுத்துக் கொள்ள முடியாது என்றும், அடிக்கடி சொல்லி வருவதோடு அதிலேயே தங்கள் முயற்சியையும் செலவழிக்கிறார்கள். இந்த 'ராமராஜிய' கர்த்தாக்களின் அபிப்பிராயப்படி ராஜாங்கம், சமூகம் ஆகிய, இரண்டும் நூதனமான அர்த்தங்களைக்கொண்டதாக இருக்கின்றன. எப்படியெனில் ஜன சமூகத்தில் அரசாட்சி செய்ய வேண்டியவர்கள் பலபிறப்புக்கள் எடுத்த அவதார புருஷர்களாகத்தான் இருக்கவேண்டும். இந்தப்பிறப்பு வளர்ச்சியானது வர்ணம், ஆசிரமம், ஆகிய இரண்டினாலும் கட்டுப்படுத்தப்பட்டு சிறுகச்சிறுக அநேக பிறப்புக்கள் எடுத்த பின்பே ஒரு உன்னதபதவியையடைய வேண்டுமென்கிற கருத்தைக் கொண்டதாயிருக்கிறது. காந்தியார் சொல்லும் இந்த வருணாச்சிரமப்படி உலகத்தில் பெரும்பாலான பாமர மக்கள், தங்களுடைய சுய அறிவினாலும் அநுபவத்தினாலும் எந்தப்பதவியையும் அடைய முடியாது என்பதும், நால்வகைப் பிறப்பையும் அநுசரித்துத்தான் எவனுடைய யோக்கியதையும் நிச்சயிக்கப்படுமென்பதும் ஏற்படுகிறது. இன்னும் பெரும்பாலான மக்கள் பிழைகள் செய்யக் கூடியவர்களென்றும் அவர்களைத் தண்டிப்பதற்காக சட்டங்களை ஏற்படுத்தவும் அவைகளைப்பிரயோகிக்கவும் ஒரு அதிகாரவர்க்கம் தேவை என்பதுமாகிய உலக உண்மையை இந்த வருணாச்சிரம ஒப்புக்கொள்ளவில்லை.

இந்தக்கொடுமையான வருணாச்சிரமத்தைத் தற்காலம் பரவச் செய்யும் பழியானது திரு. காந்தியையே சேரும். ஆனால் இந்தியாவானது 1000 வருஷங்களாய் இஸ்லாம் மதத்தோடு சம்பந்தப்பட்டும், 350 வருஷமாய் ஐரோப்பிய நாகரீகத்தோடு சம்பந்தப்பட்டும், தற்கால மேல்நாட்டுக் கல்வியைப்பயின்றபிறகுங் கூட காந்தியின் வருணாச்சிரமப் பிரசாரத்திற்குச் செவிசாய்க்கிறதேயென்றால், அதற்குக்காரணம் இந்தியாவானது இன்னும் புராதன ஹிந்து மதத்தையே கட்டியழுது கொண்டிருப்பதால்தான். இதே காரணத்தினால்தான் 'இந்துக்கள்' என்பவர்களுக்குப்பிற விஷயங்களிலுள்ள நன்மைகள் புலப்படுவதே கிடையாது. இந்தப்புராதனப்பைத்தியத்தின் காரணத்தினால்தான், இந்தியாவானது தன் இராஜியத்தை இழந்து தனது கொள்கைக்கு முற்றிலும் மாறுபாடான கொள்கைகளையுடைய இஸ்லாம், கிறிஸ்து முதலிய அரசர்களுக்கு அடிமையாகும்படி நேரிட்டது. இந்தியாவின் அரசியல் அடிமைத்தனத்திற்கு இந்து மதமேதான் காரணம் என்றும் அரசுபுரியும் தன்மை கிறிஸ்துவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கிடைத்ததும் அவரவர்களுடைய மதத்தினாலதான் என்றும் சொல்வது சற்று பிழையாகத்தோற்றலாம். ஆனால் சென்ற 500 வருஷங்களின் உலக சரித்திரத்தைப்படித்தவர்களுக்கு அதிகாரம், பலம், செல்வாக்கு, செல்வம் முதலிய பெருமைகளெல்லாம் சண்டை போடக்கூடியவர்களாலும், ஒழுங்கான யுத்த முறையைப்பயிற்சி செய்தவர்களாலுமே அடையப்பட்டன என்னும் உண்மை விளங்காமல் போகாது. இவ்வுண்மையானது பொறுமையாய் யோசித்துப்பார்ப்பவர்களுக்கே விளங்கும். உலகத்திலுள்ள அரசியல் முறைகளுக்கே நடுநாயகமாயும் அஸ்திவாரமாயும் ஐரோப்பா தேசமானது ஏன் இருக்கிறது என்றால் ராணுவ பலமும்சுதந்திரஸ்தாபனங்களும், எல்லாமதங்களுக்கும் விஷேமான கிறிஸ்துமதமும் (?) ஒன்று சேர்ந்து இருப்பதினால்தான் இரண்டு தலைமுறையாக இந்திய தேசீய இயக்கத்தை ஆரம்பித்த இந்தியர்கள் ஐரோப்பியர்களிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்கித் தாங்களே அநுபவிக்கவேண்டும் என்னும் முயற்சியில் தங்கள் பழையகால இந்து முறையினின்றும் சிறிதுகூட மாறாமல் இருக்க வேண்டிய நிலைமையிலேயேதான் இருக்கிறார்கள். தங்களது முயற்சிக்கு ஏற்றாப்போல் தங்களைப் போலவே ஐரோப்பாவின் ஆட்சியால் அடிமையுற்றிருந்த இதர தேசங்களும் சுயேச்சைக்காகப் போராடுவதைக் கண்டார்கள். ஐரோப்பா மாத்திரம் செல்வத்தோடிருக்க இந்தியா ஏழையாயிருப்பதேன்? ஐரோப்பா மாத்திரம் உலகத்தையே ஜெயிக்க வேண்டிய காரணமென்ன? அதுவும் ஏராள ஜனத்தொகையையுடைய இந்தியாவை ஒரு நூறாயிரம் ஆங்கிலேயர்கள் அரசாளுவானேன்? ஐரோப்பா மாத்திரம் எதிர்க்கமுடியாமலிருக்க, இந்தியா மாத்திரம் பிடிக்கவனுக்கெல்லாம் பெண்டாட்டியாயிருக்கவேண்டிய அவசியமென்ன?—ஆகிய இக்கேள்விகள் இந்திய தேசீயவாதிகளின் மனத்துள் எழுந்தன.

காந்தியின் 'ராம' ராஜ்யம்.

(பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்)

முன் தொடர்ச்சி.

ஆகவே இத்தகைய கேள்விகளுக்கெல்லாம் எனக்குத்தோன்றுவது ஒரே ஒரு பதில்தான். அதாவது நமக்கு சுதந்திரம் வேண்டுமென்றால், இங்கிலாந்தைத் தோற்கடிக்கக்கூடிய தேகபலமும், வலிமையும் வேண்டும். இவ்விரண்டும் வேண்டுமென்றால், நமது புராதன ஸ்தாபனங்களையும், போர்முறைகளையும் விட்டொழிக்க வேண்டும். அதற்குச் சரியான வழி என்னவென்றால ஐரோப்பிய கலைகள், விஞ்ஞான சாஸ்திரம் முதலியவைகளைநாமும் அறிந்துகொண்டு ஐரோப்பாவை அதன் முறைகளாலேயே ஜெயித்து இந்தியாவின் சுயேச்சையை அடைய வேண்டுமென்பதே. இதற்கு ஒரு சிறந்த உதாரணம் வேண்டுமானால் ஜப்பானை எடுத்துக்கொள்ளுங்கள். ஐரோப்பாவுடனாவது, அமெரிக்காவுடனாவது ஜப்பான் போக்குவரத்துச் செய்ய விரும்பியதே கிடையாது, ஆனால் நாகரீக உலகம் அதை சும்மாயிருக்கவிடவில்லை. அமெரிக்க யுத்தக்கப்பல்கள் ஜப்பானை அடிக்கடி மிரட்டிக்கொண்டிருந்தன. ஜப்பான் ஒரு முடிவுக்கு வரவேண்டியதாயிற்று. ஜப்பானியர்கள் தங்களுக்கு ஒரு விசேஷ நாகரீகம் இருப்பதாகவும், ஒரு காருண்ய மதம் இருப்பதாகவும், வெகு சௌக்கியமான வாழ்க்கையிருப்பதாகவும் நினைத்துக்கொண்டுதானிருந்தார்கள். ஐரோப்பாவும், அமெரிக்காவும் கனத்தத்துப்பாக்கிகளும்விசேஷமான தேகபலமும் கொண்டிருந்ததால், மேல் நாடுகள் தங்கள் விஷயத்தில் கலப்பதே பெரும் பிழையென்றும் பாவமென்றுங் கூட கருதியிருந்தார்கள். ஆனால் அவர்கள் எண்ணத்திற்கு மாறாக மேனாட்டு நாகரீகம் எப்படியோ ஜப்பானில் புகுந்து விட்டது. என்ன ராஜதந்திரம், வேண்டுகோள் முதலியன செய்தும் பயன்படாமல் போயிற்று. தங்களுடைய நாகரீகம, கௌரவம், சுயமரியாதை முதலியன பாதிக்கப்பட்டதாக நினைத்து ஜப்பான் ராஜீய வாதிகள், தங்கள் தேசத்தின் க்ஷேமத்தையும், கௌரவத்தையும் இனிமேல் காப்பாற்ற வேண்டியது எப்படி என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

ஐரோப்பாவானது நியாயத்திற்கோ, பகுத்தறிவுக்கோ கட்டுப்படாமல் துப்பாக்கிகளுக்குத்தான் கட்டுப்படும் என்று தோன்றியது. உடனே ஜப்பானானது தங்கள் மனதிற்குப் பிடிக்காமலிருந்துங்கூட பெரிய பெரிய துப்பாக்கிகளைச் செய்ய ஆரம்பிக்க வேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டார்கள். பலாத்காரம் உபயோகிப்பதை அவர்கள் மனசாட்சி தடுத்துங்கூட ஐரோப்பியச் சண்டை முறைகளையும் ராணுவப்பயிற்சியையும கற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டது. (தொடரும்.)

வைக்கம் வீரர்வாசகசாலை, தென்மாபட்டு.

இவ்வாசகசாலையின் வாராந்திரக்கூட்டம் 7-7-31 தேதி இரவு ஏழு மணிக்கு திருவாளர் ஆ. குமாருசாமி அவர்கள் தலைமையிற் கூடிற்று. அவ்வமயம் இவ்வூர் கலாசாலை ஆசிரியர் திருவாளர் சி. முருகன் அவர்கள் "பெண்ணின் பெருமை" என்பது பற்றிபேசுகையில் நமது முன்னோர்கள் பெண்ணுக்குப் பெருமை கொடுத்து வாழ்ந்தார்கள் என்றும் அதற்கு அறிகுறியாக மண், நீர், செல்வம், கல்வி போன்றவைகளுக்கு முறையே பூமி

ரோஜா முத்தையா

தன்மதிப்பு இயக்கத்தின் தனி மாண்பு.

என் உள்ளக்கிடக்கை.

—:0:—

(சா. வேதனார் F. M. S.)

“குடி அரசு” எனும் விழுமிய, சிறந்த சீர்திருத்தப் புதினப் பத்திரிகை தோன்றின காலந்தொட்டு யான் அதை வாசித்து வருகின்றேன். அஃது தன் பெயருக்கேற்ப குடிகளின் பிரதிநிதியாய் உழைத்து வந்திருக்கிறதென்பதை அதன் எதிரிகளும் மறக்கார். பிறகு சுயமரியாதை இயக்கம் என்ற சமதரும இயக்கம் ஒன்றினை திரு. இராமசாமியார் துவக்கிக் ‘குடி அரசு”ப் பத்திரிகையை அதன் கருவியாகப் பிரயோகித்து மிகத் தீவிரமாய்ச் சீர்திருத்தத் துறையில் முனைந்து பாடுபட முன்வந்த காலத்து என் உள்ளம் மிக்க மகிழ்ந்து கிளர்ச்சியடைந்தது. ஆயினும் வெளியாகமாய்த் துணிந்து அவ்வியக்கத்திற்கு ஆதரவளிக்க என்றாற் கூடாதிருந்தது.

பின்னர் 1929-ம் ஆண்டின் இறுதியில் மலாய்நாடு போந்து சீர்திருத்தச் சொற்மாரி பொழிந்த நமது வீரர் இராமசாமியாரது வன்மையும், உண்மையும், உறுதியும், திடமுங்கொண்ட பேச்சுக்களைச் செவிமடுத்த யான் தன்மதிப்பு இயக்கத்தின் தனி மாண்பை மிகத் தெளிவாய் உணரலானேன். உணர்ந்தபின் அப்புனித இயக்கத்திற்கு என்னாலியன்ற உதவியைக் “குடி அரசு” வாயிலாய்ச் செய்திட உறுதி பூண்டேன், எனினும் ஒன்றன்பின் ஒன்றாய் எனக்கு வந்தடைந்த பல்வேறு தொல்லைகளால் ஒன்றுஞ் செய்ய இயலாது போயினேன். இப்பொழுதோ தொல்லைகள் தொலைந்தனவாக. யான் எனது எழுதுகோலால் சுயமரியாதை இயக்கத்திற்குத் துணைத் தொண்டாற்ற முன்வருகின்றேன்.

யான் ‘குடி அரசு” வாசகர்கட்குப் புதியவனானபடியால் என்னைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது மிகையாகாதென்றெண்ணுகிறேன். யான் நான்கு தலைமுறைகளாக “கிறிஸ்துவா”ன் குடும்பத்திற் பிறந்தவன். “ஆங்கில திருச்சபை” என்பது நான் பிறந்த சமயப்பிரிவின் பெயர். சிறு வயதிலேயே “இந்து”க்களையும் ‘கிறிஸ்து”வரல்லாத ஏனையோரையும் ‘அஞ்ஞானிகள்” என்று கருதி இழிவாய் நடத்தப் படிப்பிக்கப்பெற்றேன், ‘விவிலியம்” என்ற நூலையன்றி வேறெந்தச் சமய நூலையும் கற்பது ‘பாவம்” என்று சொல்லப்பட்டேன். இவ்வாறு எனது பதினேழு ஆண்டுகளைக் கழித்தேன். 18—19-ம் ஆண்டுகளில் “மத வைராக்கியம்” கொண்டு ‘வைதீக”வெறியனாய் ‘இந்து” சமயத்தைத் தாக்கிப்பேசவும், எழுதவுந் தலைப்பட்டேன். “ஆனந்த போதினி”யோடு முட்டி மோதினேன். என்னைப்பிடித்திருந்த எனது “மத வெறி” எனது 21 ம் வயதுமட்டும் தன் நச்சுத்தன்மையை என் இள உடலிற் செலுத்திக்கொண்டே வந்தது.

எனது 21-ம் ஆண்டின் இறுதியில் இருநூல்கள் என் கைக்கெட்டின. அவை என்வாழ்க்கையைப் பெரிதும் பாதித்து. என் உள்ளத்தையும், எண்ணத்தையும் அடியோடு வேறுவழியில் திருப்பிப் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணி விட்டன. அவை “ஆரிய சமாசம்” என்ற சீர்திருந்திய ‘இந்து” சமயப்பிரிவைத் தோற்றுவித்த சுவாமி தயானந்த சரசுவதி என்பாரியற்றிய ‘சத்தியார்த்தப் பிரகாசிகை” என்ற நூலும், ‘விவிலியத்’தையும் ‘கிறிஸ்துவத்’தையும் கண்டித்துப்பல நூல்கள் எழுதிய தாமஸ் பெயின் என்பவராகிய ‘ஏஜ்-ஆவ்-ரீசன்’ (Age of Reason) (ஆராய்ந்தறியும் காலம்) என்று பெயர் கொண்ட மிகச்சிறந்த நூலுமேயாகும். குறித்த இரு நூல்களையும் பன்முறை வாசித்த எனக்குத் ‘திருமறைகளி’லிருந்த பற்றும், பித்தும் மறைந்தன. எனவே இயற்கைக்கு என் மனதைத் திருப்பினேன். அன்றியும் சுவாமி விவேகானந்தர், சுவாமி இராமதீர்த்தர் முதலியோர் எழுதிய பலநூல்களையும் வாசித்தேன். இராசா இராமமோகன ராயின் ‘பிரமசமாசம்’ என் உள்ளத்தைக் கவர்ந்தது. ஆயினும் ‘ஆன்மசாந்தி’ அடைந்தேனில்லை. ஆங்கிலேயில் பிரபல ‘நாத்திகா’களும், சந்தேகிகளுமான அறிஞர்கள் ராபர்ட் கிறீன், இங்கர்சால், சுடார்வின், அகீசிலிபிறட்லாவ் ஆதி போரது நூல்களை வாசித்தேன். ‘பிரம்மஞானசபை’யாரின் கொள்கைகளையும் ஆராய்ந்தேன். முடிவென்னவெனில், யான் ஓர் ‘சந்தேகி’ யானேன். எனது நிலை ‘ஆத்திகத்தி’ற்கும் ‘நாத்திகத்’திற்கும் இடையில் நிலைபெற்றது. எனவே, ‘மறுமையில் எனக்குக்கிட்டுவது, ‘திரிசங்கு சுவர்க்கம்’ தான் போலும். அஃதெப்படியுமாகுக.

இனி சங்கதியை பெடுத்துக்கொள்வோம். சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களை அறிந்தும், அறியாமலும் பலர் அதைப் பல்வேறாகக் கண்டித்து வருகின்றனர். ‘ஞான பூமி’ ‘புண்ணியநாடு’ ‘தருமதேசம்’ ஆகிய சிறப்புப் பெயர்களைப்பெற்ற இந்தியாவில்—உலகிற்கே ‘ஆன்ம ஞான ஒளி’யை அருளிய உன்னத ‘ஆரியவர்த்த’த்தில் பல சமயங்கட்கும் அன்னைபோன்ற ‘இந்து’ சமயத்தை உண்டாக்கிய பரதகண்டத்தில்-முனிவர்களையும், இருடிகளையும் ஈன்ற நாவலந்தீவில் ‘முந்தைநாள் முளைத்த மழையில் நேற்று முளைத்த கோரைப்புல்’ ஆகிய சுயமரியாதை இயக்கம் தனது ‘நாத்திக’ நச்சுத்தன்மை ததும்பிய ஆவேசக்கிளர்ச்சியால் பெருங்கேட்டை விளைவிக்கும் என்று வைதீகர்களும், சமயக்குரவர்களும், பண்டிதர்களும், புரோகிதர்களும் சாத்திரிகளும், குருக்களும் கூக்குரலிட்டுக் கொக்கரிக்கின்றனர். அவர்களுக்கு ‘அரசியல் வாதி’களும் ‘தேசபக்தர்’களும் ஒப்புத்தாளம் போடுகின்றனர். இந்த நிலைமையில் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று அவாவும் ஒவ்வொரு இளைஞனும் தனது தகுதிக்கேற்றவாறு தன்மதிப்பு இயக்கத்திற்கு ஆதரவளித்தல் திருக்கடனாகும். ஏனெனில் சமய, சமூக சீர்திருத்தத்தில் மிகத் தீவிமாய் முனைந்து தொண்டாற்றுவது-இதென்னாட்டைப் பொறுத்த அளவில்-சுயமரியாதை இயக்கம் ஒன்றேயாதலினென்க.

‘கடவுள்’ என்ற வெறும் வார்த்தையின் பெயரால், ‘சமயம்’ என்னும் போராயுதத்தால் உலகில் மக்கட்கு இழைக்கப்பட்டுள்ள இன்னல்களுக்கு எல்லையேயில்லை. அவ்விரு உணர்ச்சிகளால் இன்றைக்கும் துன்புறும் தேயம் நமது பாரதப் பெருநாடேயாகும். அவ்விரண்டு உணர்ச்சிகளையும் ஒழிக்கக் கங்கணங்கட்டி உழைத்துவரும் சுயமரியாதை இயக்கத்திற்கு—அது இயற்றும் திருத்தொண்டிற்கு என் மனமார்ந்த வந்தனம் உரியதாகுக. இதுகாறும் எந்தத் தனிமனிதனும், இயக்கமும், கட்சியும் செய்யேற்றிராத மலைபோன்ற பெரியதோர் பணியை திரு. இராமசாமியார் தமது சுயமரியாதை இயக்கத்தினால் செய்து வருவதால் அவ்வியக்கம் உண்மையில் குறிப்பிடத்தக்க தனி மாண்பு உடையதென்பது எனது துணிபு.

‘பிராமணசமய’க் கொடுமைகளை ஒழிக்கத்தோன்றிய கௌதமசாக்கிய முனிவரின் பௌத்த சமயத்தையும், ‘போப்’களின் கேடுகளை அழிக்க எழுந்த லூதர் என்பாரின் ‘ப்ராடெஸ்டெண்ட்’ எதிர்ப்புச் சமயப்பிரிவையும் விடப்பன்மடங்கு தன்மதிப்பு இயக்கம் மேம்பட்டதென்பேன். ஏனெனில் இவ்வியக்கம் சமதருமம் எனும் சிறந்த கொள்கையை அடிப்படையாகக் கொண்டெழுந்து மக்களுக்கு உண்மை உரிமையையும், ஒற்றுமையும், உயர்வையும் அளிக்க ஆசித்துழைத்து வருகின்றமையால். இத்துணைத்தனி மாண்புடைய தன்மதிப்பு இயக்கத்தைப் பிறர் அறிந்தோ அறியாமலோ தாக்குவதால் அல்லது தூற்றுவதால் சுயமரியாதை இயக்கத்தினர் பின்னடைந்து விடாது முன்னேறிச் செல்லவேண்டும். புத்தரை ‘அவைதீகன்’ என்றனர் வைதீகவெறியர். லூதரை ‘பேய்பிடித்தாட்டும் பேயன்’ என்றனர் ‘போப’ பை வணங்கும்பேதையர். அவ்வாறே திரு. இராமசாமியாரையும், அவரது இயக்கத்தையும் பல இழிபெயர்களால் ‘ஆத்திகரும்’ ‘கடவுள் பக்தரும்’ ‘ஞானிகளும்’ அழைக்கத் தயங்கார். அதையெல்லாம் சிறிதும் சட்டைசெய்யாது சுயமரியாதை இயக்கம் வெகுவேகமாய்ச் சென்றுகொண்டிருப்பதை யறியயான் மிகவே மகிழ்ச்சியுறுகின்றேன்.

தன்மதிப்பு இயக்கம் ‘கடவுள்’ மேல் பாணந்தொடுக்கவில்லை. ‘கடவுளை’யும் ‘கடவுள் பக்தரையும்’ பற்றி ஒருவரும் கவலைப்படத்தேவையில்லை அவர்கள் ஏற்படுத்திய ‘சமயங்களைப்’பற்றியும் சுயமரியாதை இயக்கம் பெரிதும் கவலையெடுக்காதென்றெண்ணுகிறேன். ‘கடவுள்’ ‘மதம்’ ‘பக்தி’ என்பவை வெறும் உணர்ச்சிகளாய் மக்கள் உள்ளத்திலிருந்து அவற்றால் எத்தகைய மதிப்புக்கேடும் பணச்செலவும் இல்லாதொழிந்தால் அவற்றைப் பொருட்படுத்த வேண்டியதேயில்லைதான். ஆனால் ‘கடவுள்’களும் ‘சமயங்களும்’ ‘பக்தி’ செய்தலும் பொதுமக்களின் உணர்ச்சியை மழுங்க வைத்து அவர்களது தன்மதிப்பை அழித்து பணத்தைச் சுரையாடி இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டிருக்கும்பொழுது அவற்றைக்கட்டோடே ஒழிக்க வேண்டுமென்று சுயமரியாதை இயக்கம் கூறினால் அது ‘ஆவேசக்கூற்று” என்றும் நாத்திகர்தம் நாச வேலையெனவும் சிந்திக்குந்திறனற்ற வெள்ளறிஞர் செப்புவாராயின் அதைக்கவனிக்கவும் வேண்டுமோ?

“இந்தியா இழந்த தனம்” என்ற ஒரு நூலை வாசித்தேன். அதனை ஆக்கியோர் ஆங்கிலேயர். இந்தியாவிற் காலவைத்த நாள்தொட்டு சுரண்டிக்கொண்டுபோயிருக்கும் பெருந்தனக்குவியலைப்பற்றிய கணக்கு விபரத்தைக் காண்பித்திருக்கிறார். அது உண்மையாகவிருக்கலாம். ஆனால் “இந்தியாவில் ஈசனார் விழுங்கிய பெருந்தனம்” என்ற பெயருடன் ஒரு நூலை சுயமரியாதை இயக்கத்தினர் எழுதி “இந்து” க்கோ

[தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க]

தேவி, கங்காதேவி, இலட்சுமி, சரஸ்வதி எனப்பெயர் கொடுத்திருப்பதை நமது வழக்காட்டில் நாம் காண்கின்றோமென்றும், பல அறிய விஷயங்களை பல உதாரணங்களோடு பேசினார். பின் திருவாளர்கள் ஈ. சிவசுப்பிரமணியம், மாணிக்கம் ஆகியவர்கள் பேசியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஈரோட்டில் கண்டனக்கூட்டம்.

மின்சார சக்தி பகிஷ்காரத் தீர்மானம்.

கோவை திருவாளர் எஸ். என். பொன்னைய கவுடர் தலைவர்.

12-7-31 தேதி மாலை ஈரோடு காளிதாஸ் விட்டல்ஜி சேட்டு அவர்கள் மண்டி ஹாலில் ஈரோடு மகாஜனங்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்படி கோயமுத்தூர் பிரபல வியாபாரியும், முனிசிபல் கவுன்சிலரும் ஜில்லாபோர்டு வைஸ் பிரசிடெண்டுமான உயர் திருவாளர் எஸ். என். பொன்னையாகவுண்டர் அவர்களை இரண்டு நாளைக்கு முன்னதாக தலைமைவகிக்க வேண்டிக்கொண்டபடி, வேண்டுகோளை ஏற்று இதற்கென்றே கோவையில் இருந்து வந்து தலைமை வகித்தார். இந்தக் கூட்டமானது சென்னை அரசாங்கத்தார் ஈரோடு டவுனுக்கு மின்சார வினியோகத்திட்டத்தை ஈரோடு முனிசிபாலிடி எவ்வளவோ தூரம் கேட்டும் கொடுக்காமல் ஒருவெள்ளைக்கார கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுத்த விஷயத்தைக்கண்டிக்கவும், மேலால் ஈரோடு மகாஜனங்கள் இதற்கு என்னசெய்வது என்பதை யோசிக்கவுமே பலபிரமுகர்கள் வேண்டுகோள் அனுப்பிக்கூட்டப்பட்டதாகும். மழைபெய்தும் ஏராளமான பிரமுகர்கள் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள்.

திருவாளர்கள்.

யந்திரசாலைக்காரர்களான ப. சை. அசன்சாயபு, தா. பச்சமுத்து செட்டியார், நா. மு. சண்முகசுந்தர முதலியார், முத்துசாமி முதலியார், முகமது சுல்தான் சாயபு, கேசவலால் காளிதாஸ்சேட் ஆகியவர்களும் மற்றும் முக்கிய வர்த்தகர்களான மில் ஏஜண்ட் வி. வி. சி. வி. பெரியசாமி முதலியார், என். ராமசாமி நாயக்கர், இ. வி. ஜெயராம் நாயுடு, கிருஷ்ணசாமி ஆசாரி, பாங்கர் அப்பைய கவுண்டர், நாச்சிமுத்து செட்டியார், பாவாடைநாயக்கர், பெருமாள்நாயுடு, ராஜரத்தினம்ரவுத், சுப்பிரமணியசெட்டியார், ராமசாமி முதலியார், ரு. அ. முனியஞ்செட்டி, முத்துசாமி நாயுடு, ரங்கசாமிபிள்ளை, கே. வி. ரங்கசாமி, கே. பழனியப்பன், முத்துசாமி முதலியார், கிருஷ்ணசாமி செட்டியார், அர்த்தனாரி செட்டியார், ராமசாமி கவுண்டர், சிவபாதஹிருதயம் பிள்ளை, வெங்கிடசாமி நாயக்கர், மாணிக்கம், பெரியசாமி முதலியார், முனுசாமி நாயுடு, ஷண்முகம்பிள்ளை அப்பாய் நாயக்கர், ராஜு, ஈஸ்வரன், கோவிந்தராஜு, சிவராமன், முகமது அனிபா, தம்பி, ராமசாமி, அப்துல் ரஹிமான் சாயபு, வாசுதேவன், நாராயணகோன்; ஜெயராம், பட்டு, இ. எஸ். கஸ்தூரி அய்யங்கார், சுப்பராய முதலியார் பி. முகமது அலி, ராமலிங்கம், நா. அசேன் சாயபு, மைதீன்சாயபு, வெங்கிட்டசாமிரவுத், கருங்கல்பாளையம்மிராசுதாரர், பி. மாரிமுத்துபிள்ளை, கே. எஸ் கிருஷ்ணசாமி அய்யங்கார், டாக்டர் ரங்கநாதம், முகமது ஆலீம், சுலைமான் பாட்சா, எ. ஆர் சிவானந்தம், ஈர்ஜி காளிதாஸ், அ. ராமசாமி செட்டியார், ஜெயராவ், எஸ். ராமசாமி நாயக்கர், எல்ல நாயக்கர்: ராமலிங்கம்பிள்ளை, சுப்பண முதலி, கு. கொளந்தையமுதலி, சங்கரமுதலி, அங்ஸ்ராஜ், வெங்கிட்ட சுப்பரவுத், எல்ல நாயக்கர், பாச்சா, மாணிக்கம் பிள்ளை. சின்னுசாமி பிள்ளை, பொன்னப்பசெட்டி, நாகரத்தினம் செட்டி, வையாபுரி செட்டி பழனியப்பசெட்டி பா. சை. அசன் சாயபு, ரு சை. அப்துல் குத்தூஸ் சாயபு, மீ. கா. முகமதுபாச்சா சாயபு, ஐ. யி. க. முகமது இப்ராகிம்சாயபுகம்பெனி, எல்லநாயக்கர், மு. தி. பொன்னப்பசெட்டியார், மி. கா. மு. அப்துல்சுகூர், மி. சே. அ. அண்டுபிரதர், மு. அங்கப்பசெட்டியார், தொளசிதாஸ் அண்டுகோ. அ. பா. வையாபுரிமுதலி, தயலாங்சேட், மு. எல்லநாயககர், சொ. கருப்பண முதலியார், ச. பை. சைதுசாயபு, ஜெக்கா பாலசுப்பரவுத்து, வெங்கடாசலம், யூ. கந்தசாமி, வெ. நாகப்பன், ஆர, வரதராஜலுநாயுடு, எஸ் மாசிலாமணி செட்டி, சங்கரய்யர், பி. ராமசாமிகவுண்டர், ராமச்சந்திர செட்டியார், ராதாகிருஷ்ண ரவுத்து, பி. ராமசந்திரநாயுடு, ஆர். எல்ல நாயக்கர், பி முத்துசாமி கவுண்டர், பாலகிருஷ்ணன், முனியப்ப கவுண்டர், ரங்கசாமி நாயுடு. குமாரசாமி கவுண்டர், முனியப்ப கவண்டர். குருமூர்த்தி, கோபால்சாமி, ராஜரத்னம், வேணுகோபால் நாயுடு, வெங்கிடசாமி, வீ. ராஜுரவுத், துளசிதாஸ்சேட், ரு. அ. பழனியப்பசொட்டியார், கோபாலசுப்பரவுத், அங்கமுத்து முதலியார். மைதீன் சாயபு, முத்துசாமி முதலியார், செ, வெங்கிடுசாமி நாயுடு மு ராமசாமிமுதலியார், கு. அப்பாய் நாயுடு, அப்துல்கனி சாயபு, சின்னப்பசெட்டியார், அங்கப்பமுதலியார், ஆறுமுகம் செட்டியார், ரங்கணகவுண்டன்; நாகப்பகவுண்டர், அலாவுதீன்சாயபு; வையாபுரி முதலியார், நத்தர்சாயபு, சுக்கூர் சாயபு பழனியப்பமுதலியார், அப்துல்ரஹிமான் சாயபு, குப்புசாமி சேர்வை, அயோத்தி நாயுடு, முத்துசாமி கவுண்டர், கா. மைதீன்பாட்சா சாயபு, கோபால கிருஷ்ணரவுத், நிமலா பால கிருஷ்ண ரவுத்து, கிருஷ்ணசாமி, வையாபுரி செட்டியார், இ. ஒய். உமார்கான்சாயபு, சுந்திரம் ரவுத், எம். எஸ். முத்துக்கருப்பஞ்செட்டியார், கா. அ. ஷேக்தாவுத்சாயபு, ஈ. வி. நஞ்சப்பசெட்டியார், எம். சிக்கய நாயக்கர், டி. எம். நரசிம்மாச்சாரியார், கே. கே. குதரத்துல்லா சாயபு, ஈ. வெ. ராமசாமி, குழந்தைவேல்பிள்ளை, ரு. சு. சுப்பிரமணிய செட்டியார், ஈ ஓ சி. முத்துசாமிகவுண்டர், முதலிய கனவான்களும் மற்றும் அனேகபொது ஜனங்களும் வந்துகூடி இருந்தார்கள்.

ஈரோடு முனிசிபல்சேர்மென் அவர்களுக்கும், கவுன்சிலர் அவர்களுக்கும் தனியே அழைப்பு அனுப்பி மீட்டிங்குக்கு விஜயம் செய்யும்படி கேட்டுக்கொண்டபடிக்கு சேர்மென் அவர்களும் கவுன்சிலர்களும் விஜயம் செய்திருந்ததுகுறிப்பிடத்தக்கதாகும்.

திரு பொன்னையாகவுண்டர் அவர்களை தலைமை வகிக்கவேணுமாய் திருவாளர் வக்கீல் கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் பிரேரேபிக்க, ஆமோதிக்க பெருத்தகரகோஷத்துடனே தலைமை வகித்து முகவுரையாக மீட்டிங்கின் கருத்தையும் அவசியத்தையும்பற்றி சிலவார்த்தைகள் சொன்னபின்புஈரோடு மின்சார சப்ளை சம்பந்தமான சரித்திரத்தை எடுத்து சுருக்கமாகச்சொல்லி முனிசிபல் வைஸ் சேர்மென் அவர்களை மற்றவிஷயங்களைப்பற்றி எடுத்துச் சொல்லும்படி கேட்டுச்கொண்டதற்கு இணங்க வைஸ் சேர்மென் திரு ஈ. வி நஞ்சப்ப செட்டியார் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிஇருந்த ஒரு ரிபோர்டை தமிழ்ப்படுத்திச் சொன்னார்கள். பிறகு திருவாளர்கள் கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், எம். எஸ். முத்துக்கருப்பஞ்செட்டியார், டி. எம். நரசிம்மாச்சாரியார், கேசவலால் காளிதாஸ்சேட் ஆகியகனவான்கள் விஷயங்களை விளக்கிப்பேசி அதுவிஷயமாய் ஈரோடு மகாஜனங்கள் நடத்திகொள்ளவேண்டிய கடமையைப்பற்றியும் வெகு ஆவேசமாய் எடுத்துச்சொன்னார்கள். பிறகு திரு ஈ. வெ. இராமசாமி சில தீர்மானங்களைப் பிரேரேபித்துப் பேசினார்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

1. ஈரோடு முனிசிபல் டவுனுக்கு எலக்ட்ரிக்சப்ளை விஷயமாய் கவர்ன்மெண்டார் ஈரோடுமுனிசிபாலிட்டியாருக்கு லைசன்சு கொடாமல் ஒரு வெள்ளைக்காரக் கம்பெனிக்கு லைசன்சு கொடுத்ததை இம்மகாநாடு வலிமையாய்க்கண்டிக்கிறது.

(அ) ஈரோடு முனிசிபாலிடியார் சொந்தத்திலேயே மின்சாரம் உற்பத்தி (Generate) செய்து டவுனுக்கும், முனிசிபாலிடிக்கும் வினியோகிக்க முடிவு செய்துகொண்டு ரூபாயும் தயார்செய்து சர்க்காரானை அனுமதிகேட்டும், முதலில் கொடுப்பதாகயிருந்து, பிறகு கொடுக்காமலிருந்துவிட்டதோடு கவர்ன்மெண்டிடமே மின்சாரசக்தி வாங்கிக்கொள்ளவேண்டுமென்று சொல்லி, அந்தப்படி செய்யவும் ஈரோடு முனிசிபாலிடி தயாராகயிருந்தும், கடைசியாக அவ்வுரிமையை ஈரோடு முனிசிபாலிடிக்குக் கொடாமல் வேறொருவெள்ளைக்காரருக்கு கொடுத்ததின் மூலம் ஈரோடு முனிசிபாலிடிக்குக்கிடைக்கக்கூடிய பெருவாரியான பணம் கிடைப்பதற்கில்லாமல் போனதாலும், மறுபடியும் சுலபத்தில் ஈரோடு முனிசிபாலிட்டிக்கு இந்தச்சுதந்திரம் வருவதற்கில்லாத முறையில் இந்த உரிமை மேற்படி கம்பெனியாருக்கு கொடுக்கப்பட்டிருப்பதாலும், ஈரோடு மகாஜனங்கள் இந்த அன்னிய வியாபாரியிடமிருந்து மின்சார சக்திவாங்கி, உபயோகிக்கக்கூடாதென்று தீர்மானிப்பதுடன், இங்குள்ள மகாஜனங்கள் கண்டிப்பாய்வாங்குவதில்லையென்றும் உறுதி செய்து கொண்டார்கள்.

(ஆ) சர்க்காரிடம் லைசன்சுபெற்ற மேற்படி வெள்ளைக்கார கம்பெனி மேற்படி தொழிலை நடத்த ஒரு புதிய லிமிடெட்கம்பெனியை ஆரம்பித்து தொழில் நடத்துவதாய்ச் சொல்லி 'சேலம், ஈரோடு எலக்டிரிக் சிட்டி டிஸ்டிரிபியூட்டிங் கம்பெனி (லிமிடெட்)' என்று ஒருகம்பெனி ஆரம்பித்திருப்பதால், அக்கம்பெனியாரிடம்யாரும் பங்கு சேரக்கூடாதென்று பொதுஜனங்களைக்கேட்டுக் கொள்ளுகின்றது.

(இ) ஈரோடு முனிசிபாலிடியாரும் இந்தக்கம்பெனியாரிடமிருந்து மின்சார சக்திவாங்கி உபயோகிக்கக்கூடாதென்று தெரிவிப்பதோடு, மீறிவாங்கினால் முனிசிபாலிடியுடன் வரி செலுத்துவோர்கள் ஒத்துழைக்க முடியாதென்று தெரிவித்துக்கொள்ளுகிறது.

தீர்மானங்களைப் பிரேரேபித்தவர் ஈ. வெ. இராமசாமி.

ஆமோதித்தவர்கள்:-நா. மு. சண்முகசுந்தரம், த. பச்சமுத்து செட்டியார், அ பா. முகமதலிசாயபு, கா. மைதீன்பாட்சா சாயபு, ரு. அ. பழனியப்பசெட்டியார், கோட்டை முத்துசாமிகவுண்டர், வ. வெ. கா. ராமலிங்கமுதலியார், ஈர்ஜி. காளிதாஸ் சேட், வ. வெ. க. வி. பெரியசாமி. மேற்படி தீர்மானங்கள் ஏகமனதாய நிறைவேற்றப்பட்டது.

பிறகு தலைவர் திருவாளர் எஸ். என். பொன்னையா அவர்கள் முடிவுரையாகப் பேசுகையில் தீர்மானத்தை குறிப்பிட்டுபேசி அதைகட்டுப்பாடுடன் அமுலில்கொண்டுவர வேண்டியது முக்கியமானதென்றும் இதற்கு ஒற்

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

இந்தியத்தாய்.

இரண்டாவது புத்தகம்.

இந்துக்களின் பாலிய மணமென்றால் என்ன?

(T. D. கோபால்)

[இது அமெரிக்காநாட்டு திருமதி மேயோ என்னும் அம்மையார் 'இந்தியத்தாய்' என்பதாக 2 வருஷத்திற்குமுன் எழுதியிருந்த புத்தகத்தின் இரண்டாவது பாகமாக வெளியிடப்பட்ட புத்தகத்தில் காணப்படும் குறிப்புகளாகும். ஆனால், அவ்வம்மையார் முன் எழுதிய புத்தகம் போல் தான் பார்த்ததையும், தான் விசாரித்ததையும், தன்னுடைய அனுபோகத்தையும் எழுதியது என்பது போல் இது எழுதப்படாமல், இந்தியகனவான்கள் என்பவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருப்பதாக சர்க்காரார் ரிகார்டு முதலியவைகளில் எடுத்துக் குறிப்பிடப்பட்டிருக்கும் குறிப்புகளையே முக்கியமாய்க் குறிப்பிட்டு, சிறப்பாக அதாவது 'சாரதா சட்ட கமிட்டி'யில், இந்திய கனவான்கள் சொன்ன சாட்சிகளையும், வாக்குமூலங்களையும், அறிக்கைகளையும் குறிப்பிட்டு அவைகளின் மீது தமது அபிப்பிராயத்தைச் சொல்லி விளக்கும் முறையில் எழுதிய புத்தகமாகும். இதைப் படிப்பவர்களுக்கு இந்திய சமூக சம்பந்தமான விஷயங்கள் நெருங்கி சமீபத்திலிருந்து பார்ப்பது போல் விளங்கும்]

இந்துக்களின்பாலிய மணமென்றால் என்ன? தெய்வங்களை நியம நிஷ்டைகளும் ஆச்சாரங்களும் சிறிதும் வழுவின்றி வணங்குவதற்காகவும், விவாக உடன்படிக்கையின்படி அதன் சூத்திரங்களை பக்குவ நிலையடையும் பரியந்தம் நிறுத்திவைத்திருப்பதற்காக வேண்டியும் மனிதர்களால் செய்து கொள்ளப்பட்ட ஓர் மேன்மை பொருந்திய அல்லது கௌரவமான விவாக வாக்குத்தத்தமா? அல்லது, மேற்கு நாடாகிய ஐரோப்பிய நாடுகளில் வாசம் செய்யும் மக்களால் அறிந்து கொள்ள முடியாத அவ்வளவு இரகசியமான விஷயமா? இந்து பெண் குழந்தைகளின் விவாக ஒப்பந்தமெனக்கூறப்படுவதில், அவர்களின் அகால தேக சம்பந்தத்தையும் அது குறிக்கின்றதென நாம் எண்ணுவதில் அறியாமை நம்மைத் தப்புவழியில் நடத்தி நமது வெட்கம் கெட்ட தன்மையையாவது அல்லது முரட்டுத்தனத்தையாவது வெளிப்படுத்துகின்றதா? அல்லது இவ்வுலகில் நடைபெறும் குரூரமான செய்கைகளிலெல்லாம் இது முதன்மையாகவும் உலக விசாரத்தை இயன்ற அளவில் மறைவாக சிக்குப்படுத்திக் கொண்டிருப்பதில் தலை சிறந்தும் விளங்குவதால் இதர தேசத்து மக்கள் இதை பொருட்படுத்தாமலும் கவனியாமலுமிருக்கக்கூடிய விஷயமாகுமா?

அல்லது மேலும், மேற்கூறப்பட்ட "பாலிய மண" மென்பதொன்றாவது இருந்த போதிலும் தற்கால நவீன இந்தியாவினின்றும் வெகு வேகமாக மறைந்துகொண்டிருக்கும் பழக்க வழக்கத்திலிருந்து வந்த செய்கையல்லவா? கடைசியாக அது பரமார்த்த ஞானத்தை யொட்டியதாகவாவது அல்லது சிற்றின்ப வாழ்க்கையைத் தழுவியதாகவாவது இருந்த போதிலும் சரியே, அது வழக்கத்திலிருந்து நீக்கப்பட்டுக்கொண்டு வந்தபோதிலும் அல்லது இன்னும் மேன்மேலும் அது விருத்தியடைந்து கொண்டுவந்த போதிலும் சரியே, அதைப்பற்றி நமக்காக வேண்டியதென்ன? நம்முடைய காரியப் பொறுப்பும், செல்வாக்கும், அதிகாரமும் அந்நாட்டிலிருப்பதைத் தவிர்த்து அவர்களுடைய காரியத்தில் நாம் பிரவேசிப்பதனால் நாமடையக்கூடிய லாபமென்ன? பிறருடைய காரியங்களில் தலையிடுகின்றவர்களெனவும், குதர்க்கமாய்ப் பேசுகின்ற உலோபிகளெனவும் அசுத்தமானவைகளை விற்பனை செய்கின்றவர்களெனவும், அசுத்தமானதை உருசி பார்க்கின்றவர்களெனவும், மெலிய கண்ணாடிகளால் கட்டப்பட்டிருக்கும் நமது வீட்டைத் தாக்குவதற்காக வேண்டி, தடியால் நாமே இடிக்கின்றவர்களெனவும் ஆகிய நாமதேயங்களை தரிப்பதைவிட வேறேதாகிலும் நாமடையக்கூடிய லாபமுண்டா?

சென்ற மூன்றாண்டுகளாக நாம் அதிகமாக வார்த்தையாடிக் கொண்டும், தர்க்கித்துக்கொண்டும் வரும் இவ்விஷயங்களைக் குறித்து அமெரிக்கதேசத்து சாதாரண மக்களின் அபிப்பிராயம் இவ்வாறாயிருக்கின்றன.

ஆனபோதிலும் அம்மொழிகளைக் கேட்டு நாம் பொறாமைசாலிகளாயிருந்த போதிலும் சரியே, அல்லது அம்மொழிகளால் நாம் கோபமடைந்த போதிலும் சரியே அப்பொழுது உலகப்பொது மக்கள் என்னும் பதத்திற்கு நாம் கௌரவமும் செல்வாக்கு மளித்தவர்களாக மாட்டோம். ஏனெனில் இந்துக்களும்---ஐரோப்பியர்களும் இந்தியர்களும்---மதபோதகர்களும் பலவித கெட்டவைகளைத் தத்துவங்களெனவும் இராஜீயப் பிரசாரகர்களெனக் கூறிக்கொண்டும் இடைவிடாமலும் ஏராளமாகவும் நம்மிடையே வந்து நமது செவிகளுக்கும் நமது மனதிற்கு மோசமான உபதேசத்தை அளித்து அவர்களுடைய பிரசாரத்தை நமது மூலியமாகப் பலப்படுத்திக் கொள்ளுகின்றார்கள்.

சிறு குழந்தைகளுக்குத் தீமைகள் பல புரிந்துகொண்டு வருவதிலெல்லாம் தலைசிறந்து விளங்குவது இந்து மதந்தான் எனக்கூறப்பட்டு வருவதை, மேலே கூறிய மக்கள் யாவரும் அக்கூற்றை அநியாயமெனவும், அக்கிரமமானதெனவும், அபத்தமானதெனவும், பொறாமையாலும், துவேஷத்தாலுமுரைக்கப் படுகின்ற மொழிகளெனவும், அறிவற்ற ஓர் செய்கையெனவுமே இடித்துரைத்துக்கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்களிலொருவராவது-எழுதக்கூடியவர்களாயிருந்த போதிலும் சரியே அல்லது பேசக்கூடியவர்களாயிருந்தபோதிலும் சரியே-தங்களுடைய கூற்றை நிலைநாட்டுவதற்காக வேண்டி, 1929-வது வருடம் கல்கத்தாவில் பிரசுரிக்கப்பட்டு, வெளியானதும் பொதுமக்கள் ஒவ்வொருவருக்கும் சுலபமாகவே கிடைக்கக்கூடியதுமான 'சம்மத வயது கமிட்டியாரின் அறிக்கையை' உதாரணமாக எடுத்து காட்டினார்களா?

பிரிட்டிஷ் இந்தியா எனக்கூறப்படும் தேசத்தில் விவாகத்தைக்குறிக்கும் தப்பர்த்தத்தில் 'சம்மத வயது' எனபடுவதைக்குறித்த சட்ட நிருணத்தின் தோரணியானது கீழே உரைத்திருப்பது போலக் காணப்படுகின்றது.

1860-வது ஆண்டிற்கு முன்னால், ஒரு ஸ்திரீயின் வயதை ஆதாரமாகக்கொண்டு ஒரு ஆடவன், தன்னுடைய மனைவியுடன் தேகசம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாதென சட்டப்பூர்வமாகத் தடுக்கப்படவில்லை. அபமாதிரியே, விவாகமும் இன்னவயதில் தான் நடைபெறவேண்டுமென்பதாகவும் ஒரு சட்டமும் ஏற்படுத்தப்படவில்லை. இந்தியா சர்க்காரா 1860-வது ஆண்டில் ஒருவன் தன்னுடைய மனைவிக்கு பத்தாவது வயது பூர்த்தியடைவதற்குள், தன்னுடைய விவாக உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்காகவேண்டி அவளுடன் சம்போகிக்க முயற்சிப்பானேயானால், அப்பொழுது அவன் 'பலாத்காரமாய் ஒரு ஸ்திரீயுடன் புணர்ந்தான்' என்னும் குற்றத்தின் கீழ் தண்டிக்கப்படுவான் என, பினல்கோடில் ஒரு சட்டத்தைச் சேர்த்துக் கொண்டார்கள். இந்தச்சட்டந்தான் சம்மத வயது சட்டம் எனக்கூறப்பட்டதாகும்.

முப்பது வருடங்களுக்குப் பிறகு, அதாவது 1891-வது ஆண்டில் ஒரு மனைவிக்குச்சம்மதவயதானது பன்னிரண்டு வயதென உயர்த்தப் பட்டது. வங்காளத்தில் கண்டு பிடிக்க முடியாதபடி நடைபெற்றுவந்த துக்ககரமான சம்பவங்களே, பெண்களின் வயது இவ்வாறு உயர்த்தப்பட்டதற்கு முக்கியக் காரணமாகும். இந்தச் சீர்திருத்தமானது, சர்க்காரார் மதங்களில் தலையிடமாட்டோமெனத் தமது இந்தியப் பிரஜைகளுக்கு விக்டோரியா மகாராணி அம்மையார் அவர்களால் அளிக்கப்பட்ட வாக்குத்தத்திற்கு விரோதமான செய்கையாகுமெனவும், மேலும் இந்துக்களுடைய ஒவ்வொரு குடும்பத்தின் ஆச்சாரத்திலும், பக்தியிலும் பிரவேசித்து அவைகளைப் பாதிக்கக்கூடியதாயிருப்பதுமல்லாமல், இந்து மதத்தின் ஆணிவேரையே இச்சீர்திருத்தமானது அதிகமாகப் பாதிக்கக்கூடியதெனவும் வைதீக இந்து தலைவர்களால் குறைகூறப்பட்டும், அநேக எதிர்ப்புகளுக்கு மிடையிலேயே தான் நிறைவேற்ற முடிந்தது.

நாட்கள் சென்று கொண்டே வந்தன. காலவட்டத்தில் இந்துக்களின் மனமும் வைதீகத்தை வெறுக்க ஆரம்பித்தது. இதர தேசங்களுடன் அநேகர் ஏராளமாகப்பழக நேர்ந்ததே இம்மனமாற்றத்திற்கு முக்கியக்காரணமாயிருந்தது. மகாயுத்தம் நடைபெற்ற சமயத்தில் இந்தியத்துருப்புகளும் அயல் தேசங்களுக்கழைத்தேகப்பட்டார்கள். ஆங்கு மற்ற தேயத்தார்களைவிடத் தாங்கள் வலிமை குன்றியிருப்பதற்குத் தங்களுடைய ஜாதியே முக்கிய காரணமென்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். இந்தியர்களின் மரணஎண்ணிக்கை அபரிமிதமாகக் காணப்படுவதற்கும் அமெரிக்கர்கள் ஒவ்வொருவரும் சராசரியாக 55 வருடங்கள் ஜீவித்திருக்கும்பொழுது, இந்தியர்களில் மட்டும் ஒவ்வொருவரும் 23 வருடங்களே சராசரியாக ஜீவித்திருப்பதற்கும் இந்தியர்கள் குறைந்த நாட்களே ஜீவித்திருப்பதற்கும் காரணங்களென்னவென்பதைப்பற்றியும் சிந்தித்து வியாக்யானம் செய்ய வாரம்பித்தார்கள். ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த மருத்துவ சிகிச்சை சாலைகளும் சிசுசம்ரக்ஷணை விடுதிகளும், தேசத்திலேற்படும் ஏராளமான மரணங்களைக் குறித்துக் காரணங்களை விளக்க ஆரம்பித்தன. கடைசியாக அதாவது மேலே கூறப்பட்ட சீர்திருத்தம் கடைசியாக நிறைவேற்றப்பட்டு இருபது ஆண்டுகள் கழிந்தபிறகுதான், சம்மத வயதின் மசோதாவிற்கடுத்த இரண்டாவது படியில் அடியெடுத்து வைக்க, இந்திய சட்ட சபையின் ஓர் அங்கத்தினர் தமதாசனத்தை விட்டெழுந்தார்.

ஆனாலும் சர்க்காராரோ அடுத்தபடியில் அடியெடுத்து வைப்பதற்குப்போதிய சான்றுகளில்லையென்பதாகக்கூறி விட்டார்கள். ஆகையால் புதியதாக ஆலோசனைக்குக்கொண்டு வரப்பட்ட சட்டமும் அதைத்தொடர்ந்தாப் போல் ஆலோசனைக்கு வர விருந்த-

மற்றொரு சட்டமும் ஆலோசனைக்கு கொண்டுவரசாத்தியப்படவில்லை கவர்ன்மெண்டாரின் இத்தகையநடத்தையை அமெரிக்காவிலும் அப்பொழுதாதரித்தவர்களில்லாமலில்லை. பொது ஜன அபிப்பிராயங்களுக்கு விரோதமாக அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை சட்டத்தினுதவியைக் கொண்டு, அடக்கி, ஆளவேண்டுமென முயற்சிப்பதானது அவமானத்தையே நமக்கு விளைவிக்குமென அமெரிக்காவில் ஆதரவளித்தவர்களால் கூறப்பட்டு வந்தது. ஆனபோதிலும் 1925 வது ஆண்டில் சர்க்காராலேயேத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு திட்டத்தின்மூலம் மனைவிமார்களுக்குச்சம்மத வயதென்பது பதின்மூன்றென உயர்த்தப்பட்டுவிட்டது இச்சிறுமாறுதலானது சர்க்காராரும்இந்திய சீர்திருத்தவாதிகளும் உண்மையாக விரும்பிய அளவு பயனை யளிக்காவிட்டாலும் கூட எதிர்காலத்தில் சர்க்காராரின் உத்தேசங்களில் மனமாற்ற மேற்படலாமென்கின்ற நம்பிக்கையை யுண்டாக்கியது.

மேற்கொண்டு மிரண்டு வருடங்கள் கழிந்தன. கடைசியாக இப்பொழுது தான் இந்தியர்கள் தங்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருந்துவரும் தடைகளையறிந்து அவைகளின் அஸ்திவாரங்களை தகர்த்தெறிய ஆரம்பித்து விட்டார்கள். பாலியமனைவிகளின் சம்மதத்தை அறிந்து கொள்ளுவதில்மட்டும் தங்களுடைய நேரத்தையும் வாணுட்களையும் செலவழிப்பதிலிப்பொழுது கொஞ்சமும்திருப்தியடையாமல் ஆஜ்மீர்-மெர்வாரா பகுதிகளின் இந்து அங்கத்தினராக இந்திய சட்ட சபையிலிருந்து வரும் ராய் சாஹப் எம். ஹரிபிலாஸ் சாரதா அவர்கள் 'இந்து குடும்பங்களைச்சார்ந்த குழந்தைகளின் விவாக வயது சீர்திருத்த மசோதா' என்பதாக ஒரு திட்டம் இந்திய சட்ட சபையில் ஆலோசனைக்காகக்கொண்டுவந்தார்.

ஓர் இந்து மனைவியை போதிய அளவு காப்பாற்றக்கூடிய சக்தியோ அல்லது திறமையோ எவ்வித சட்டத்திற்கு மில்லையென்பதை யறிந்த பிறகே தான் அவர்களுக்கு விவாகம் செய்யவேண்டிய வயதை அவர் நிர்ணயித்து விடவேண்டுமெனக்கூறினர். இத்தகைய முறையானது இந்தியாவிலிதற்குமுன் அனுஷ்டிக்கப்படவேயில்லை. மேலும், இன்ன வயதில் தான் ஒரு பெண்ணுக்கு விவாகமாக வேண்டுமென சட்டப்பூர்வமாக நிர்ணயித்த பிறகு, அக்குறித்த வயதிற்கும் குறைந்த வயதிலேலேயே பெண்களுக்கு விவாகங்கள் நடைபெற்றால், அவ்வித விவாகங்களை சட்டப்பிரகாரம் செல்லுபடிய காதவாறு செய்யவேண்டுமெனவும் விரும்பினர். இத்திட்டத்தை சட்டசபையில், ஆலோசிக்கவேண்டுமென 1-2-1927ல் பிரேரேபித்தார். ஆனல், எழுமாதங்களுக்கப்பால்தான் அத்திட்டமானது சட்டசபையில் விவாதத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்திய சட்சபையில் 15-9-1927 தேதியன்று நடைபெற்ற வாதானுவாதமானது, இந்தியாவின் எல்லாபாகங்களிலும் ஒரு பெரிய உக்கிரத்தை யுண்டாக்கி விட்டது. சட்டசபை அங்கத்தினரும், அத்திட்டத்தை பிரேரேபனை செய்தவருமான திரு. சாரதா அவர்கள் தம்முடைய முழு வல்லமையையும் பிரயோகித்துத் தமது எதிரிகளைத் தாக்கினர். அவர், 'ஆலோசிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்குமித்திட்டமானது பெண் குழந்தைகளுக்கும்— இந்துக்களுக்குள்ளாகவும் கூட, சில சாசுவதமான உரிமைகளிருக்கின்றதென்பதை யாவருமறிந்து கொள்ளுவதற்காக வேண்டி செய்யப்படும் ஓர் அடக்கமுள்ள வருவதையும், அவர்கள் க்ஷீணித்துப் போவதற்கும் அகாலமரணமடைவதற்கும் முக்கியக் காரணமாயிருந்து வருவதையுமொழித்தவர்களாவோம்" எனக்கூறி, இவைகள்தான் தம்முடைய அபிப்பிராயங்களெனவும் அறிவித்தார். மேலும், 'கணவனுக்குரிய உரிமைகளை நிர்ணயிக்கும் சம்மதவயதின் மசோதாவைப் பொறுத்த வரையிலும், அது இறந்துபோய்விட்டதென வே கூறப்படவேண்டும்........... புனர் ஜன்மமும், திருப்பப் பிழைத்தலும் அசாத்தியமாயிருக்கும் பொழுது நாம் மக்களினருகே நின்று, மனிதர்களின் முக்கியாம்சத்தினின்று மனுஷர்கள் தவறி நடந்து, அழிந்துபோகும்

சுயராஜ்யம் வந்த பிறகு (அதாவது அன்னிய ஆட்சி ஒழிந்த பிறகு) செய்யப்படும் சமூக சீர்திருத்த வேலைத்திட்டம்.

1. The article in the constitution relating to Fundamental Rights, shall include a guarantee to the communities concerned of protection of their culture, languages, scripts, education, profession, practice, religion and religious endowments.

2. Personal laws shall be protected by specific provision to be embodied in the Contitution,

3. Protection of political and other rights of minority communites in various provinces shall be the concern, and be within the jurisdiction of the Federal Government.

1. சுயராஜ்ய அரசாங்கத்தில் ஒவ்வொரு வகுப்பாருடையவும் அவரவர்களது கலைகள், நாகரீகங்கள், பாஷை, கல்வி, தொழில், பழக்க வழக்கம், மதம், மததர்ம சொத்துக்கள், ஸ்தாபனங்கள் முதலியவைகளைக் காப்பாற்றுதலாகியவைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதாக உறுதி கூறி, உத்திரவாதமளிக்கப்படும்.

2. ஒவ்வொரு சமூக தனிப்பட்ட உரிமைகளையும் பற்றிய சட்டங்களும் காப்பாற்றப்படும் படியானதிட்டத்தையும் சேர்க்கப்படும்.

3. சிறுபான்மை வகுப்பாருக்கு ஒவ்வொரு மாகாண விஸ்தீரணத்திலும் அரசியல் உரிமையும் மற்ற இதர உரிமைகளும் காப்பாற்றபபடும் படியான திட்டம் ஐக்கிய அரசியல் திட்டத்தில் இருந்துவரும்.

என்பவைகளாகும்.

முயற்சியே யாகும். நாகரீகம் வாய்ந்த அரசாங்கமென நடித்துவரு மெந்த அரசாங்கமும் அவர்களைக் காப்பாற்ற வேண்டியது தங்களுடையக் கடமையென மதிக்கும்...........'யென உரைத்தார்.

முதலாவதாக, பாலிய விதவைகளை அதிகரிக்கச் செய்து கொண்டு வரும் "நாசகரமான வழக்க"த்தைத் தடைசெய்ய வேண்டும். இரண்டாவதாக, பெண்கள் சிறுவயதிலேயே தாய்மார்களாவ தினின்றும் அவர்களைத் தடைசெய்ய வேண்டும். அப்பொழுதுதான், "நமது வாலிப மக்க (ஆண்—பெண்)ளின் தேக முன்னேற்றத்திற்கும், மன முன்னேற்றத்திற்கும் முக்கியத் தடையாயிருந்து பொழுது நாம் அவர்களைப் பார்த்துக்கொண்டே யிருப்பதா?" எனவும் அவர் உரைக்கின்றார்.

சட்டசபை அங்கத்தினரான மற்றொரு இந்து அங்கத்தினராகிய திருகுமார் கங்காநந்து சிம்ஹா என்பவர், 'மொத்தமாக எடுத்துக்கொண்டோமேயானல் இந்து சமூகமானது இப்பொழுது தன்னுடைய தேகவலிமையைப் பாழாக்கிக்கொள்ளும் துறையிலேயே சென்றுகொண்டிருக்கின்றதெனவும், அப்படிச் செல்லும்பொழுது அது தன்னுடைய அறிவு சம்பந்தமான துறையில் சீர்கேடடைந்து வருவதுமல்லாமல் அறநெறி, நீதிநெறியாகியத் துறைகளிலும் நிர்மூலமாகிவிடக்கூடிய அடையாளங்கள் காணப்படுகின்றதென்பதை இந்துவாயிருக்கக்கூடிய ஒவ்வொருவனும் அறிந்தேயிருக்கிறான். .... [பாலிய விவாகமானது] நமது சந்ததிகளின் உயிர்நிலையை நிர்மூலமாக்கிக்கொண்டே வருகின்றது. ஆகையினுல் இதை நாமிப்படியே இன்னும் அனுமதித்துக் கொண்டே வருவோமானல் அப்பொழுது நம்முடைய சந்ததிகளை நாமே கொலை செய்தவர்களாவோம் ....'என உரைத்திருக்கின்றார்.

மூன்றாவதாக மற்றொரு இந்து அங்கத்தினராகிய திரு. முன்சி ஈஸ்வர்சரன் என்பவர் 'இந்து சமூகமானது க்ஷீணநிலை யடைந்து கொண்டே வருகின்றது. நாமிவ்வாறாக நாளாவட்டத்தில்க்ஷீணித்துக்கொண்டே வருவதற்குப் பாலிய விவாகமுமொருகாரணமாகும்............. அதனுல் உண்டாகிய அழிவையும் நாசத்தையும் நாமறிவோம். நாமிப்பொழுது எப்படி யிருக்கின்றோம்? எந்த நிலைமையிலிருக்கின்றோம்?.......... நாம் இன்று யோசனை செய்து கொண்டிருக்கும் விஷயமானது ஓர் பெரிய பயத்தையுண்டாக்கக்கூடிய விஷயமாயிருக்கின்றது. ஆகையால் நான் யாவரையும் அதனுடைய முக்கியத்தையும் அவசியத்தையும் ஜாக்கிரதையாயுணர்ந்து கொள்ளுமாறு உண்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்' என்பதாக எடுத்துரைக்க தமது ஆசனத்தினின்றும் கிளம்புகின்றார்.

ஆனல், விவாதத்தின் பயனாக வெளியான உண்மைத்தத்துவமென்னவென்றால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இந்து அங்கத்தினர்கள் யாவரும் தர்க்கத்துக்குட்பட்ட முக்கிய அம்சங்களுக்கொத்துழைப்பதை விட்டுவிட்டு அவர்களவைகளுக்கிசையாமலிருந்ததேயாகும். இக்குறித்த விஷயங்கள் யாவும் அவ்வங்கத்தினர்களுக்குட்பட்டப் பிரதேசங்களில் அவர்களுடைய வாணுட்களில் தினந்தோறும் நடை பெறக்கூடிய சம்பவங்களே யாகும்.

இவ்வண்ணமாகத்தான் சென்னை அங்கத்தினராகிய திரு. எம். கே. ஆச்சாரியார் அவர்கள் இவ்விஷயத்தை ஓர் அற்பமானதெனவே யெண்ணிக் கொண்டிருக்கின்றார். அவர் 'வார்த்தைகளை சரிவர அறிந்து கொள்ள முடியாத ஒரு கஷ்டமே இவ்விஷயத்தில் பெரிய சங்கடத்தை விளைவிக்கக் கூடியதாயிருக்கின்றது. ஏனெனில் இந்து அல்லாத ஒருவனிடம் 'விவாகம்' என்னும் பதத்தை நாம் உரைப்போமானல் அவனுடைய மனதில் உடனே அந்த வார்த்தைக்கு ஆணும் பெண்ணும் மனிதனும் மனைவியுமாக ஒன்றாகவே சேர்ந்து தங்களுடைய வாணுட்களை நடாத்திக்கொண்டு வருவார்களென்கிற எண்ணமானது உண்டாகிவிடுகின்றது. இந்து சமூகங்களில் ஆனல் அப்படியல்லவே

தொடர்ச்சி 1ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சுபாஷ் சந்திரபோஸ் எதேச்சாதிகாரமும் நயவஞ்சகமும்.

போஸ்மீது கண்டனத்தீர்மானம்.

தொழிலாளர் சங்கக்கூட்டத்தின் விவரமான அறிக்கை.

—:0:—

5—7—31 தேதி கல்கத்தாவில் நடைபெற்ற தொழிலாளர் காங்கிரஸ் கூட்டத்தில் நடந்த சம்பவத்தின் மீது திரு. எஸ். வி. தேசபந்து, டாக்டர் பூபேந்திரநாத் கத்தர், திரு. பி. ஜி. ரான்தேவ் வேறு பலர் சேர்ந்து கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்: —

நிர்வாகக் கமிட்டித் தலைவர் திரு. எஸ். வி. போஸ், ஒன்றும் சொல்லாமல் திடீரென்று கூட்டத்திலிருந்து வெளியே சென்றதும் தொழிலாளர் காங்கிரசில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. பிற்பாடு சர்வகலாசாலை மண்டபத்தில் மாலை 4 மணிக்குக்கூட இருந்த தொழிலாளர் மகாநாடு காலவரம்பு கூறாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதாக திரு. எஸ். முகுந்தலால் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்று காணப்பட்டது. இந்த நெருக்கடி ஏற்படுவதற்கு உண்டான காரணங்களை நிர்வாகசபை அங்கத்தினர்களாகிய நாங்கள் பொது ஜனங்கள் தெரிந்து கொள்ளுமாறு வெளிப்படுத்துகிறோம்.

யோக்கியதா பத்திரம் வழங்கும் கமிட்டியின் அறிக்கையைப் பற்றி ஆராய்வதற்காக ஞாயிற்றுக்கிழமை காலை நிர்வாகக்கமிட்டிக்கூட்டம் கூடிற்று. அறிக்கை புதியசங்கங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தது. அதன்படி அகில இந்தியத் தொழிலாளர் சங்க உபதலைவரும் யோக்கியதா பத்திரக்கமிட்டி அங்கத்தவருமாகிய தோழர் பங்கிம் முக்கர்ஜி புதிதாகச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தை முதலில் ஆராயவேண்டுமென்று ஒரு பிரேரேபணை கொண்டுவந்தார். திரு போஸ் அப்பிரேரேபணை ஒழுங்கில்லையென்று கூறி பம்பாய் கிர்னி காம்கார் சங்க விஷயம் முதலில் ஆராய்வதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டார். எதேச்சாதிகாரத் தீர்ப்பு அளித்தது திரு. போசுக்கு இது முதல் தடவையன்று. யோக்கியதைகள் முடிவாக பரிசீலனை செய்து முடியும்வரை நாகபுரி மகாநாட்டில் தீர்மானித்ததுபோல் அங்கத்தினர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கி விடுகிறதென்று கட்டளை பிறப்பித்திருந்தும் திரு. போஸ் முந்திய நாள் கூட்டத்தில் பம்பாய் கிர்னிகாம்கார சங்கத்திற்கு நிர்வாகக் கமிட்டியில் இரண்டு பிரதிநிதித்துவமே கொடுக்கப்படுமென்று தீர்ப்புச் சொன்னார். கிர்னி காம்கார் சங்கத்தில் 40,000 அங்கத்தினர்களிருப்பதால் அதற்கு நான்கு பிரதிநிதித்துவங்கள் கொடுக்கவேண்டுமெனறு நாகபுரியில் தீர்மானித்தது எல்லோருக்கும் தெரியும். யோக்கியதையை அறியும் கமிட்டியைத்தன் சொந்த நண்பர்களால் கைப்பற்றும்படி செய்வதற்கு சாதாரண அங்கத்தினர் என்ற தமது வோட்டையும் தலைவர் என்ற ஸ்தானத்திற்குரிய விசேஷ வோட்டையும் கொடுத்து ஒரு கமிட்டியை நியமித்தார். கால்மோரி தகா வேலைத் தொழிலாளர் சங்கத்திற்கு அச்சங்கத்தின் அங்கத்தினரல்லாதவரும் சிறிதும் யோக்கியதையில்லாதவருமாகிய ஒருவரை நியமிக்க வேண்டுமென்று தமது எதேச்சாதிகாரத்தை உபயோகித்ததுடன் அப்பிரதிநிதித்துவத்தைத் தோழர் ஜி. செத்திக்கு வழங்க மறுத்து விட்டார். தோழர் ஜி செத்தியை அச்சங்கக்காரியதரிசியே பிரதிநிதித்துவத்திற்கு யோக்கியதையுடையவர் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். கடந்த வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட கஷ்டத்தினால் பிரவேசக் கட்டணத்தின் ஒரு பகுதியைக் கட்டவேண்டாமென்ற பிரத்தியேக உத்தரவு கொடுக்கவேண்டுமென்ற தீர்மானத்தை வோட்டுக்கு விடக்கூடாதெனத் தடுத்து விட்டார். ஞாயிற்றுக்கிழமை இத்தீர்மானத்தில் அவர் நடந்துகொண்ட மாதிரியே இந்நெருக்கடியை உண்டுபண்ணிற்று. பல சங்கங்களின் பேச்சுகளைக் கேட்காமல் எதேச்சாதிகாரமாக நடந்து தமது பிற்போக்கான நடத்தைக்கும் நயவஞ்சகக்கொள்கைக்கும் தொழிலாளர் சங்கத்தின் அநுமதியைப் பெறுவதற்காக நடவடிக்கைகளை திரு. போஸ் நடத்திக்கொண்டு போகிறார் என்பது வெளியாயிற்று. தோழர் பி. டி. ரான்டைவ் தலைவர் போஸ் மீது ஒரு கண்டனத்தீர்மானம் கொண்டு வந்தார். அத்தீர்மானம் கூட்டத்தில் இருக்கும் போதே திரு. போஸ் தலைவர் ஸ்தானத்தை விட்டு விலகும்படி கேட்கப்பட்டார். அவர் அத்தீர்மான வாதத்தில் கலந்து கொள்வதில்லையென்று உறுதி கூறினமையால் தலைவர் பதவியிலிருக்கும்படி அநுமதிக்கப்பட்டார். பிறகு தீர்மானம் வாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போது திரு. போஸ் திடீரென்று கூட்டத்தைவிட்டு கூட்டத்தாருக்கு அறிவிக்காமலே வெளிச்சென்று விட்டார். அதை கூட்டத்திலுள்ளவர்களுக்கு பொதுக்காரியதரிசி அறிவித்தார். உடனே கூட்டத்தில் திரு. போசைச் சேர்ந்தவர்கள் குழப்பத்தை உண்டுபண்ணினர். உடனே திரு. போஸ் திரும்பி வந்து கூட்டம் மாலை மூன்று மணி வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதெனக் கட்டளை பிறப்பித்தார், திரு. போஸ் வெளிச்சென்றதையும் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டதையும் நோக்கில் கண்டனத்தீர்மானத்தை வோட்டுக்கு விடக்கூடாதென நினைத்தே அக்காரியங்கள் துணிகரமாகச் செய்யப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. நிர்வாக சபைக்கூட்டம் மீண்டும் கூடியவுடன் திரு. போசை சார்ந்தவர்கள் கூட்டத்தை நடத்த வேண்டாமென ஓர் தீர்மானம் கொண்டுவந்தனர். அத்தீர்மானம் திரு. போசின் வோட்டால் நிறைவேறிற்று. கண்டனத் தீர்மானமும் தோற்றுப்போய் விட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் திரு. போசும் தீர்மானத்திற்கு விரோதமாகத் தமது வோட்டைக் கொடுத்தார். தனதுமரியாதைக்கும் அவர் தம்மீதுகொண்டுவரப்பட்ட கண்டனத்தீர்மானத்தில்கலந்து கொள்வதில்லை என்று உறுதி கூறியதற்கும் விரோதமாக அவர் தமது பக்கம் தமது வோட்டைக்கொடுத்தபோது பல அங்கத்தினர்கள் அதைத்தடுத்தனர். இந்த சமயத்தில் மணி 4 ஆகி விட்டதால் நிர்வாக சபை அங்கத்தவர்களிற் பலர் நிர்வாகசபைக் கூட்டத்தை ஒத்திவைத்து விட்டு மகாநாட்டை நடத்த வேண்டுமென்று கூறினர். மகாநாட்டில் வாதத்திற்கிடமில்லாத விஷயங்களைப்பற்றிப் பேசலாமென யோசனைக் கூறப்பட்டது. அதைப் பற்றி கூட்டத்தாருக்கு வாதிக்க இடங்கொடாமல் யோசனையும் ஒழுங்கல்லவென்று தமது தீர்ப்பைச்சொல்லி விட்டார். இதன் பேரில் சர்வகலாசாலை மண்டபத்தில் கூடிய தொழிலாளர்கள் ஆத்திரம் பொறுக்க முடியாமல் ஆல்பர்ட் மண்டபத்துக்குள் ஆவேசத்துடன் நுழைந்தார்கள். உடனே மண்டபத்தைவிட்டு திரு. போசும் அவரைச் சார்ந்தவர்களும் வெளியே நடந்தார்கள். இதற்குப்பிறகு தொழிலாளர்கள் கூட்டம் தோழர் பங்கிம் முக்கர்ஜி தலைமையில் நடந்தது. அக்கூட்டத்தில் திரு. போசின் மீதும் அவரைச் சேர்ந்தவர்கள் மீதும் கண்டனத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பின்னால் தெருவில் ஊர்வலம் நடத்தினர்.

இதிலிருந்து திரு போசும் அவரைச்சார்ந்தவர்களும் தங்கள் பிற்போக்கான கொள்கைக்கு வேண்டிய பலத்தைப் பெறும்வரை தொழிலாளர் சங்கத்தின் நடவடிக்கைகளை நடைபெறாமல் தடுத்துவிட முயற்சித்திருக்கிறார்களென்றும், வட்ட மேஜை மகாநாடு ஜினிவா மகாநாடு இவைகளில் பிரதிநிதித்துவம் பெறுவதற்காக சனிக்கிழமை தொழிலாளர் சங்கத்தைத் திறந்து வைக்கும்போது திரு. போஸ் நன்கு வரவேற்கப்படாததுவே அக்கூட்டத்தாரை ஞாயிற்றுக்கிழமை இவ்வாறெல்லாம செய்யுமாறு தூண்டியிருக்கும்.

(அசோசியேட்டட் பிரஸ்)

"திராவிடன்"

பத்தாங்மலாக்கா இந்தியர் சங்கம்.

இந்திய தொழிலாளிகளுக்கு உதவி செய்யவேண்டிய முக்கியநோக்கத்தோடு மேற்கண்ட சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு தலைவர் உபதலைவர் கமிட்டி அங்கத்தினர் முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என காரியதரிசி அறிவிக்கிறார்.

குடி அரசு

ஈரோடு 1931 ௵ ஜூலை ௴ 19௳

இன்னுமென்ன சந்தேகம்?

"பிராமணா! உன் வாக்குப் பலித்தது!"

—

ஒரு பார்ப்பனன் தன் பெண்ஜாதியின் நடத்தையில் சந்தேகங்கொண்டு அடிக்கடி அந்தம்மாளை "விபசாரி, விபசாரி" என்று கூறிக்கொண்டே வந்தான்.

ஆனால் அந்தம்மாள் தன் புருஷனின் சந்தேகத்திற்கிடமான காரியங்களுக்கெல்லாம் அவ்வப்போது பல சாக்குப் போக்குகள் சொல்லி புருஷனை அடக்கிக்கொண்டே வந்தாள்.

இப்படி இருக்கையில், அந்த பார்ப்பான் தன் மனைவி அன்னிய புருஷனிடம் சம்பந்தப்பட்டுக கொண்டிருக்கையில் ஒரு நாள் கைப்பிடியாய் பிடித்துவிட்டான். அப்பொழுது அந்த அம்மாள் வேறு எவ்வித சாக்குப் போக்கும், சமாதானமும் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாமல் போய்விட்டதால் "பிராமணா! உன்வாக்குப் பலித்து விட்டது!! அதற்கு நான் என்ன செய்யட்டும்?" என்று பதில் சொல்லி மறுபடியும் புருஷன் மீதே குற்றத்தைச் சுமத்தினாள்.

அதாவது, புருஷனைப் பார்த்து "நீ அடிக்கடி என்னை விபசாரி, விபசாரி என்று உன் வாயால் சொல்லிக்கொண்டே வந்ததாலல்லவா (பிராமணன் வாக்கு பொய்க்காது, அது எப்படியும் பலித்துவிடும்) என்று சாஸ்திரங்களில் சொல்லி இருக்கின்றபடி நீர் பரிசுத்தமான பிராமணரானதால் உம்து வாக்குப் பலித்து விட்டது. உமது வாக்குப் பலிப்பதற்காகவே இந்தப்படி கடவுள் செயலால் ஏற்பட்டுவிட்டது. அதற்கு நான் என்ன செய்வேன்? நீர் ஏன் என்னை அப்படிச் சொன்னீர்?" என்பதாகச் சொன்னாளாம்!

அதேபோல் காங்கிரஸ்காரியக் கமிட்டியும், திரு. காந்தியும் சேர்ந்து 12—7—31-௳ செய்த பிரஜா உரிமை தீர்மானமானது நாம் காங்கிரசையும் அதன் தலைவர்கள் என்பவர்களையும் பற்றி, அவர்கள் எப்படிப்பட்ட அபிப்பிராயக்காரர்கள் என்று குற்றம் சொல்லி வந்தோமோ, அதே அபிப்பிராயம் இனி வேறு யாரும் வேறு எவ்வித வியாக்கியானமும், தத்துவார்த்தமும் செய்ய முடியாதபடி நன்றாய் வெளிப்படையாய் அழுத்தந் திருத்தமாய் சொல்லப்பட்டு விட்டது.

அது என்னவென்றால்,

அரசியல் சட்டத்தில் ஜனங்களுடைய ஜீவாதாரமான உரிமை என்பது பற்றிய, விதிப்பிரிவுகளில் இந்தியாவில் உள்ள சகல சமூகத்தாருக்கும் "அவர்களது கலைகள், சமூக நாகரீகங்கள், பாஷைகள், எழுத்துக்கள், தொழில்கள் பழக்கவழக்கங்கள், மதம், மத தர்மங்கள் ஆகியவைகாப்பாற்றப்படும்" என்பதாக ஒரு உத்திரவாதம் அதாவது ஜாமீன் கொடுக்கப்படும் என்கின்ற நிபந்தனையும் சேர்க்கப்படும் என்பதாகத் தீர்மானித்திருக்கின்றார்கள். மற்றும்,

"ஒவ்வொரு சமூக உரிமைகளைப்பற்றிய சட்டங்களும் காக்கப்படும்" என்பதாகவும் "ஒவ்வொரு மாகாணங்களிலுள்ள சிறுபான்மை வகுப்புகளின் உரிமைகளின் அரசியல் உரிமை, மற்றும் இதர உரிமைகள் ஆகியவை காப்பாற்றப்படும் நிபந்தனையானது அரசாங்கத்தின் ஆதிக்கத்திற்குள் இருக்கும்" என்பதாகவும் தீர்மானித்து இருக்கின்றார்கள். இது அசோசியேட் பிரஸ் சேதியாகும்.

மற்றும், 13-ந்தேதி வெளியான எல்லாத் தினசரிகளிலும் காணப்படுவதுமாகும்.

அன்றியும், இத்தீர்மானங்களை ஆங்கிலத்தில் உள்ளபடியே மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டுமிருக்கின்றன. ஆகவே, வாசகர்களுக்கு இவ்விஷயத்தில் இன்னுமென்ன சந்தேகம் இருக்கக் கூடும்? என்பது நமக்கு விளங்கவில்லை.

'கராச்சிக் காங்கிரசில் சமதர்மக் கொள்கை ஏற்பட்டு விட்டது" என்று வாய்த் தப்பட்டை அடித்ததெல்லாம் சுத்த 'ஹம்பக்' என்பதாகவோ, அல்லது அது அதனுடைய உண்மை அர்த்தத்தை அறிந்துகொள்ள முடியாத மக்களின் கூற்று என்பதாகவோ இப்போது யாவருக்கும் நன்றாய் விளங்கி இருக்குமென்றே கருதுகின்றோம். ஏனெனில், ஒவ்வொரு வகுப்பாருடைய, அதாவது இந்தியாவில் எத்தனை சமயத்தார், வகுப்பார் உண்டோ அத்தனை வகுப்பாருடைய உரிமைகளையும் பொருத்த கலை ஆதாரங்கள், அதாவது வேதசாஸ்திர புராணங்கள், அவர்களது பாஷைகள், பாஷை எழுத்துக்கள் வகுப்பு கல்விகள், வகுப்பு தொழில்கள், அந்தந்த வகுப்பு பழக்க வழக்கத்தில் இருந்துவரும் நடவடிக்கைகள், ஒவ்வொரு வகுப்பாருடைய மதங்கள், அதாவது சமயம், உட்சமயம், புறச்சமயம், அந்தந்த மததர்மங்கள், அதாவது கோவில், கோவில் சொத்து, மடம், மடங்களின் சொத்துக்கள், மததர்மமான மற்ற காரியங்கள் செய்வதற்கு விடப்பட்டிருக்கும் தர்ம சொத்துக்கள் ஆகியவைகள் எல்லாம் காக்கப்படும் என்பதாக காங்கிரஸ் உறுதிகூறி இருப்பதோடு உத்திரவாதமுமேற்றுக் கொண்டிருக்கின்றது.

ஆகவே, இது சமதர்மக்கொள்கையாகுமா? அல்லது சுயமரியாதைக் கொள்கையாகுமா? அல்லது நவஜவான் பாரதசபைக்கொள்கையாகுமா? அல்லதுபோல்ஸ்விக்கொள்கை யாகுமா? என்பதை நம் நாட்டு வாலிடர்களை யோசித்துப்பார்க்கும்படி விரும்புகின்றோம். இந்த மாதிரியான சுயராஜியம் ஏற்படுவதற்காக வெள்ளைக்காரன் இருக்கும் அரசியல் அதிகாரத்தைப் பறித்து இந்த மாதிரி உத்திரவாதம் ஏற்றுக் கொண்ட காங்கிரசுக் காரரிடமும் "மகாத்மா" இடமும் திரு ஜவஹர்லால் இடமும் ஒப்படைக்கலாமா? என்று நிதானமாய் யோசித்துப் பாருங்கள் என்று மறுபடியும் நினைப்பூட்டுகின்றோம். மற்றும் பார்ப்பனரல்லாத காங்கிரஸ் பக்தர்களே! இந்த உத்திரவாதமானது காரியக்கமிட்டிக்கு உயர்திருவாளர்கள் C. ராஜகோபாலாச்சாரியார், பண்டித மாளவியா ஆகிய "பிராம்மணோத்தமர்" களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய்த்தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதையும் உணருங்கள் என்றே சொல்லுகின்றோம். உலகில் வயிறுவளர்ப்பதேதான் பிரதானமான காரியம் என்று கருதி இருப்போமேயானால், மனித உருவாய் பிறந்ததற்கு வருத்தப்பட வேண்டியதுதான் என்பதே நமது அபிப்பிராயம். மற்றபடி சுயமரியாதையே பிரதானமானது என்று கருதுகின்றவர்களுக்குத்தான் மனிதனாய்ப்பிறந்ததைப்பற்றி சிலசமயங்களிலாவது மகிழ்ச்சியடைய இடமுண்டு என்று சொல்லலாம். நிற்க,

பம்பாய் காரியக்கமிட்டியின் உத்தரவாத தீர்மானத்தைக்கொண்டு காங்கிரசின் உண்மையான தன்மையை ஒருவரியில் கூறவேண்டுமானால் "காங்கிரஸ் என்பது சுயமரியாதைக் கொள்கைக்கு நேர்மாறான முரண்பட்ட ஸ்தாபனம்" என்று சொல்லுவதை விட வேறு என்ன சொல்ல முடியும்? என்று அறிவும், நாணயமும், மானமும் உள்ள மக்களை யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகின்றோம். நிற்க,

காரியக்கமிட்டியின் இந்த உத்திரவாத தீர்மானத்தைப் பற்றி தேசியப்பத்திரிகை என்று சொல்லிக்கொண்டு இருக்கும் "தமிழ்நாடு" பத்திரிகை 13௳ தனது உபதலையங்கத்தில் எழுதி இருப்பதையும் இந்தச்சமயத்தில் குறிப்பிடுகின்றோம். இந்த உபதலையங்கத்தின் ஒவ்வொரு எழுத்தும் வெகு நடுக்கத்துடன் எழுதப்பட்டிருந்தாலுங்கூட அதில் உண்மை ஒருவாறு வெளியாகியே விட்டது.

அதாவது:—

"இந்திய தேசிய காங்கிரசுக்கு தலைகுனியும்படியான காலம் வந்ததைக் குறித்து நாம் மிகவும் துக்கப்படுகின்றோம்"

"காங்கிரசின் தேசிய லக்ஷியம் இப்போது பின்னடையும்படி நேர்ந்து விட்டது"

"பிரதி வகுப்பாரின் பாஷை, எழுத்து, கல்வி, ஆசார அனுஷ்டானம், மதம், தர்ம சொத்துக்கள் ஆகிய விஷயங்களுக்குத்தக்க பாதுகாப்பளிப்பதாக (காங்கிரஸ்) காரியக்கமிட்டி கூறுவதின் கருதது நமக்கு விளங்கவில்லை"

"மற்றமக்களுடைய பிரஜா உரிமை, சுயமரியாதை, மனிதத் தன்மை ஆகியவற்றிற்குப் பங்கம் விளைவிக்காத வரையில் பிரதி மனிதனுடைய மதம், ஆச்சாரம், அனுஷ்டானம் பாது காக்கப்படும் என்று காரியக்கமிட்டி கூறி இருந்தால் அதன் பொருள் தெளிவாக ஏற்பட்டிருக்கும்"

"இந்தியாவில் சமதர்மத்தை நிலைநிறுத்துவதற்கு காரியக் கமிட்டியின் முடிவு முட்டுக்கட்டையாக அமையுமென்று அஞ்சுகின்றோம்"

என்பதாகக் குறிப்பிட்டு இருக்கின்றது.

இவை எப்படி இருந்த போதிலும் "இன்றைய தினம் இந்த நாட்டில் இருந்துவரும் ஜாதிமத பேதங்களும், ஆச்சார அனுஷ்டானங்களும், மதங்களும், மத தர்ம சொத்துக்களும் காப்பாற்றுவதற்காக நமக்கு சுயராஜியம் வேண்டும் என்ற கருத்தின் மீது தான் இன்றைய "தேசியக்கிளர்ச்சி" நம் நாட்டில் நடைபெற்று வருகின்றது என்று சொன்னவர்களின் வார்த்தைகளில் எந்த எழுத்தாவது தப்பிதமானது என்று இதிலிருந்து யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம்.

அன்றியும், காங்கிரஸ் கூட்டத்தில் இத்தனை காலம் பிரஸ்தாபிக்கப்படாத ஒரு புதிய விஷயமும் இந்த ஜவாப்தாரி தீர்மானத்தில் சேர்க்கப்பட்டு விட்டது கவனிக்கத்தக்கதாகும். அதாவது பழக்க வழக்கம், தொழில், மத தர்ம சொத்துக்கள் ஆகியவைகளும் காப்பாற்றப்படும் என்பதோடு, அதற்கு ஜவாப்தாரித்தனமும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதாகும்.

ஆகவே, இனிமேல் இந்தியாவைக் காங்கிரஸ் பார்ப்பனீய சுயராஜியமாக்க இனிசெய்ய வேண்டியவேலை எதுபாக்கி? என்பதாக நமக்கு விளங்கவில்லை.

இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்தால், காங்கிரசும், காந்தி கோஷ்டியும் இப்பொழுது உலகத்தில் ஏற்பட்டிருக்கும் சமதர்ம-பொதுவுடைமை உணர்ச்சியை அழிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்டு பாமர மக்களுக்குச் செய்யும் சதியும், துரோகமும் அல்லவா என்று யோசித்துப்பார்க்கும்படி பொது மக்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இந்த உண்மையை உணர்ந்துதானே ருஷிய சமதர்மக்காரர்கள் "காங்கிரஸ் பொது ஜனங்களுக்கு துரோகமான'தென்றும், "காந்தி பொது ஜன துரோகி" யென்றும் தைரிமாய்ப்பிரசாரம் செய்துவருகின்றார்கள்: அன்றியும் மாஸ்கோவில் இருந்து வந்த சேதி ஒன்று "தமிழ் நாடு"வில் பிரசுரித்திருக்கின்றபடி "ருஷியாவில் 'இந்தியா'' என்பதாக ஒரு நாடகம் ஆடப்படுவதாகவும், அதில் பிரிட்டிஷ் ஆட்சி கொடுங்கோன்மையானதென்றும், காந்தி பொது ஜனங்களை தப்பான வழியில் ஏமாற்றி நடத்திக்கொண்டுபோகின்றவர் என்றும் கருத்துவைத்துச் சரித்திரம் எழுதி நாடகம் நடைபெறுகின்றதென்பதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இவற்றையெல்லாம் பார்த்த பிறகும், நன்றாய் உணர்ந்த பிறகும், இனியும் சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசைப்பற்றி சிறிது கூட தாட்சண்யம் பார்க்கவேண்டியதில்லை என்பதாகவும், அது ஒரு பெரிய ஜன சமூகத்துரோக சபையாகவும், தாழ்த்தப்பட்ட ஏழை மக்களை ஏமாற்றிக் கழுத்தறுக்கும் வஞ்சக சபையாகவும் இருக்கின்ற உண்மையைப் பொது ஜனங்களுக்குப்படும்படி விளக்கவேண்டியதையே முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இந்தக் கடமைக்கு யாரும் பயப்படுவது சிறிதும் மனிதத்தன்மையாகாதென்றே தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இதற்காக நாம் யாரையும் காங்கிரஸ் கூட்டத்தில் கலகம் செய்யும்படியாகச் சொல்லவில்லை. அது மிகவும் தப்பானதும், பயங்காளித்தனமானதுமான காரியமாகும். ஆதலால் ஒவ்வொரு இடங்களிலும் இதற்கென்றே தனிக்கூட்டம் கூட்டியே பேச வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லுகின்றோம்.

அப்படிப்பட்ட கூட்டத்தில் காங்கிரசுக்காரர்கள் குழப்பம் செய்தால் அதற்காக யாரும் பின் வாங்க வேண்டியதில்லை. அதன் மூலமாகவே காங்கிரசு என்பது 'காலித்தனமும் உடையது' என்பதை ருஜூப்பிக்க ஒரு சந்தர்ப்பம்கூடப்பெறலாம். ஆகையால் அதற்குப் பயப்படவேண்டியதில்லை.

ஆனால், "சுயமரியாதைக்காரர்கள் என்ன செய்து விட்டார்கள்?" என்று கேட்டால், "காங்கிரசின் புரட்டை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள்" என்று சொல்லிவிடும் பதிலே அதற்குப் போதுமான பதிலாகும்.

ஏனெனில், சுயமரியாதைக் கொள்கைகளுக்கு நேர்மாறான கொள்கைகளேதான் பெரிதும் காங்கிரசில் இருப்பதை மனதார உணர்ந்தும் "சுயமரியாதையும், காங்கிரஸ் கொள்கையும் ஒன்று தான்" என்று சிலர் விஷமப்பிரசாரம் செய்வதால் அதை ஜனங்கள் அறியும்படி செய்வதன் மூலமே சுயமரியாதைக் கொள்கைகளை எடுத்துச் சொல்ல வசதி ஏற்படுகின்றது எனவே இந்த சமயத்தில் அலட்சியமாய் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொண்டு இதை முடிக்கின்றோம்.

மூன்றாவது சுயமரியாதை மகாநாடு.

விருதுநகரில் நடை பெறும்.

மூன்றாவது சுயமரியாதை மகாநாடு, வாலிபர் மகாநாடு, பெண்கள் மகாநாடு, ஆகிய மூன்று மகாநாடுகளும், அவைகளுக்கென விருதுநகரில் அமைக்கப்படும் சிங்காரப் பந்தலில் 1931 ஆகஸ்ட்மீ ௧. 9, தேதிகளில் சனி, ஞாயிறு கிழமைகளில் நடை பெறும்,

சுயமரியாதை மகாநாட்டிற்கு இந்திய சட்டசபை உபதலைவர் உயர்திருவாளர் ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., அக்கிராசனம் வகிப்பார்.

உயர்திரு. W. P. A. சௌந்திரபாண்டியன் M.L.C அவர்கள் வரவேற்புக்கழகத்தலைவர்.

வாலிபர் மகாநாட்டிற்கு திருவனந்தபுரம் சட்ட சபை அங்கத்தினர் திருவாளர் கே. நாராயணப் பெருமாள் அவர்கள் எம். எல். சி. தலைவர்.

உயர்திரு. V. V. தனுஷ்கோடி அவர்கள் B. A. வரவேற்புக்கழகத்தலைவர்.

பெண்கள் மகாநாட்டிற்கு ஸ்ரீமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மையார் அவர்கள் தலைவி.

ஸ்ரீமதி பத்மாவதி திருவண்ணாமலை அம்மையார் அவர்கள் வரவேற்புக்கழகத் தலைவி.

சுயமரியாதை மகாநாட்டைத்திறந்து வைப்பதற்கு மீனம்பள்ளி ஜமீன்தாரர் திரு. கே. சி. எம். வெங்கிடாசலம் ரெட்டியார் அவர்களைக்கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பிரவேசக்கட்டணம் சாப்பாட்டுடன் போஷகர் ரூ. 10. உபசரணைக்கமிட்டி ரூ. 5. டெலிக்கேட் ரூ. 2. பெண்களுக்கு சாப்பாட்டுடன் பிரவேசம் இனுமாக அளிக்கப்படும்.

சாப்பாட்டு வேலைகளும் கொட்டகை ஏற்பாடுகளும் தனித்தனிக்கமிட்டிகள் நியமிக்கப்பட்டு துரிதமாக நடை பெற்றுவருகின்றன,

அங்கத்தினர்களும் அபிமானிகளும் விஜயம் செய்வதுடன் மகாநாடு சம்பந்தமான தங்கள் அபிப்பிராயங்களை காரியதரிசி திரு. வி. வி. ராமசாமி அவர்களுக்கு லெட்டர் மூலம் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம் என விளம்பர அதிகாரி எழுதுகிறார்.

ஈரோடு முனிசிபாலிட்டியும், சென்னை அரசாங்கமும்.

ஈரோடு மகாஜனங்கள் கண்டனம்.

ஈரோடு முனிசிபல் டவுனுக்கு எலக்ட்ரிக் விளக்குகள் போடும் விஷயமானது 1922-ம் ஆண்டு முதல் ஈரோடு முனிசிபல் கவுன்சில் ஆலோசனையிலிருந்து வந்ததாகும். 1928ம் வருஷம் முதல் இவ்விஷயமாய் தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட்டு கவர்ன்மெண்டாருடன் கடிதப்போக்குவரவுகள் செய்யப்பட்டு வந்தன. அப்போது மைசூர் கவர்ன்மெண்டார் மேட்டூருக்கு மின்சாரசக்தி சப்ளை செய்துவந்தபடியினால் மேட்டூர் ஹெட்வர்க்ஸ்களிலிருந்தே ஈரோடு முனிசிபாலிட்டிக்கு மின்சாரசக்தி கொண்டுவரவேண்டுமென்ற ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் பிரேரபனையானது உடனே மதராஸ் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு விட்டது.

ரோஜா முத்தையா ஆ[ராய்]ச்சி நூலக அறக்கட்டளை

பிறகு ஈ. மு. கவுன்சில் மைசூர் கவர்ன்மெண்டாருடன் இதுவிஷயமாய் கடிதபோக்குவரவுகள்செய்து மைசூர் கவர்ன்மெண்டுஎலக்டிரிக்கல் இன்ஜினீயரவர்களைசந்தித்துப் பேசி முடிவுசெய்யும் பொருட்டு ஈரோடு முனிசிபல் சங்கத்தார் ஒரு கமிட்டியை நியமுகம் செய்தார்கள். அந்தக் கமிட்டியார் மைசூர் கவர்ன்மெண்டுடன் கலந்துபேசிய பிறகு அவ்விஷயம் அனுகூலமாய் முடிவுபெறும் நிலைமையில்இருக்கையில் மதராஸ் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் பிரவேசித்ததின் பேரில் திடீரென்று மைசூர் கவர்ன்மெண்டார் மின்சாரசக்தி சப்ளை செய்யமறுதளித்துவிட்டார்கள். பின்பு ஈரோடு கவுன்சில் தாங்களே இயந்திரம் வைத்து மின்சார சக்தியை உற்பத்தி செய்து வினியோகிப்பது நலமெனக் கருதி மெட்ராஸ் மெஸர்ஸ் சாரி அண்டுசாரிலிமிடெட் கம்பெனியாரிடம் கேட்கத் தீர்மானித்து அவர்களை யோசனை கூறும் இன்ஜினீயர்களாக வைத்துக் கொண்டு இதற்கு வேண்டிய பிளான்களும் எஸ்டிமேட்டுகளும் தயார்செய்யும்படி முனிசிபல் சங்கத்தார் அவர்களுடன் ஏற்பாடு செய்தார்கள். இது கவர்ன்மெண்டாருக்கு தெரிவிக்கப்பட்டதுடன் இந்த வேலைகளை செய்து முடிப்பதற்காக ரூ. 2½ லக்ஷம் கடன் கொடுக்கும்படி சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அதன்மீது கவர்ன்மெண்டு இடை வருஷத்தில் கடன் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை என்பதாக தெரிய வந்ததால், கோயம்புத்தூர் டிஸ்திரிக்ட்போர்டாரிடம் கடன் வாங்குவதற்கு கவர்ன்மெண்டைஅனுமதிகேட்க கவர்ன்மெண்டார்தங்களது 12-4-29 தேதிய13546-1 L & M மிமோராண்டத்தின் மூலம் கடன்வாங்கிக்கொள்ள உத்திரவும் அளித்தார்கள். அதன்பேரில் கோயமுத்தூர்டிஸ்திரிக்ட்போர்டாரவர்களை ஈரோடு முனிசிபாலிட்டியார் கடன் கேட்டதில் அவர்கள் வருஷம், 100க்கு 5 ரூ. வீதம் வட்டிகொடுத்து 20 வருஷத்தில் கடன் தொகையைதிருப்பக் கொடுத்துவிடவேண்டுமென்றநிபந்தனையின் பேரில் கடன்கொடுக்க சம்மதித்தார்கள். உடனே 7-5-29 ல் இதுவிஷயம் கவர்ன்மெண்டுக்கு தெரிவிக்கப்பட்டு அவாகளின் அங்கிகாரம் கோரப்பட்டது. இதற்குள் அதோடுகூடவே இதற்கு வேண்டிய பிளான்களும் எஸ்டிமேட்டுகளும் சங்கத்தாரின் எலக்ட்ரிக்கல் இன்ஜினீயர்களால் தயாரிக்கப்பட்டு பிளான் எஸ்டிமேட்டுடன் லைசென்சுக்காக ஒரு அப்ளிகேஷனும் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டது. இதன்பேரில் இரண்டுமாதம் பொறுத்து "முனிசிபாலிட்டியாருக்காவது அல்லது வேறுயாதாமொரு கம்பெனிக்காவது லைஸென்ஸ் கொடுத்து மின்சாரசக்தியை ஈரோட்டிற்கு கொண்டுவந்து சில்லரையில் செலவு செய்யும் விஷயம் ஆலோசனையிலிருந்துகொண்டிருப்பதாய் ஹைட்ரோ எலக்ட்ரிக்சிப் இன்ஜினீயரிடமிருந்து தமக்குத்தகவல் வந்திருப்பதாயும் அதனால் ஈரோடு கவுன்சில் அனுப்பி வைத்த பிளானும் எஸ்டிமேட்டும் பரிசீலனை செய்வதை நிறுத்தி வைத்திருக்கிறது" என்று கவர்ன்மெண்டு எலக்டரிக் இன்ஸ்பெக்டரிடமிருந்து 9-9-29ல ஒருகடிதம் வந்தது.

விஷயம் இப்படியாக இருக்கையில் கல்கத்தா ஆக்டேவியஸ்ஸ்டீல் கம்பெனியார் என்கிற ஒரு வெள்ளைக்காரரிடமிருந்து தாங்கள் ஈரோட்டுக்கும் சேலத்திற்கும் மின்சாரசக்தி சப்ளை செய்யகவர்ன்மெண்டுக்கு அப்ளிகேஷன் செய்திருப்பதாயும் தங்கள் அப்ளிகேஷனை ஈரோடு முனிசிபல் சங்கத்தார் ஆதரிக்க வேணுமாயும் கோரி ஒரு லெட்டர் வந்தது. உடனே முனிசிபல் கவுன்சில் தங்கள் கவுன்சிலுக்கு இல்லாமல் மற்ற அன்னியர்களுக்கு கவர்ன்மெண்ட் லைசென்ஸ் கொடுக்கக்கூடாதென்றுகவுன்சில் தீர்மானித்து தங்களுடைய ஆக்ஷேபனையை மதராஸ் கவர்ன்மெண்டாருக்கும் ஆக்டேவியஸ் கம்பெனியாருக்கும் அனுப்பி விட்டார்கள். இது இப்படி இருக்க முன் அனுப்பிய விண்ணப்பமானது அதாவது கடன் வாங்குவதற்கு அங்கீகாரம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்ட விஷயமானது கவர்ன்மெண்டாரிடம் அதிகக்காலமாக பைசல் செய்யப்படாமலிருந்து வந்தது கவனிக்கப்பட்டுகவர்ன்மெண்டின்4-10-29ந் தேதி போட்ட 30983-1-C. L & M நெம்பர் மிமோராண்டத்தில் "கடன் அப்ளிக்கேஷன் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். சேர்மென்லைசென்சுக்கு அப்ளிகேஷன் செய்யவேண்டும்" என்று கவர்ன்மெண்டாரால்தெரிவிக்கப்பட்டது.

கவுன்சிலால் லைசென்சுக்கு விண்ணப்பம் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து மசோதா லைசென்ஸ் வகையறா அச்சடிக்கப்பட்டது.

அதோடுகூடவே தீவிரமாய் வேலை துவக்குவதற்கு வேண்டிய கடிதப்போக்கு வரவுகளும் செய்து கொண்டிருக்கையில் மறுபடியும் திடீரென்று கவர்ன்மெண்டார் தாங்களே ஈரோட்டுக்கு மின்சார சக்தி சப்ளை செய்யத் தயாராயிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதன் பேரில் சங்கத்தார் சர்க்காராரே அவ்விதம் மின்சார சக்தி சப்ளை செய்வதாயிருந்தால் தாங்கள் எடுத்துக் கொள்ளுவதாகத் தெரிவித்துவிட்டார்கள். என்றாலும், இதற்குள்ளாக கவுன்சிலால் மசோதா லைசென்ஸ் அச்சடிக்கும் விஷயமாயும், பேப்பர்களில் பிரசுரம் செய்யும் விஷயமாயும், இன்னும் லைசென்ஸ் பெறுவதற்கு வேண்டிய முன்நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் விஷயமாயும் ஏராளமான பணச் செலவு செய்யப்பட்டுவிட்டது.

மெசர்ஸ் சாரி அண்டு சாரி லிமிடெட்டுக்கு பிளான்களும், எஸ்டிமேட்டுகளும் தயார் செய்வதற்கும், மசோதா லைசென்ஸ் அச்சடிப்பதற்கும், மற்றும் இதர செலவுகளும் நீங்கலாக லைசென்ஸ் பீசும் பிரசுரச் செலவும் மாத்திரம் ரூ. 1000 ஆகி விட்டது. அப்புறம் கடன் வாங்குவதற்கு அங்கீகாரம் கொடுக்கும் விஷயம் கவர்ன்மெண்டாரால் பைசல் செய்யப்படாமல் ரொம்பகாலம் பாக்கியிலிருந்து கொண்டிருந்தது. கடைசியாக "மேட்டூரிலிருந்து மொத்தமாய் மின்சார சக்தி சப்ளை செய்யும் விஷயம் முடிவாகத் தீர்மானம் செய்யும் வரை கடன் வாங்கும் விஷயம் நிறுத்திவைக்கப்படவேண்டு"மென்று 7-2-30 ல் 4446ம் நெம்பர் மிமோராண்டத்தின் மூலமாய் கவர்ன்மெண்டாரவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இது ஒரு புறமிருக்க முன் ஹைடிரோ எலக்டிரிக்கல் டிபார்ட்மெண்டு சீப் எஞ்சினீயரால் அனுப்பப்பட்ட ஸ்கீமானது 1930 மே மாதத்தில் சாங்கிஷன் செய்யப்பட்டுவிட்டது. ஈரோடு கவுன்சிலர்கள் தங்களுக்கே லைசென்ஸ் கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொண்டிருக்கும்போதே தாங்கள் இவ்வித வேலை செய்வதில் மிக்க அனுபவமுள்ளவர்கள் என்றும், கவுன்சில் தீர்மானத்தை புனர் ஆலோசனை செய்யவேண்டுமென்றும், மறுபடியும் வெள்ளைக்கார கம்பெனியாகிய கல்கத்தாமெஸர்ஸ் ஆக்டேவியஸ் ஸ்டீல் கம்பெனியாரிடமிருந்து கவுன்சிலுக்கு ஒரு லெட்டர் வந்தது. கவுன்சிலால் தாங்கள் அவ்விதம் செய்ய முடியாதென்று மறுபடியும் தீர்மானித்து கம்பெனியாருக்குத் தெரிவித்து விட்டார்கள்.

மறுபடியும் 1930 ஜுன் மாதம் 24-ந்தேதி கூடியமுனிசிபல் சங்கத்தில் ஒரு அயல் கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுப்பதை ஆட்சேபித்தும், தக்க லாபம் கிடைக்கக்கூடிய ஒரு காரியத்தைச் செய்வதற்குக் கவர்ன்மெண்டார் ஒத்தாசை செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் பாஸ் செய்யப்பட்டன. மின்சார சக்தியை மொத்தத்தில் வாங்கிப் பிரித்துக் கொடுப்பதற்காவது லைசென்ஸ் கொடுக்க வேண்டுமாய்க்கேட்டுக் கொள்ளப்பட்டது. தாங்கள் உடனே மொத்தத்தில் மின்சார சக்தி பெற்றுக் கொள்ள தயாராக இருக்கும் பொருட்டு வேண்டிய வேலைகளை உடனே துவக்க லைசென்ஸ் கொடுக்கவேணுமாய கவர்ன்மெண்டாரைப் பன்முறையும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இத்தருவாயில் கடன் கேட்கப்பட்ட தொகையை 1930 செப்டம்பர் மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளாவிட்டால் 100க்கு 5½ வீதம் வட்டி கொடுக்கவேண்டுமென்று கோயமுத்தூர் ஜில்லா போர்டார் தெரிவித்தார்கள். இதை உடனே கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும் வீதம் உடனே கடன் வாங்கிக் கொள்ளும்படி சாங்கிஷன் கொடுக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இது விஷயம் ஆலோசனையிலிருப்பதாக 15—12—30ல கவர்ன்மெண்டார் தெரிவித்தார்கள். திரும்பவும் உடனே கவுன்சிலுக்கே லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்றும் அவ்விதம் கொடுக்காவிட்டால் கவுன்சிலுக்குப் பலவிதமான வகையில் பொருள் நஷ்டமும், கஷ்டமும் ஏற்படுமென்றும் கவர்ன்மெண்டாருக்கு விபரமாக எழுதப்பட்டது.

இவ்வளவு செய்தும் சென்னை அரசாங்கமானது பொது ஜன அபிப்பிராயத்தை லட்சியம் செய்யாமலும் கவுன்சிலர் வேண்டுகோளைச் சிறிதும் கவனிக்காமலும் "கல்கத்தா கம்பெனியார் மிகுந்த அனுபோக சாலிகள். சரியாய் நடத்துவார்கள் என கவர்ன்மெண்டார் கருதுகிறார்கள்" எனக்குறிப்பிட்டு விட்டு

கல்கத்தாவெ ஸர்ஸ் ஆகட்டேவியஸ் ஸ்டீல் கம்பெனியாருக்கு லைசென்சு கொடுத்துவிட்டதாக 11-12-30-ந்தேதி போட்ட 11034|E 30-7 உத்திரவு கிடைத்தது.

எனவே மேல்கண்ட இந்த விஷயங்கள் தான் ஈரோடு முனிசிபாலிட்டியின் மின்சாரத்திட்ட விஷயமான வெளிப்படையான சரித்திரமாகும் (இனி இரகசியமான சரித்திரங்கள் பல உண்டு. அவற்றை பரிஷ்கார காலத்தில் வெளியிடுவோம்.)

ஆகவே, இதை அதாவது இந்த வெளிப்படையான சரித்திரத்தையே கவனித்து பார்ப்போமானால் சென்னை அரசாங்கமானது இவ்விஷயத்தில் எவ்வளவு பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிருக்கின்றது என்பது விளங்கும். நாம் சென்னை அரசாங்கம் என்று சொல்லுவதானாலும் சென்னை அரசாங்கத்தில் இந்த இலாகாவுக்கு தலைவர்களாயிருப்பவர்கள் இந்திய கனவான்களேயாகும். ஒருவர் ஆந்திர தேசத்து ஜன பிரதிநிதி மந்திரியாவார். மற்றவர் கேரள தேசத்தவராயிருந்தாலும் சர்க்கார் உத்தியோகஸ்தர் என்பதாகச் சொல்லக்கூடுமானாலும் சர்க்காருக்கே பொறுப்பானவர் என்று சொல்வதானாலும் அந்த ஸ்தானமும் ஜனபிரதிநிதிகளுக்கு என்று ஒதுக்கி வைத்த ஸ்தானமேயாகும்.

ஆகவே ஸ்தலஸ்தாபன இலாகா மந்திரியும், சட்ட மெம்பரும் என்ற இரு இந்திய கனவான்கள் ஆதிக்கத்தில் உள்ள இந்த ஈரோடு மின்சாரதிட்ட காரியமானது இந்த நாட்டு ஸ்தலஸ்தாபனங்களுக்கு அனுகூலமாயில்லாமல் அதற்கு விரோதமாக ஒரு வெள்ளைக்காருடைய நன்மைக்கு பயன்படும்படி நடந்து கொண்ட விஷயத்தை கண்டிக்காமலிருக்க முடியவில்லை.

அன்றியும், ஈரோடு பொதுஜனங்கள் பொதுக்கூட்டம் கூடி அரசாங்கத்தைக் கண்டித்துச்செய்த தீர்மானத்தை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கவேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

சென்னை அரசாங்க சட்டசபை அங்கத்தினர்கள் உண்மையான ஜனப்பிரதிநிதிகளாயிருப்பார்களேயானால் கண்டிப்பாய் இந்த அரசாங்கத்தின் மீதோ அல்லது இதற்கு ஆஸ்பதமாயிருந்த அதிகாரிகள் மீதோ கண்டனத்தீர்மானம் நிறைவேற்றியேயிருக்க வேண்டியவர்களாவார்கள். என்ன செய்வது! பாவம்!! ஒவ்வொரு ஜனப்பிரதிநிதிஎன்பவர்களும் வேறு எவ்வளவோ காரியத்தை உத்தேசித்து பெரும் பெரும் தொகைகள் செலவு செய்து ஜனப்பிரதிநிதிகளாயில்லாமல் பணப்பிரதிநிதிகளாகவும் தங்கள் தங்கள் சுயநலப்பிரதிநிதிகளாகவும் சென்று இருப்பவர்கள் இம்மாதிரி காரியத்திற்காக எப்படி தங்கள் பிரதிநிதித்துவ உரிமையை செலவழிக்க முடியும்?

ஆகையால் தான் ஈரோடு மகாஜனங்கள் அரசாங்கத்தையும், அரசாங்க இந்திய மெம்பரையும் ஜனப்பிரதிநிதி மந்திரியையும், ஜனப்பிரதிநிதிசட்டசபை அங்கத்தினர்களையும் நம்பாமல் ஈரோடு மகாஜனங்களாகிய தங்களையே நம்பி தீர்மானம் செய்து கொண்டிருக்கிறார்கள். இனி ஈரோடு மகாஜனங்களும் இந்திய மக்களேயாதலால் இந்திய பொது மக்கள் என்பவர்கள் மற்ற காரியங்களில் நடந்து கொள்வது போலவேதான் அல்லது அவர்களது வழிகாட்டிகள் என்பவர்களும் பிரமுகர்கள் என்பவர்களும் நடந்து கொள்வது போலவே தான் நடந்துகொள்ளுவார்களோ அல்லது தங்கள் சுயமரியாதையையும் சுதந்திரத்தையும் உத்தேசித்து தீர்மானம் செய்தபடி நடந்து கொள்ளுவார்களோ என்பது பலர் சந்தேகிக்கக்கூடியதானாலும் நமக்கு இவ்விஷயத்தில் இவ்வூர் பொதுமக்களிடமும் சிறப்பாக பிரமுகர்களிடமும் பூரண நம்பிக்கை இருக்கின்றதென்றே சொல்லுவோம்.

ஏனெனில், தங்களையே நம்பிய ஜனங்கள் தங்களாலேயே நம்பிக்கைத் துரோகம் அடைய அருகதை ஆகிவிட்டால் மற்றபடி அன்னியர்களை நம்பினவர்கள் நம்பிக்கை மோசமடைவது அதிசயமல்ல. ஆகையால், எந்தக்காரணம் கொண்டும் இந்த அரசாங்கமும் ஜனப்பிரதிநிதிகளும் அனியாயத்திற்கும், கொடுமைக்கும் நம்பிக்கை துரோகத்திற்கும் பரிகாரம் ஏற்படாதவரை தங்களையே நம்பி இருக்கும் ஈரோடு மகாஜனங்கள் கண்டிப்பாய் மின்சார சக்தியை வாங்கி உபயோகித்துக் கொள்ளக்கூடாது என்றும், சர்க்காரார் ஒருசமயம் முனிசிபாலிட்டியார் மீது ஆதிக்கம் செலுத்தி முனிசிபாலிட்டியாரை கட்டாயப்படுத்தினாலும் ஈரோடு முனிசிபாலிட்டியார் அதற்கு இணங்கி மின்சாரத்தை நமது முனிசிபாலிட்டிக்கு உபயோகித்துக் கொள்ளுவார்களேயானால் கண்டிப்பாய் முனிசிபாலிட்டியுடனும் ஒத்துழைக்கக்கூடாது என்றும் செய்துள்ள தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரச் செய்யவேண்டியது பொதுமக்கள் கடமை யாகும். மற்றும் ஷை வெள்ளைக்காரக் கம்பெனியார் இதற்காக ஏற்படுத்தி இருக்கும் புதிய கம்பெனியிலும் யாரும் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது என்பதும் தீர்மானத்தின் ஒரு பாகமாதலால் அதையும் அமுலுக்கு கொண்டு வரவேண்டியது யோக்கியமாகும்.

நமது அநுதாபம்.

நமது நண்பர் சென்னை ராவ் பகதூர் டாக்டர் சி. நடேசமுதலியார் அவர்களின் ஒரே குமாரரான திரு. சரவணன் அவர்கள் காலமானதறிந்து மிகவும் வருந்துகிறோம். திரு. சரவணன் அவர்களுக்கு வயது 22. பி. ஏ, வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தார். நுண்ணறிவும், யாவரும் விரும்பத்தக்க குணநிசயங்களும் படைத்திருந்தார். டாக்டர் நடேச முதலியாரின் குடும்பத்திலுள்ள சகோதரர்களுக்கெல்லாம் திரு. சரவணன் அவர்களே ஏகபுத்திரர் சுமார் 2. மாதகாலமாக நோய் வாய்ப்பட்டிருந்து எவ்வித சிகிச்சையாலும் மீட்க முடியாது போயிற்று. தனது அருமைக்குமாரனை பிரிந்த டாக்டர் நடேச முதலியார் அவர்களுக்கும், அவரது சகோதரர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எமது மனமார்ந்த அநுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

முஸ்லீம்களுக்கு தனித்தொகுதி.

11-7-31 ந்தேதி லாகூரில் கூடிய "அஞ்சும அஹ்ராரி இஸ்லாம்" மகாநாட்டில்,

சீக்கியர்களும், இந்துக்களும் முஸ்லீம்களுக்கு பலவழிகளிலும் இடையூறு செய்வதாலும், முஸ்லீம்களை அவர்கள் (இந்துக்களும் சீக்கியர்களும்) தீண்டாதார்கள் போல பாவிப்பதாலும், முஸ்லீம் இனிதனித்தொகுதியே தவிர வேறு ஒன்றும் அங்கீகரிக்க முடியாது" என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

தமிழ்நாடு.

வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டு உரிமை கொடுத்தாலும் கூட, தனித்தொகுதி தான் வேண்டும் என்றே கருதி இருக்கிறார்கள் என்பதாக மற்றொரு தீர்மானத்தால் விளங்குகின்றது.

மாகாண மூன்றாவது சுயமரியாதை மகாநாடு.

மேற்படி மகாநாட்டுக்கு வருகின்றவர்களின் சௌகரியத்தை யுத்தேசித்து, ஒரு ஸ்பெஷல் ட்ரெயின் மாயவரத்திலிருந்து புறப்படச்செய்ய வேண்டுமென்பது முக்கியமெனத்தோன்றினால், பிரதிநிதிகள், தயவு செய்து, தங்களுடைய அபிப்பிராயத்தை வரவேற்புக்கமிட்டியின் பொதுக்காரியதரிசிக்கறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இதற்கெனவே வரவேற்புக்கமிட்டியாரும், ரயில்வேகம்பெனியாருடன் கடிதப்போக்கு வரத்து செய்து கொண்டிருக்கின்றார்கள்.

நமதிபக்கப்பிரசாரகர்கள் யாவரும் உடனே இங்குவந்து சேர வேண்டுமாய்க்கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். யாவரும் வந்த பிறகுதான், வெளியூர்களில் டிக்கட்டுகள் விற்பனை செய்ய ஆரம்பிக்கவேண்டியிருக்கிறது.

இதர காரியங்களெல்லாம் மிக மும்மரமாகவே நடைபெற்றுவருகின்றது.

சுமார் 10,000 பிரதிநிதிகள் வரக்கூடுமென எதிர்பார்த்து, அவர்களுக்குரிய வசதிகள் கவனிக்கப்பட்டும், நிறைவேற்றப்பட்டும் வருகின்றது.

S. உத்தண்டன்,
கிளாம்பர அதிகாரி.

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

யல்ல' என உரைக்கின்றார். ஆனால் சில சந்தர்ப்பங்களில் இந்து சமூகங்களில் பால்மணம் மாறாத சிறு குழந்தைகளுக்கும் தாய்மார்களின் மடி மீது உறங்கிக்கொண்டிருக்கும் பொழுதே விவாகங்கள் செய்யப்படுகின்றதென்பதையும் ஆதையினாலே அம்மாதிரி விவாகமானவர்களை புருஷனும் மனைவியுமாகவுமிருந்து அவர்களுடைய வாழ்க்கை நடாத்தும்படி அனுமதிக்க சாத்தியமாகாதெனவுமுரைக்க திரு. ஆச்சாரியார் அவர்கள் தவறிவிட்டாரெனவே கூறவேண்டியிருக்கின்றது. மேலும் ஒருவனுடைய விவாகமாகிய மனைவி அவள் பக்குவதிசையடைந்தபிறகுதான் அதாவது ருதுவானபிறகுதான் அவன் அவளுடன் சம்போகிக்க அனுமதிக்கப்படுவான் எனும் திரு. ஆச்சாரியார் அவர்களின் கூற்றானது அவருடைய சகாவான திரு. சிம்ஹா அவர்களால் தோற்கடிக்கப்பட்டு விட்டது. எப்படியெனில் திரு. சிம்ஹா அவர்கள் 'இந்துக்களினிடையே நடைபெறும் பாலிய விவாகமென்பது பக்குவ

டையாதிருக்கும்பொழுதே அவர்களிருவரும் கூடி வாழ்வதெனவும் சில சமயங்களில் ருதுவடையாமலிருக்கும்பொழுதே ஸ்திரீ புருஷ சம்போகம் செய்வதெனவும் மேலும் ருதுவடைவதற்குரிய அடையாளங்கள் முதலில் காணப்படும்பொழுதே சம்போகிக்க அனுமதிப்பதென்பதையுமே புலப்படுத்துகின்றது. இத்தகைய வாழ்க்கையானது பெண்களின்தேகாரோக்கிய நிலைமையை அதிகமாகப்பாதித்துக்கொண்டு வருவதுமல்லாமல் பிரசவங்களினால் அவர்கள் அநேக துன்பத்துக்காளாகி அகால மரணத்திற்கு மாளாகின்றார்கள்' என திட்டமாயுரைக்கின்றார்.

இந்துக்களின் பாலிய விவாகத்தினாலேற்படும் குணகுணங்களை இப்பொழுது நாம் விட்டுவிட்டு, அது எவ்வளவு தூரம் பரவியிருக்கின்றதென்பதைப்பற்றி அறிந்து கொள்ளுவோம். சென்னை அட்வோகேட் ஜெனரலும், சென்னை சீர்திருத்த சங்கத்தின் தலைவரும், இந்திய சட்டசபை அங்கத்தினருமாகிய திரு எஸ். சீனிவாச அய்யங்கார் அவர்கள் இம்முறையானது இந்தியாவிலுள்ள பெரும்பாலான மக்களால் அனுஷ்டிக்கப்படுவதில்லையெனவும், ஆனால், இந்து சமூகத்தாரில் ஒரு சிறிய வகுப்பினர் மட்டும் இம்முறையை உண்மையாகவே யனுசரித்துக்கொண்டு வருவதாகவும் உரைக்கின்றார். இவருடைய இக்கூற்றுக்குமாறாக, இந்து மகாசபையின் தலைவரும், காசி இந்து சர்வகலாசாலைச் சங்கத்தினரின் உபதலைவரும் இந்திய சட்டசபையில் வைதீக கோஷ்டியாரின் தலைவரென யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவரும், அலகாபாத் வாசியுமான திரு. பண்டிட் மதன்மோஹன் மாளவியா அவர்கள், பாலிய விவாகங்களைத்தடைப்படுத்த வேண்டுமென விரும்புவதானது 'இந்து சமூகத்திலேயே ஒரு பெரிய புரட்சியையுண்டாக்கியதத்தொப்பாகு'மெனவும், விவாகவயதைப் பனிரண்டென உயர்த்துவதே 'தற்கால நடைமுறையிலிருந்துவரும் நிலைமையினின்றும் நாம் எவ்வளவோ -அதிகப்படியாக எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கின்றோமென்பதை அறிவிக்கு'மெனவும், தாம் எல்லாவிஷயங்களையும் சிந்தித்து, யோசனைசெய்து பார்த்த பிறகே இவ்வித முடிவு கூறுவதாகவுமுரைக்கின்றார். இச்சீர்திருத்தத்தை ஒரேயடியாக முன்னேற்றுவதென அவர் கூறுவதானது, அவ்விதச்செய்கையால் ஒரு சமயம் அநேக ஆபத்துகளுண்டாகுமென அஞ்சுகிறார் போலும்!

இத்தகைய வழக்கமானது இன்று அதிகரித்துக்கொண்டே வருகின்றதா அல்லது குறைந்து கொண்டே வருகின்றதாவென்பதை ஆராய்வோமானாலும் இவ்விஷயத்திலும் சரிசமானமான எதிர்ப்புகளைத்தான் காணப்படுகின்றன, இந்தியசட்ட சபை அங்கத்தினரான திரு. சிங்ஹா அவர்கள், 'பாலியவிவாகமானது, பொதுவாகவே, அதிகரித்துக்கொண்டுதான் வருவதாக காணப்படுகின்ற'தென உரைக்கின்றார். ஆனால், அவருடைய சகாக்களும், பம்பாய் வாசிகளுமான திருவாளர்கள் சர்புருஷோத்தமதாஸ்தாக்கூர்தாஸ் அவர்களும், டி. வி. பெல்வி அவர்களும் இந்நிலைமை மாறுபாடடைந்திருப்பதாகக் கூறுகின்றார்கள்.

மேற்கொண்டு, இந்து சமூகத்தில் எந்தெந்த வகுப்பினர்கள், விவாகத்திலிருக்கும் வழக்கத்தை நடைமுறையிலனுஷ்டித்துக்கொண்டு வருகின்றார்களென்பதை ஆராய்வோமானாலும், அப்பொழுதும் ஒன்றுக்கொன்று முரணான அபிப்பிராயங்களே காணப்படுகின்றன. உதாரணமாக, தற்கால நவீனமணிதரும் சமூக சீர்திருத்தவாதியும், இராஜீயத்தலைவருமான திரு. லாலா லஜபதிராய் அவர்களால் 'பாலிய விவாகங்கள், பெரும் பாலும் இந்து சமூகங்களில் உயர்ந்த வகுப்பினர்களெனக்கூறப்பட்டுவரும் மக்களால்தான் நடைமுறையிலனுஷ்டிக்கப்பட்டுவருகின்றன' என உறுதியாயும் திட்டமயுமுரைக்கப்படுகின்றது.

ஆனால், பண்டிதர் மாளவியாவோ இவ்விஷயத்தில் இவருடைய அபிப்பிராயத்திற்கும் நாம் கௌரவமளிக்க வேண்டும்-மேற்கண்டகூற்றுக்கு மாறாகவே உரைக்கின்றார். அவர் 'துன்பத்தையளிக்கத்தக்க இந்தபாலியவிவாகத்திற்கு அதிகமாகப்பலியிடக்கூடியவர்கள் பெரும்பாலும் மத சாதாரண குடிஜனங்கள்தான்-அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் தான் என்பதைநான் இந்தச்சபைக்கு அறிவிக்க விரும்புகின்றேன்' என உரைக்கின்றார்.

மேலும் இந்துமதத்தின் தத்துவங்களைப்பற்றிய அபிப்பிராயத்திலும், இம்மாதிரியான வேறுபாடுள்ள அபிப்பிராயங்களேதான் காணப்படுகின்றன. இந்திய சட்டசபை அங்கத்தினர்களான திருவாளர்கள் லஜபதிராய் அவர்களும், ஆச்சாரியார் அவர்களும், பனிரண்டு ஆண்டுகள் நிறைவேறுவதற்குள்ளாக இந்து சமூகத்தைச்சேர்ந்தப் பெண்களுக்கு விவாகம் செய்யக்கூடாதென சட்டப்பூர்வமாகத்தடை செய்வதானது இந்துமத தர்மத்திற்கு விரோதமான செய்கையாகாதென உரைக்கின்றார்கள். ஆனால், அவர்களுடைய சகாவான திரு டி. வி. பெல்வி அவர்களோ, பெரும்பாலான இந்து சமூகமக்கள்-அதாவது அவரைப்போலுள்ள வைதீகப்பேர்வழிகள்-இவ்வித செய்கையால் உண்மையாகவே உறுதியாகவும், திட்டமாகவும் அதிகமான மனத்தாங்கலடைவார்களென உறுதிகூறுகின்றார்.

ஆனால், ஆலோசனையிலிருக்கும் மசோதாவுக்கு விரோதமாக எங்காகிலும் ஒரு பாலிய விவாகம் நடைபெறுமானால், அவ்வாறு நடைபெற்ற விவாகத்தை சட்டப்பூர்வமாக நடத்தப்பட்ட விவாகமென மதிக்கப்படமாட்டாதெனவும், அவ்விவாகம் சட்டப்படி செல்லுபடியாகாதெனவும் கூறலாமெனும் அபிப்பிராய முறைதானே, அப்பொழுது விஷயமே வேறாகப்போய்விடுகின்றது. 'சாஸ்திரங்களின் முறைப்படி ஒரு தடவை நாம் ஒரு விவாகத்தைப் புரிவோமேயானால், அத்தகைய ஒரு விவாகத்தை எந்த அதிகாரத்தைக்கொண்டும் சட்டப்படி செல்லுபடியாகாதெனக்கூறுவதானது நினைத்தற்கரிய செய்கையேயாகு'மென திரு சிங்ஹா அவர்கள் உரைக்கின்றார். இவருடைய இக்கூற்றானது, அவருடைய சகாவும் பீரார்வாசியுமான திரு எம். எஸ். ஆனே அவர்களாலும், பண்டிட் மாளவியா அவர்களாலுமே உரப்புடனுதரிக்கப்படுகின்றது. நடைபெற்ற ஒரு விவாகத்தை சட்டப்படி செல்லுபடியாகாதெனக்கூறுவதானது 'இந்துக்களைப்பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு மேடையிலும், அவ்வித தீர்மானத்திற்காதரவு கிடைக்கவே கிடைக்கா'தென திரு. மாளவியா அவர்கள் உரைத்திருக்கின்றார்கள்.

ஆனபோதிலும், பலவித அபிப்பிராயங்களையுமுரைத்த பல அங்கத்தினர்களாலும் ஒரேயொரு அபிப்பிராயமட்டும் யாவருக்கும் பொதுவாகவேயிருப்பதாகக்காணப்படுகின்றது. அதாவது இந்துக்களின் பாலிய விவாகத்தைத்தடைசெய்வதற்காகக் கொண்டுவந்த மசோதாவினால் எத்தகைய சீர்திருத்தம் செய்யவேண்டுமென விரும்பியபோதிலும் அச்சீர்திருத்தமானது சட்டமேற்படுத்துகின்ற இந்துக்களால் மட்டுந்தான் நிர்ணயிக்கப்படவேண்டும் என்பது புலனாகின்றது. ஏனெனில் இவ்விஷயமானது இந்து சமூகத்தைமட்டும் பொருத்ததாயிருக்கின்றது. ஆகையினால் அந்நிய அரசாங்கமானது இவ்விஷயத்தில் தலையிடவேண்டுமெனக்கூடக்கருதவேகூடாது. இம்மாதிரியாகவேதான் பஞ்சாபைச்சார்ந்த திரு லஜபதிராய் அவர்களும் சென்னையைச்சார்ந்த திரு. ஐயங்கார் அவர்களும் உரைக்கின்றார்கள். இக்காரணத்தைக் கொண்டேதான் கனம் திரு ஜேம்ஸ்கிரார் அவர்களும் இந்திய கவர்ன்மெண்டாரின் நிலைமையை எடுத்துரைக்கச்சேர்ந்த சந்தர்ப்பத்தில் 'பெரும்பாலான மக்களின் மத அபிப்பிராயங்களிலும் சமூகப்பழக்க வழக்கங்களிலும் சீர்திருத்தம் செய்யவேண்டுமென விரும்பி அவைகளை நாம் சீர்திருத்தம் செய்யும்பொழுது பொதுமக்கள் அவைகளால் பாதிக்கப்படுவதாயிருந்தால் அப்பொழுது அவர்களுடைய நியாயமான உரிமைகளையும் நியாயமான அபிப்பிராயங்களையும் அதிஜாக்கிரதையாகவும் தீர்க்கமாகவும் நிஷ்பக்ஷபாதமாகவும் ஆராய்ந்தறிய வேண்டு'மென உரைத்திருக்கின்றார். ஏனெனில் 'போதிய ஆலோசனையும் முகாந்திரமுமின்றி நாம் ஒன்றை சட்டமாக நிருபணம் செய்தால் அது ஒருசமயம் நாம் எதிர்பார்த்த அளவு நன்மையை யளிக்காமல் அதற்கு நேர்விரோதமான பலனையளித்தாலும் யளிக்கக்கூடு'மென அவர் உரைக்கின்றார்.

சாரதாவின் திட்டத்தை ஓட்டுப்போட்டுத் தெரிந்துகொள்ளுவதற்கு முன்பாக அத்திட்டத்தை மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பிவைத்து அவர்களும் ஆங்கு விவாதித்துப் பிறகு அவர்களுடைய அபிப்பிராயங்களையுமறிந்து கொள்ளுவதே நலமென இந்திய மத்திய கவர்ன்மெண்டாரும் பொதுவாகவே கருதினார்கள்.

(தொடரும்.)

சுயமரியாதைப் பிரசாரம்.

12-7-31ந்தேதி பாப்பினாயக்கன் பட்டியில் திரு. வெள்ளைச்சாமி சேர்வை அவர்கள் தலைமையின் கீழ், குன்னத்தூர் என். சங்கரையா அவர்களால் 'சுயமரியாதை' என்பது பற்றி ஓர் பிரசாரம் நடைபெற்றது. அப்பிரசங்கத்தில் புராணமூடம், வைதீகப்பித்து, மதக்கொடுமை, பார்ப்பனீயக்கொடுமை முதலியவற்றை விளக்கமாய்க் கூறி ஜனங்களைப்பரவசப்படுத்தியது போற்றத் தக்கது என ஒரு நிருபர் எழுதுகின்றார்.

நோட்டீஸ்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு.

1924 ௵ O. S No. 659
1931 ௵ E. P. No. 656

மு. ராம. சுப. சுப்பிரமணியஞ் செட்டியார் ஏஜண்டு ரங்கசாமி அய்யர்—வாதி மனுதார்.

பல்லடம் தாலூகா உகாயனூரிலிருக்கும் பொன்னிய கவுண்டன் மகன் தெய்வசிகாமணிக் கவுண்டன்—1ம் பிரதிவாதி.

தீர்ப்புக் கடனாளியாகிய ஷை 1ம் பிரதிவாதி என்பவருக்கு மேலேகண்ட வியாஜியத்திலே டிக்ரி பெற்றவராகிய வாதி and மனுதார் என்பவர் சொத்துக்களின் விற்பனைக்காக மனு செய்துகொண்டிருக்கிறபடியால், விற்பனை இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 1931 ௵ ஆகஸ்டு மாதம் 1-ந்தேதி நிர்கார்ஷை செய்யப்பட்டிருக்கிறதென்று இதனால் உமக்குத் தெரிவிக்கலாகிறது. ஷை தேதியில் நீர் ஆஜராகத் தவறினால் உம்மை ஒரு கக்ஷியாகத் தீர்மானிக்கப்படுமென்று இதனால் உமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

C. S. குப்புசாமி அய்யர்,
வக்கீல், திருப்பூர்.

திருவள்ளுவ நாயனார் குருபூசை நாள் மறுப்பாளரின் அறியாமை விளக்கம்.

(S. N. S. சுந்தரம் எழுதுவது)

பொதுமறை ஆசிரியராகிய திருவள்ளுவர் குரு பூசை நாள் உண்மைவிளக்க ஆராய்ச்சி என்ற ஒரு பிரசுரமானது பொது ஜனங்களுக்கு உண்மை யின்னதென்று தெரியாத படி மயக்கம் விளைவிப்பதோடு அனுவசியமான சொற்களையும் சொற்றொடர்களையும் தன்னகத்துட்கொண்டிருப்பதாகவுந்தெரிகிறது. அவற்றைப் பொது ஜனங்களுக்கு விளக்கவே இந்தக்கட்டுரை எழுதப்படுகின்றது அல்லாமல் இலக்கணத்துட்புகுந்து எழுத்தையும், சொல்லையும் ஆராயவோ, இலக்கியத்துட்புகுந்து அசம்பாவிதங்களைக் காணவோ நாமிங்கு முயலவில்லை.

குறித்த மறுப்புப் பிரசுரமானது திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையைப்பற்றி பேசுமிடத்து--அவர் திருவாவடுதுறை தருமபுர முதலிய ஆதீனங்களின் வித்துவானென்று தாமே தம்மை சொல்லி வெளியிடுபவரென்று குறிக்கிறது. அங்ஙனம் அது குறித்தற்கு ஆதாரம் யாதும் காட்டப் படவில்லை. ஆதாரம் யாதும் காட்டாமல் எழுதுவதால் திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளையைப் பொய்யரென்று அனுவசியமாக இகழ்ந்து தமது பொறுமையையும் தீய எண்ணத்தையும் வெளிப்படுத்திக்கொண்ட குற்றத்திற்கு மறுப்புப் பிரசுரக்காரர் உள்ளாவரல்லவா?

மறுப்புப் பிரசுரக்காரர் உலக நாத பிள்ளை யென்பார்-தம்மைக்குறித்தும், தமது சம்மேளனத்தைக் குறித்தும் பிறர் பொருத்தமில்லாதவற்றை யெழுதியிருப்பதாகக் கருதினால் தாம் இன்னாரென்றும், தமது சம்மேளன மின்னதென்றும் தெளிவாக விளக்கிக்கூறி பிறர் உரையின் பொருத்தமின்மையைக் காட்டியிருத்தல் வேண்டும். அவ்வாறு காட்டாது பிறர் தெளிகவென்று கூறுதல்கூடாது.

வைதீக சைவ சம்மேளன அமைச்சராகிய இவர் தமது கடமையைச் செய்யாத விடத்து இவரை ஒரு மனிதனாகவும், இவரது சம்மேளனத்தை ஒரு சபையாகவுந்தானே சாதாரணமாகப் பிறர் எண்ணக்கூடும். தம்மையும், தமது சம்மேளனத்தையும் பிறர் அறிந்தால் ரகசியம் வெளிப் பட்டு விடுமென்ற கருத்துப்பற்றியோ, தம்மைப் பெரிதாகக் கருதும் அகங்காரம் பற்றியோ தம்மை யுயர்த்திப்பேசிக்கொள்ளுமிவர் தாம் கேட்ட கேள்விகட்கு பிறர் விடை யிறுக்க வில்லை யென்று பிறரைக் குற்றங் கூறுதற்கு எவ்வகையான உரிமை யுடையவர்?

திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளை கூறும் பாட்டினைத்தக்க ஆதாரமாகாதென்று கூறுமிவர் தாம் கூறும் "மாசி உத்தரம்" என்று தொடங்கும் செய்யுள் எந்த ஏட்டில் காணப்பட்டது? யாராலியற்றப்பட்டது? மேற்படி ஏடு எங்குளது? என்று தெரியாமல் "பழைய பாட்டு பழைய பாட்டு" என்று வற்புறுத்துவதனால் தம் கொள்கையை எவ்வாறுசாதித்தவராவார்? அவர் சொல்லும் பழம் பாட்டு ஏட்டையாவது கொண்டுவந்து அவரது வாதத்தில் நிலை நாட்டுவாரா?

தேவாரம், திருவாசகம் முதலிய நூல்கள் பலவற்றுள்ளும் கடவுளைத் தலைவராகவும், உயிரைத்தலைவியாகவுங்கூறியிருப்பவும், அதற்கு மாறான முறை திருச்சிற்றம்பலக் கோவையாருள் சிறுபான்மையாதல் காண்பதொப்ப மாதத்தை முன்னும், நட்சத்திரத்தைப் பின்னும் வைத்த செய்யுள்கள் பலவாமாயினும், யாதனுமோர் செய்யுள் முறைக்கேற்ப நட்சத்திரத்தை முன்னும் மாதத்தைப் பின்னும் வைத்து செய்யப்பட்டிருத்தல் நியாயத்திற்கு மாறுவதெப்படி? அப்படி செய்யுளில் அமைத்தல் தவறு என்ற விதி எந்த இலக்கண நூலிலாவதுண்டா? சம்பிரதாயத்திற்கொத்த முறையில் பொய்யை ஒருவன் சொன்னால் அது மெய்யாகுமா? சம்பிரதாயத்திற்கு மாறாக மெய்யை ஒருவன் சொன்னால் அது பொய்யாகுமா? சம்பிரதாயத்திற்கு ஒத்ததை மெய்யென்பார் பொது ஜனங்களை நயமாக ஏமாற்றும் இயல்புடையாரல்லவா?

ஒருமனிதனின் சொல்லும், எழுத்தும், செய்கையும், அவனது குடும்பப் பழக்கம், கூட்டுறவுப் பழக்கம் இவைகளுக்குத் தக்கபடி வெளிப்படுகிறதென்பது ஒரு பொது விதி.

"ஒழுக்கமுடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்."

மறந்தும் தீய சொற்களைத் தம் வாயாற் சொல்லுந் தொழில்கள் ஒழுக்கமுடையவர்களுக்கு முடியா-என்றிருப்பவும் இவர் தமது பிரசுரத்தில் "ஏகோதிஷ்டக்காரனுக்குச் சபிண்டிக்காரன் சாக்ஷி" என்று ஒருபழமொழி காண்பிக்கிறார். இதனால் இவர்ஒழுக்க முடையராகாரென்றும், இவர் ஏகோதிஷ்டக்காரனாகவும்இவர்தலைவர் சபிண்டிக்காரனாகவும் கருதும்படி ஏற்படுகிறதல்லவா? இவ்வாறு இழி சொற்களையும், கீழ்மக்கள் உபயோகிக்கும் பழமொழியையும் கட்டுரைகளிற்பெய்து கடவுள் உண்மையிலும், இலக்கண, இலக்கிய சாஸ்திர ஆராய்ச்சியில் தலை சிறந்துவிளங்கும் தக்க பெரியார்களைக் குற்றங்கூறி தமது பொறுமையையும் செருக்கையும் வெளியிடுதல் கயவர் செயலாகுமன்றோ?

மேலுமிவர் திரு கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் எழுதியிருக்கும் அரிய ஆராய்ச்சித் திறன்வாய்ந்த திருக்குறட் பொழிப்புரைக்குக் குற்றங்கூறப்போவதாயும், இலக்கிய வரலாற்றுக்குக் குற்றங்கூறி வருவதாயுங் கூறுகிறார். இ. க உலகநாத பிள்ளையின் ஆராய்ச்சித்திறனையும், திரு கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்களின் ஆராய்ச்சித்திறனையும் ஒப்பிட்டால் மலைக்கும், மடுவுக்கும் கூட ஒத்திரா என்பது தமிழ் உலகம் நன்கறியும். நமக்கு இவர்கள் இருவரையும்நேரில் நன்றாய்த்தெரியவரும். இந்நிலைமையில் இவர் பிள்ளை யவர்கள் திருக்குறள் பொழிப்புரையை மறுக்கப்போவதாய்ச் சொல்வது வீணே தற்பெருமை பாராட்டுவதாகும்.

இன்னும் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு சிவநேசனிலெழுதிவரும் போலிக்கண்டனங்கள், பேட்டை திரு ஞானசம்பந்தர் திருவருட்கழக ஆண்டுவிழாவில் திரு. சிதம்பர ராமலிங்கம் பிள்ளை-என்பார் ஒருவர் செய்த போலிப்பிரசங்கத்தின் பொருள்தாவுகைகளின் எதிரொலியேயாம். இதனால் மேற்படி சிதம்பர ராமலிங்கம் பிள்ளைக்கு வாயுங்கையுமாக இவர் உபயோகப்பட்டு வருகிறாரென்பதும் ஆராய்ச்சித் திறனற்றவரென்பதும் வெள்ளிடைமலை.

திருக்குறள் ஆசிரியராகிய திருவள்ளுவரை ஞானவெட்டியான்செய்ததாகத்தவறாக எண்ணுகின்றவர்களுள் ஒருவரே ஞானவெட்டியானைப் பதிப்பித்தவராவர். அப்படி யெண்ணுவது கால ஆராய்ச்சி யில்லாமையினால் வந்த குற்றமாகும். திருவள்ளுவர் என்ற பெயருடைய மற்றொருவர் ஞானவெட்டியான் செய்ததாக இதுவரை யாரும் கூறவுமில்லை. ஆதாரமுமில்லை. பிற்காலத்தார் ஒருவர் ஞானவெட்டியானென்ற ஒரு சித்த வைத்தியநூலை யெழுதி அதனுள் திருவள்ளுவனாரைத் துதித்துள்ளார். ஞானவெட்டியான் 2-ம் பாட்டில் 'அவனிதனில்ஞானவெட்டியருற யானும்--திகழ் திருவள்ளுவ நாயனுரைத்த வேதநிரஞ்சனமா நிலவு பொழிரவிளைப்பாமே" என்றது காண்க. பின்னர் யாரோ ஒருவர் தமக்கு வேண்டியதை அந்நூலில்சேர்த்து அதற்குப் பெருமை தேடக்கருதி முற்காலஎனுத் திருக்குறள் செய்த திருவள்ளுவர் பெயரையந்நூலுக்குக்கொடுத்துவிட்டார். அப்படிச் செய்தவற்கு கோவில் கட்டி அவரை வீரசைவர்கள் வழிபடுகின்றாரென்றும் திருக்குறட் பேராசிரியராகிய திருவள்ளுவர்க்குக் கோவில் இல்லை யென்றும் அறுதியிட்டு உரைத்தல் மிக்கப் பொருத்தமற்ற அசம்பாவிதமன்றோ? இன்னுமிவர் ஞானவெட்டியானென்னும் சித்தமருத்துவ நூலாசிரியரைச் சித்தமருத்துவர்கள் வழிபடாமல் வீரசைவர்கள் வழிபடுகிறார்களென்று சொல்வது எவ்வாறு பொருந்தும்? சித்த மருத்துவநூல் வீரசைவ நூலல்லவே. எல்லா மதத்தினருந் தங்கள் தங்கள் ஆசிரியராக ஆவலோடு கருதும் பொது நூலாசிரியரான திருக்குறட் டிருவள்ளுவரை வீரசைவர்கள் வழிபடுகின்றார்களென்று சொல்வது பொருத்தமும் பெருமையுமாகும். அங்ஙன மில்லாது ஞானவெட்டியான் செய்த பிற்காலத்தவர் இன்னாரென்று யினந்தெரியாத ஒரு அநாமதேயப் பேர்வழியை வழிபடுகின்றாரென்று சொல்வது வீரசைவர்களைப் பழித்துரைப்பதாகுமல்லவா? இங்கனம் அவர்களைபழித்துரைப்பதற்கு அவர்கள் இவருக்காவது, இவர் சம்மேளனத்துக்காவது அதன்தலைவர்க்காவது செய்தகெடுதியென்ன? இங்ஙனம் வீணே வீரசைவப் பெருமக்களைப் பழித்துரைப்பதைப் பார்க்கிலும் பெருங் கொடும்பாவம் வேறு யாதுளது?

இவர் குருபூசை நாள் மறுப்பில் "அரங்கின்றி வட்டாடல்" என்ற செய்யுளைத் தம்மதாகக் கொண்டவர். தாமெடுத்துக்கொண்ட பொருளை விடுத்து விதவை மணத்தை நாடிச் செல்வானேன்? அது மற்றொன்று விரித்துரைத்தலென்னுங் குற்றத்திற்குள்ளாகுமிவர் அரங்கின்றி வட்டாடுகின்றவரா? அரங்கோடு விட்டாடுகின்றவரா? இளம் விதவைகளின் துன்பங்களைவான் தக்க பேரறிஞர்கள் முயற்சிசெய்து வருகிறார்கள். விதவை மணங்களும் நடந்து வருகின்றன. இவரோ பழையகோட்பாட்டை விரும்பி சீர்திருத்தக்காரர்களைப் புதுக் கோட்பாடுடையார் நாத்திகரென்று எளனஞ் செய்கிறார். இவர் பழைய கோட்பாட்டின்படி ஊண், உறக்கம், நடை முதலிய வற்றை வழுவாது செய்து வருகின்றாரா? அல்லது உடன் கட்டையேறவாவது சம்மதிக்கின்றாரா?

கற்பு என்ற சொல்லை இவர்போன்ற ஆண்களின் அதிக்கிரமங்களாலும், ஆட்சி வன்மையாலும் பெண்களினத்தன்பேரில் மாத்திரம் சுமத்தி பெண்கள் சமூகத்தைக் கேவலத்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

றமை அவசியமென்றும் சொல்லி இம்முயற்சி வெற்றிபெற விரும்புவதாயும் மற்றும் தன்னால் கூடிய உதவி செய்வதாயும் சொல்லி தனக்கு இச் சபைக்கு தலைமைவகிக்கும் பெருமையைக்கொடுத்ததற்கு நன்றி செலுத்தினார். திரு கே. எல். கிருஷ்ணசாமி அய்யங்கார் தலைவருக்குநன்றிசெலுத்தியபின் கூட்டம் 8-மணிக்கு இனிது நிறைவேறிற்று. பிறகு திரு ஈ. வெ. இராமசாமி வீட்டில் விருந்து நடந்த பிறகு இரவே திருவாளர்கள் பொன்னையா கவுண்டர் ஏ. ஆர். சிவானந்தம் முதலியவர்கள் காரில் நேரே கோவைக்குச்சென்றுவிட்டார்கள்.

பதுத்தியது போல உடன்கட்டையேறும் வழக்கத்தையும், மறு விவாகம் கூடாது என்ற வழக்கத்தையும் பெண்களுக்கே யுரித்தாக்கவை என்று ஏற்படுத்தி ஆண்கள் பட்ச பாதகமாக பெண்களைக் கொடுமைப் படுத்தி வந்தார்கள். பிற்காலத்தில் உடன்கட்டையேறும் வழக்கம் நிறுத்தப்பட்டது. மறுவிவாகமும் ஆண்களைப் போலவே பெண்களுஞ் செய்து கொள்ளலாமென்று நடுநிலை யறிவும் தனித்துணர்ச்சியுமான வுணர்ச்சியுமுள்ள மக்களாலொப்புக் கொள்ளப்பட்டு முயற்சி செய்து வருவதன் பயனாய் சில இடங்களில் விதவை மணம் நடந்து வருகின்றது. அதனை ஒப்புக்கொள்ளுஞ் சட்டமும் அரசாங்கத்தாராலேற் படுத்தப்பட்டு சுமார் எழுபத்தைந்தாண்டுகட்கு மேலாயின. இவர் கூறும் பழைய யேற்பாட்டிற்கு பழைமையான கோட்பாடு யாதெனின் இவருமிவர் வகையறுக்களும் தலைமேல் சுமந்து சீராட்டிப் பாராட்டும் இருக்குவேதத்திற்கூறப்பட்ட விதவை மணமே யென்று தத்தர்முதலிய சரித்திர ஆராய்ச்சி அறிஞர்களுக்கூறுகின்றார்கள்.

மேலும் உடற் சேர்க்கையின்ப வுணர்ச்சி ஆண்களுக்கு யிருப்பது போலவே பெண்களுக்குமுண்டு என்பதை உணராத மக்களுமுண்டோ? இவர் மக்களினத்தைச் சேர்ந்தவராயிருந்தும் விதவை மணம் கூடாதென்ற கருத்தை வெளியிடவேண்டிய ரகசியமென்ன? வேடமிலார் சிலர் செய்யும் அபிப்பிராயங்களைப் பார்க்கிலும் மிகுதியாக உருத்திராக்கம், விபூதி, சந்தனம், திருமண், குங்குமம் முதலிய போலி வேடந்தரித்த சிலர் தங்களைக் கடவுள் பக்தியிற்சிறந்தவராக பொது ஜனங்களெண்ணுமாறு பாவனைசெய்துகொண்டு செய்யும் அந்தரங்க அக்கிரமங்களுக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறாரா? இவர் வகையறுக்களின் சேர்க்கைப் பலனாக இங்ஙனம் பேசுகின்றாரா? அல்லது உடன்கட்டை யேறுங்காலத்திற் பிறக்கவேண்டிய யிவர் இருபதாம் நூற்றாண்டில் வந்து பிறந்ததனாலா? எது எப்படி யிருப்பினும் இனியாவது இயற்கை விதிகளுக்கெதிர் செல்லாது உலகத்தோடு பொருந்த வாழ்தலே நலமென்று இவர் உணர்வாராக. இல்லையாயின் காலமறிந்து நடவாதான் கோலமதியாக் குரங்கு வானென்ற பழமொழிக்கிலக்காகி இடர்ப்படுவாரென்பது திண்ணமே

இவர் தமது பழைய கோட்பாட்டைப் பரப்புதற்கு வாதசபை வேண்டுமென்று விரும்புகிறார். தமது பிரசங்களிலேயே தம்மைத்தாமே சகலகலா வல்லவரென்று மதித்திருப்பதாகக் காட்டி மக்களை யேமாற்றக் கருதும் இவருடைய வாதத்தைத் தீர்ப்பதற்கு இங்கு யாரால் முடியும்? இவர் வாதசபை பித்தசபை யானால் என் செய்வதென்று நடுநிலை யறிவுடையோரஞ்சுவது இயற்கை யல்லவா? அன்றியும் இவர் தன்மையும், தமது சம்மெளனத்தையும் தமது தலைவரையும் சம்மெளனத்தின் கொள்கைகளையும் வகைதொகைகளையும் பொது ஜனங்களுக்குத் தெளிவாய் தெரிவித்து அச்சம்மெளனம் வாயிலாக தமது பழைய கோட்பாடுகளைப் பரப்புதலேயமையும். அவ்வாறு செய்யாது தமது சம்மெளனத்தை ரகசியமாக வைத்துக்கொண்டு மற்றொரு வாதசபையைத் தேடுவானேன்?

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

வில் களில் அழிக்கப்படும் கோடிக்கணக்கான திரவியக்குவியலுக்குக் கணக்குப்போட்டுக்காட்டினால் அது எப்படியிருக்கும்! வெள்ளைக்காரன் கொள்ளைக்காரனாயின் அவனைத்துரத்துவது கொள்ளை யடிக்கப்பட்டோரது வேலையாகும். அதைச்செய்ய மக்களுக்குத்திறமையில்லாது போம்படிச்செய்ததெது வென்பதையே சுயமரியாதை இயக்கம் துணிந்துதெளிவாய் கூறுகின்றது "கடவுள் சமயம் பக்தி" எனும் மூன்று பெரும் பேய்களும் நம்நாட்டைக் கொள்ளையடித்ததன்றி நம்மனோரைப் பேடிகளாயும், கோழைகளாயும், அறிவிலிகளாயும். செயலற்ற சோம்பராயும் ஆக்கி விட்டனவென்று அதையும் ஒரு இயக்கம் உண்மையில் "தெய்வத்தன்மை" பொருந்திய தன்றோ?

சுயமரியாதைஇயக்கத்தின் இன்னொரு சிறப்பென்ன வெனில் பொது ஜனங்களுக்கு விளங்குமாறு எளிய நடையில் பேசுவதும், எழுதுவதுமாகும். இதைத்தமிழ்ப்புலவர் சிலர் வெறுக்கின்றனர். யாழ்ப்பாணத்தில், புலோலி என்ற ஊரில் ஒரு புலவரிருந்தார். ஒரு நாள் காலையில் ஒருசிறுவன் தனது ஒரு சாலை மாணவனான அப்புலவரது மகனைத்தேடிச்சென்று 'சோமசுந்தரம்எங்கேஐய ?' என்று கேட்டான். அதற்கு அத்தனித்தமிழ்ப்புலவர் "கைகறையிற்றுயிலினின் றெழுந்த எஞ்செல்வன் எக்குற்றனனோ அறிகிலன் யான" என்று கூறினர். அது விளங்காத பொடியன் அவர் தன்னைத்திட்டுவதாயெண்ணி யோடினான். அதேபோல்நமது தமிழ்ப்புலவர்களும் கல்வியறிவேயில்லாத நம்மவரிடம் சங்கத்தமிழில் முழங்க வேண்டுமென்று கருதுகின்றனர் போலும்! சுயமரியாதை இயக்கத்தினர் புராணங்கள் இதிகாசங்களைத்தாக்குகின்ற பொழுது அவற்றைப் போற்றும் புலவர்கள் என்ன பதிலளிக்கிறார்கள்? "சுயமரியாதைக்காரருக்குப்புராண இதிகாசங்களை அறிந்துகொள்ளும் ஆற்றல் இல்லை. தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் பயிற்சியிலதோர் எங்ஙனம் அவற்றைக்குறைகூறலாம்?" எனுங்கருத்துப்படத்தானே பண்டிதக்கூட்டம் கதறுகின்றது! தமிழ் மொழியின் "தெய்வத்தோற்றத்தை" யும் அதன் "அற்புதஞ் செயுஞ்சக்தி" யையும் சுயமரியாதை இயக்கம் நன்கு கண்டித்து விட்டது நானும் ஓர் தனித்தமிழ்ப்பித்தன் தான். ஆயினும் வைதீகப்பண்டிதர் போன்று தமிழுக்கு வேறெந்த மொழிக்கும் இல்லாத சிறப்பிலக்கணத்தைச்சுட்ட ஒருப்படாத சீர்திருத்தி எனவே தன்மதிப்பு இயக்கத்தில் எனக்கு அளவு கடந்த மதிப்பு உண்டென்க.

இக்கட்டுரை எதிர் பார்த்திருந்ததற்கு அதிகமாய் நீண்டு விட்டது. அடுத்த கட்டுரையில் பகுத்தறிவுக்கும், உண்மை யாராய்வுக்கும் ஒப்பும் சங்கதிகளைப்பற்றிக் கவனிப்போம். "குடி அரசு" க்குக்கிழமை தோறும் ஒவ்வொருபொருளின் மேல்ஆராய்ச்சிக்கட்டுரைகள் எழுதிவர ஆசிக்கின்றேன். "குடிஅரசு" இடந்தருமெனவும அதன் வாசகர்கள் என்னை வரவேற்பார்களென்றும் நம்புகின்றேன்.

பகுத்தறிவு பரவிப்பயன் பலதருக! உண்மை ஓங்குக!! உன்மத்தம்ஒழிக!!!

தலைவர்கள் வருகை.

5—7 31 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 2-மணிக்கு திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமியார், பட்டிவீரன்பட்டி ஊ.ப.அ. சௌந்திரபாண்டியன், விருதுநகர் வி. வி. இராமசாமி, பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, சண்டமாருதம் ஆசிரியர் அ. பொன்னம்பலனார், அவர்கள் துணைவியார் சுலோசனா, சாத்தான்குளம் அ. இராகவன் ஆகிய இவர்கள் கோட்டாறு சுயமரியாதை வாசிப்புசாலை 2-வது ஆண்டு நிறைவு விழாவை நிறைவேற்றி வைக்குமுகத்தான் போய்விட்டு வரும் சமயம் பணகுடியில் அனுப்ப ரசர்குல கல்வி அபிவிருத்திச் சங்கக்காரியதரிசியும், நிதி காப்பாளருமாகிய உயர்திரு ஏ. அழகு அவர்களால், மாலை சூட்டி வரவேற்று திரு வ. நா. மீராசாயபு மரைக்காயர் காம்பவுண்டுக்கு அழைத்து செல்லப்பட்டு சிற்றுண்டி அருந்திய பிறகு முன்னவர் மூவரும் அவசர நிமித்தமாக உடன் சென்றுவிட்டனர். பின்னர் கே. வி. அழகர்சாமி தலைமையின்கீழ் அ. ராகவன் அவர்கள் "சைவம்" என்பது பற்றியும், அ. பொன்னம்பலனார் அவர்கள் "சுயமரியாதையும் அதன் தத்துவமும்' என்பது பற்றியும் சொற்பொழிவு ஆற்றினார்கள். பின்னர் அக்கிராசனர் முடிவுரை கூற திரு ஏ. அழகு அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு மாலை 5-மணிக்கு கூட்டம் இனிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

காந்தீயம்
வருணாச்சிரமத்தை
வளர்ப்பது.

தஞ்சை ஜில்லா ஆதிதிராவிடர் மகாநாடு.

நிறைவேறிய தீர்மானங்கள்.

கடந்த 4ந்தேதி யன்று தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் கூடிய ஆதிதிராவிடர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பின் வருமாறு:-

மாட்சிமை தங்கிய இராஜதம்பதிகளுக்கு நோயற்றவாழ்வும், நீடித்த ஆயுளும் கொடுக்குமாறு கடவுளைப் பிரார்த்திப்பதாகவும், புதிய வைசிராய் தம்பதிகளை வரவேற்பதாகவும், பர்ம இந்தியர்களின் துயரத்திற்காக வருந்தி தக்க பரிகாரம் செய்யுமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுவதாகவும், மலேயா முதலிய நாடுகளில் வேலை யில்லாது திரும்பி வந்த இந்தியர்களுக்குப் பிழைப்பதற்கோர்வழி தேடிக் கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுவதாகவும், ஆதிதிராவிடர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும் கஷ்டமுண்டாகாம லிருக்கும்படிக்கும் ஆதிதிராவிடர்களின் விவசாயக் கஷ்டங்களைப் போக்கவும் எல்லா மக்களு மடங்கிய ஒரு கமிஷன் நியமனம் செய்யவேண்டுமெனகேட்டுக் கொள்ளுவதாகவும்,

இந்துக் கோவில்களில் ஆதிதிராவிடர்களைப் பிரவேசிக்க விடாதிருப்பது ஆதிதிராவிடர்களின் சுயமரியாதைக்கு விரோதமா யிருப்பதால் கவர்ன்மெண்டார் அக்கோவில்களுக்குக் கொடுக்கும் மோகினித் தொகையை நிறுத்தி அத்தொகையை ஆதிதிராவிட மாணவர்களின் கல்வி, கைத்தொழிற்சாலை யாகியவைகளின் அபிவிருத்திக்காக கொடுத்துதவவேண்டுமெனப் பிரார்த்திப்பதாகவும், ஜாதி வித்தியாசம் பாராட்டும் மக்களை எந்த உத்தியோகத்திலும் நியமனம் செய்யக் கூடாதெனக் கேட்டுக்கொள்ளுவதாகவும், தபால், எக்சைஸ், சால்ட், ஆப்காரி முதலான டிபார்ட்மெண்டுகளில் உத்தியோகம் கிடைக்கும்படி செய்யவேண்டுமெனப் பிரார்த்திப்பதாகவும்,சென்னைமாகாணத்தில் போலீஸ் டிபார்ட்மெண்டில் யோக்கியதைக்குத் தக்கபடி கான்ஸ்டேபிள் முதல் இன்ஸ்பெக்டர் வரையிலாவது 100க்கு 50 வீதம் நியமனம் செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுவதாகவும் ஆதிதிராவிட வகுப்பில் கல்வி பயன்றவர்கள் 100க்கு 1, 2 கூட கிடைப்பதரிதா யிருக்கின்றமையால் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலிருந்து விதிவிலக்கு செய்துஉத்தியோகம் கொடுக்கும்படியாய்ப் பிரார்த்திப்பதாகவும், எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சையில் ஏதோ சொற்ப மார்க்குகள் குறைவாக வாங்கியவர்களை உத்தியோகத்திற்கு லாயக்கில்லையெனத் தள்ளிவிடாமல் உத்தியோகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக்கேட்டுக் கொள்வதாகவும், சில தென் ஜில்லாக்களில்போதனாமுறைப் பாடசாலைகளில் லோயர்கிரேடை எடுத்துவிட்டமையாலும், ஆதிதிராவிடர்களில் பெரும்பாலோர் அதனால் கஷ்டப்படுவதினாலும், நாட்டில் கட்டாயக்கல்வி அமுலுக்குவரும்வரை மேற்படி கிரேடை யெடுக்கக்கூடாதெனக் கேட்டுக் கொள்ளுவதாகவும் சர்க்காரிலும், ஸ்தலஸ்தாபனங்களிலும் உத்தியோகத்திலுள்ள ஆதிதிராவிடர்கள் போர்டுகளிலும், முனிசிபாலிடி, யூனியன், பஞ்சாயத்து முதலிய ஸ்தாபனங்களில் மெம்பர்களாயிருக்கக் கூடாதென்பதை ரத்துசெய்து, மேற்படியார்களையே ஸ்தானம்வகிக்க அருகராகும்படி ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்ளுவதாகவும்,

கவர்ன்மெண்டு, லோகல் பண்டு, முனிசிபாலிட்டி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களிலும் சர்க்கார் உதவி பெறும் கைத்தொழிற்சாலைகளிலும், கல்லூரிகளிலும் மதபேதம் பாராட்டாமல் ஆதிதிராவிட மாணவர்களைச் சேர்த்து ஸ்காலர்சிப் கொடுத்து ஆதரிக்கவேண்டுமெனக்கேட்டுக் கொள்ளுவதாகவும், சிதம்பரம் நந்தனார் கல்விக்கழகத்திற்குச் சர்க்கார் 11 ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுத்ததற்காகச் சர்க்காராரைப் போற்றுவதாகவும், அக்கல்விக் கழகத்திற்கு இன்னும் வேண்டிய உதவி செய்யும்படியாக பிரார்த்திப்பதாகவும், சைமன் கமிஷனில் ராவ்பகதூர் எம். ஸி. ராஜா அவர்களும், வட்ட மேஜை மகாநாட்டில் டாக்டர் அம்பேத்காரும், ராவ்சாகிப் திரு. ஆர். சீனிவாசன் அவர்களும் புரிந்த ஊழியத்தைப் பாராட்டுவதாகவும், ஆங்கில அரசாட்சியிலேயே ஆதிதிராவிடர்களுக்குத் தீண்டாமையின் காரணமாக சகிக்கமுடியாத கொடுமைகளும், அட்டூழியங்களும் நிகழ்ந்து வருவதால் அந்தக் கொடுமைக்குக் காரணமாகிய ஜாதி இந்துக்கள் சுயராஜ்யம் வருமுன் தீண்டாமையை அறவே யொழிக்க வேண்டுமென ஆங்கிலேய அரசாங்கத்தையும் காங்கிரஸ் மகாசபையையும் மகாத்மா காந்தியையும் இனி சுயராஜியத்திற்கு முயற்சிகள் செய்யக்கூடாதென வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுவதாகவும் அரசியல் சுதந்திரத்தைத் தெரிந்து கொள்வதில் முஸ்லீம் கிறிஸ்தவர் முதலிய சிறுபான்மை யாரோடு கலந்துழைப்பதாகத் தீர்மானிப்பதாகவும்

கூடப்போகும் வட்டமேஜை மகாநாட்டில் ஆதிதிராவிடப் பிரதிநிதிகளையும் நியமனம் செய்யும்படிக் கேட்டுக் கொள்ளுவதாகவும் ரீகான்ஸ்டிடியூட்டெட் பொலிஸ்ட்ரக்சர் கமிட்டியிலும் சப்கமிட்டிகளிலும் பிரதிநிதித்துவம்கொடுக்கும்படி கோருவதாகவும் சுயராஜியத்திட்டத்தில் தனித்தொகுதியே விரும்புவதாகவும் ஆதிதிராவிடர்களுக்கு இருப்பது போலவே ஆதிதிராவிட கிறிஸ்தவர்களுக்கும் பல கஷ்டங்கள் விருப்பதால் மதபேதம் பாராட்டாமல் இருதரத்தாருக்கும் சம உரிமைகளை அளிக்கும்படிக்கேட்டுக்கொள்ளுவதாகவும் "தீண்டாமையை ஒழிக்காத சுயராஜியம் பயன்படா" தென்றுமகாத்மாகாந்தியவர்கள் எழுதியும்பிரசங்க மூலமாய் சொல்லியிருந்தும்கூட சென்ற 44 வருஷங்களாக ஏற்பட்டுள்ள காங்கிரஸ் மகாசபை தனது தீர்மானங்களில் வெறும்வாயளவில் மாத்திரம் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று சொல்லி வருகிறதே தவிர நடவடிக்கையில் அதற்கான வழிகளைக் கையாடாமல் இருப்பதாலும் தீண்டாமை ஒழிக்காத சதர் பிரசாரத்தில் நம்பிக்கை யில்லையென இம்மகாநாடு மிகவும் அழுத்தமாகத் தீர்மானிக்கிறதெனவும்

சிக்கனக் கமிட்டியின் சிபார்சின் காரணமாக லேபர்டிபார்ட்மெண்டை குறைக்கவாவது எடுக்கவாவது கூடாதென வற்புறுத்துவதாகவும் அப்படி எடுக்கும் பட்சத்தில்சர்க்காரார் மீதிருந்த நம்பிக்கையை இழந்துவிட நேரிடுமென்பதையும் அறிவிப்பதோடு எங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருந்தவர்களுடைய எண்ணத்திற்கும் ஆளாவோம் என்பதையும் அறிவித்துக்கொள்வதாகவும் லேபர்டிபார்ட்மெண்ட் 13 வருஷங்களாக விருந்தும் ஆதிதிராவிட மக்களில் அநேகர் தண்ணீர் வசதி கிணறு ஐக்கிய நாணயசங்கம் பள்ளிக்கூடம் முதலியவைகள் இன்றி கஷ்டப்படுவதற்குக் காரணம் அதில் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலும் ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்தில் விருப்பமில்லாத உயர்ந்த ஜாதியினர்களாகவே யிருந்து வருவதால் 100க்கு 75 வீதம் அதில் எங்கள் வகுப்பினர்களையே நியமிக்கும்படி வணக்கமாய் கேட்டுக் கொள்ளுவதாகவும் லேபர் டிபார்ட்மெண்டிலுள்ள ஆதிதிராவிட உபாத்தியாயர்களை ஜில்லாவின் ஒரு கோடியிலிருந்துமற்றொரு மூலைக்கு மாற்றுதிருக்கும்வண்ணம் லேபர்ஆபீஸர் அவர்களைகேட்டுக்கொள்ளுவதாகவும்,லேபர்டிபார்ட்டுமெண்டிலுள்ள ஆசிரியர்களுக்கு அந்தந்த மாதசம்பளத்தை அந்தந்தமாதத்திலேயேபட்வாடாசெய்யுமாறு கேட்டுக்கொள்ளுவதாகவும், ஆதிதிராவிடர்களுக்கு மனைக்கட்டு வாங்க ஆரம்பம் செய்யுங்காலத்து டிபாஸிட் பெற்றுக்கொண்டு இரண்டு, அல்லது மூன்றுசெண்ட்நிலமே தான் இப்பொழுது கொடுக்கப்படமுடியுமெனவும் இல்லையாகில்மனைக்கட்டு வேண்டாமென எழுதிக்கொடுக்கும்படிலேபர் ஆபீஸரவர்கள் தொந்திரவு செய்வதால் இதைக்கவனித்துநியாயம் வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுவதாகவும்,

இராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, மதுரை, தென்னாற்காடு முதலிய ஜில்லாக்களிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு கள்ளர்களாலும், உயர் ஜாதி இந்துக்களாலும் ஏற்பட்டுள்ள பலவித கொடுமைகளையும், அட்டூழியங்களையும் கேள்விப்பட்டு வருந்துவதாகவும் இதற்குக்காரணஸ்தர்களாய் இருந்தவர்களையும் விசாரணைசெய்யாமலிருக்கும் அதிகாரிகளையும் விசாரணைசெய்து தக்க பரிகாரம் தேடிக்கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுவதாகவும் ஆதிதிராவிடத்தலைவர்களும், சட்டசபை மெம்பர்களும், சீக்கிரத்தில் ஒரு தூதுக்கமிட்டி நியமித்து இதுவிஷயமாய் கவர்னரவர்களைக் கண்டுபேசி நியாயம் கிடைக்குமாறு கேட்டுக்கொள்ளுமெனவும், தஞ்சை டவுன் பூக்காரத்தெரு சுப்பிரமணியர் கோயில் வட்டாரத்திலும், முனிசிபாலிட்டியில் சம்பந்தப்பட்ட பொதுரஸ்தாவிலும், கூடும் பூச்சந்தையில் ஆதிதிராவிடர்கள் உள்ளே நுழையாதபடி தடுக்கப்பட்டிருப்பதால் ஸ்தல அதிகாரிகள் நன்கு கவனித்து இக்குறைபாட்டை நிவர்த்திக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும், சாப்பாட்டுக் கிளப்புகளிலும், காப்பி ஓட்டல்களிலும் உணவு கிடைப்பதும் பார்பர் சாப்புகளில் க்ஷவரம்செய்து கொள்ளுவதும் ஆதிதிராவிடர்களுக்கு மிக கஷ்டமாயிருக்கின்றபடியால் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் ஜாதிவித்தியாசம் பாராட்டககூடாதென்ற நிபந்தனையை அவர்களுடைய லைசென்ஸில்சேர்த்துக்கொடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறதெனவும் தஞ்சையில்ஸ்டேஷன் அருகிலுள்ள ஆனந்த லாட்ஜ் ஓட்டலில் பஞ்சமரும் பெரும் வியாதியஸ்தர்களும், பிரவேசிக்கக்கூடாதென்ற விளம்பரம் செய்திருப்பதானது ஆதிதிராவிடர்களின் மனஉணர்ச்சியை புண்படுத்துவதாயிருப்பதால் அந்த விளம்பரத்தை ரத்துசெய்யும்படி தஞ்சை ஜில்லா மாஜிஸ்திரேட் அவர்களைக்கேட்டுக்கொள்ளுவதாகவும், தஞ்சை முதலான ஜில்லாக்களில் ஆதிதிராவிடர்களை மோட்டாரில் யேற்றுக்கொள்ள மறுக்கும் மோட்டார் ஏஜண்டுகளின் லைசென்ஸில் ஜாதிவித்தியாசம் பாராட்டக்கூடாதென்ற நிபந்தனையை சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுவதாகவும்

28-6-31 மதுரையில் கூடிய அகம்படியர் மகாநாட்டில் ஆதிதிராவிடர்களுக்குச் செய்ததீர்மானங்களைப் பற்றி அவர்களைப் பாராட்டுவதோடு அத்தீர்மானப்படி தீண்டாமையை விலக்குவதற்கு தீவிரமுயற்சி எடுப்பார்களென எதிர்பார்ப்பதாகவும், நாங்கள் மகாநாடுகள் கூட்டி எங்களுடைய கஷ்டங்களை கலந்து ஆலோசித்துத், தீர்மானிப்பதைப் பற்றி சில பத்திரிகாசிரியர்கள் எங்கள் தலைவர்களையும், அபிமானிகளையும் தாக்குவதைப்பற்றி வருந்துவதாகவும் சென்ற வருஷத்தில் வெள்ளத்தினால் வருந்திய தஞ்சை ஜில்லா ஆதிதிராவிடர்களுக்கு உதவிசெய்த செஞ்சிலுவை சங்கத்தாருக்கும், இராமகிருஷ்ண மிஷன் சங்கத்திற்கும் வெள்ளக்கஷ்ட நிவாரண கமிட்டிக்கும் நன்றி செலுத்துவதாகவும், தஞ்சைஜில்லாவில் ஏற்படுத்தப்

ராஜா முத்தையா நூலக அறக்கட்டளை

அறியாமையா? கண் மூடித்தனமா?

மத பக்தியோடு வைதீகம் பேசும் வைதீகர்களே! பிறவியிலேயே உயர்ந்தவர்களெனக்கூறும் பிராமணர்களே! சிவத்திற்கு மேல் தெய்வமில்லையெனக்கூறும் சிவநேசர்களே! ஆஸ்திகத்தை பரப்பும் ஆஸ்திகர்களே! தேச விடுதலைநாடும் தேசபக்தர்களே! மேடை மீது சீர் திருத்தம் பேசும் சீர்திருத்தவாதிகளே! ஆராய்ச்சியிலேயே ஆழ்ந்து கிடக்கும் ஆராய்ச்சியாளர்களே! பகுத்தறிவைப்பற்றி பலபடப்பேசும் பகுத்தறிவாளர்களே! வறுமை நிலையைப்பற்றி வாய்ப்பறை சாற்றும் சிக்கனவாதிகளே! சமயபோதனை செய்யும் சமய வாதிகளே! கோடிக் கணக்கான கடவுளைக் காப்பாற்றும் கடவுள் தாசர்களே! புராணப்பெருமையும் சமய குரவர் அற்புதமும் பேசும் புராணப்பிரசங்கிகளே! மதத்தையும், சமயத்தையும் காப்பாற்றும் சங்கராச்சாரிகளே! மடாதிபதிகளே! அரசியல் ஞானிகளே! நீங்கள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? திருப்பாலைக் குடியில் நடந்த திருவிளையாடலையும் இன்று காரைக்குடியில் நடக்கும் காட்சியையும் கண்டீர்களா? பக்கிரி மஸ்தானொலியின் புகழ் பாடப்படுகிறது; பல்லாயிரக்கணக்கான மக்கள் பல ஊர்களிலிருந்தும் வந்து கூடுகிறார்கள்; பல வகை நோயுடையவர்கள் பாத்திரமும் கையுமாக வருகிறார்கள். பசியும் புழுக்களும் நிறைந்த 'வீரியன் கம்வாய் ஊருணியில்' நீராடி தண்ணீரை எடுத்துக்கொண்டு செல்கிறார்கள். எலுமிச்சம்பழமும் ஊதுவத்தியும் ரோஜா மாலையும் கையிலேந்தி பலர் வருகிறார்கள். எல்லோரும் பக்கிரிமஸ்தானொலியை வணங்கி வரிசையாக நிற்கிறார்கள். பக்கிரிமஸ்தானொலி ஒவ்வொருவருடைய தண்ணீர் பாத்திரத்தையும் வாயால் ஊதி கைச்சாடை காட்டுகிறார். வாய் பேசுவதில்லை. பக்கத்திலுள்ள சீடர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள். பின் தலைணைப்படி தண்ணீரைக்குடிக்க வேண்டுமாம்! அதனால் குஷ்டம் நீங்குமாம்! ஊமை பேசுமாம்! விஷம் நீங்குமாம்! வயிற்றுவலி பறக்குமாம்! தீராத நோயெல்லாம் தீருமாம்! பின் ஜுவரத்திற்காகவும், வீட்டு விலக்காகுதற்காகவும் வரும் பெண்மணிகள் எலுமிச்சம் பழத்தை ஊதி வாங்கிக் கொண்டுபோய் சாப்பிட்டால் உடனே வயிற்றில் கர்ப்பமாகுமாம்! தடையின்றி வீட்டு விலக்கம் வெளிப்படுமாம்! மற்றும் பல அற்புதச் செயல்களாகியவைகளெல்லாம் நம்பிக்கையுடையவர்கட்கே கைகூடுமோம்! அன்பர்களே! நீங்கள் யாவரும் இதனை நம்பித்தான் செல்கின்றீர்களா? உங்கள் மத பக்தியும் உயர்ந்த ஜாதி வெறியும் சமய புராண போதனையும் கடவுள் அற்புதமும் கணக்கற்ற சக்தி வாய்ந்த பெருமைகளும் இன்று என்னவாயின? நீங்கள் வழிபடும் பலவகைக் கடவுளை இனியாவது சக்தியற்றதென்று பாழடைந்த கிணற்றில் போட்டு மூடுவீர்களா? சமயப்பெருமையும், புராணப்பெருமையும், பண்டையப் பெருமையும் கூறுவதை விட்டொழிவீர்களா? பக்கிரி மஸ்தானொலி அற்புதத்தில் நம்பிக்கையுடையவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைப் பின் பற்றுவீர்களா? இன்றேல் நீங்கள் கும்பல் கும்பலாக பெண்டு பிள்ளைகளோடு சென்று பெரும் கஷ்ட நஷ்டத்தோடு வீடு திரும்பும் உங்கள் நிலை அறியாமையா? கண்மூடித்தனமா? என்பதை தயவு செய்து பகுத்தறிந்து பாருங்கள். நபி நாயகத்தின் உண்மைச்சீடர்களே! உங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் பக்கிரி மஸ்தானொலியின் திருவிளையாடலுக்கு இடமிருக்கிறதா? இதை உங்கள் ஆண்டவன் ஆணையாக நம்புகின்றீர்களா?

அ. பொன்னம்பலம்.

பட்ட ஆதிதிராவிட மாணவர் விடுதியில் இன்னும் அதிகமாணவர்களைச் சேர்த்து வேண்டிய சௌகரியங்களும் செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுவதாகவும் ஆதிதிராவிடர்கள் பலதுறைகளிலும் முன்னேற்றமடையாமலிருப்பதனால் சட்டசபை கனவான்களும் தேசாபிமானிகளும் கட்சிபேதம் பாராட்டாமல் ஆதிதிராவிடர்களுக்கு சட்டசபை மூலியமாய் வேண்டிய உதவிபுரிய வேண்டுமென வேண்டிக்கொள்ளுவதாகவும், ஆதிதிராவிடர்களுக்குள் மதபேதக் கட்சிமுதலிய வித்தியாசங்கள் காட்டாமல் யாவரும் ஒத்துழைக்கவேண்டுமென அந்தந்தத் தலைவர்களைக்கேட்டுக்கொள்ளுவதாகவும் இத்தீர்மானங்களையெல்லாம் பத்திரிகைகளுக்கும் இன்னும் இதர அதிகாரிகளுக்கும் அனுப்பும்படியாக இம்மகாநாட்டு பொதுக்காரியதரிசியாகிய திரு. எ. மனுவேல் அவர்களையும் மகாநாட்டு வரவேற்புக்கழகத் தலைவர் திரு. அ. சிவராமசமி பிள்ளை அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறதெனவுமாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மகாநாடு இனிது கலைந்தது.

நற்சாட்சி.

பழனி வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி அவர்களால் செய்யப்படும் மருந்துகள் சிலவற்றை வாங்கி நான் பரிசோதித்து பார்த்ததில் சொன்னபடி வியாதியைக்கண்டிக்கும் சொர்ணமென்றும், குறிப்பிட்ட வியாதிகளைக்கண்டிக்கும் குடும்ப ஔஷதமென்றும், தாரா ஊக்கத்தைக்கொடுக்கும் தங்கமென்றும் சொல்லுவது மிகையாகாதென்று சானப்புதூர் ஐக்கிய சங்கத் தலைவர் திரு. வி. எஸ். மார்க் அவர்கள் எழுதுகிறார்.

காந்தியின் திண்டாட்டம்.

உயர் திரு காந்தியவர்கள் லண்டன் மகாநாட்டிற்கு வருவதாக சர்க்காரிடம் உறுதிகொடுத்து ராஜிசெய்து கொண்டதிலிருந்து அவர்பாடு மிகத்திண்டாட்டமாகவே போய்விட்டது. ஏனெனில் தான் வட்டமேஜை மகாநாட்டிற்கு போனால் என்னசெய்வது என்பது அவருக்கேபுரியாததாய் இருக்கின்றதுடன் இவரது அபிப்பிராயத்தை ஆதரிக்க அங்கு போதிய ஆட்கள் கிடைக்குமா என்பதே பெரிய சந்தேகமாகி விட்டது. அரசியல் சுதந்திரத்தை விட சீர்திருத்த அதாவது சமத்துவ சுதந்திர உரிமை ஆகியவை கேட்கும்வேலையே அங்கு தலை சிறந்துவிளங்கப் போகின்றது. ஆதலால் திரு காந்திக்கு அங்கு செல்வாக்கு இருக்கமுடியாது. திரு காந்தியை லங்காஷயர் உள்பட அநேக ஊர்க்காரர்கள் கூப்பிடுவதாயிருந்தாலும் அவர்கள் இவரைப்பார்க்க ஆசைப்படுவார்களேயொழிய இவர்பேச்சைக்கேட்பவர்களாய் இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம். இது அவருக்கேதெரியும். ஆதலால் ஏதாவது ஒரு சாக்கைப் போட்டு போகாமல் தப்பித்துக் கொள்ளப்பார்க்கின்றார் என்பதாகவே நாம் கருதுகின்றோம். நம்மைப்பொறுத்தவரை அவர் போவதும் போகாததும் ஒன்றேதான். ஆனால் அவரைப்பொறுத்தவரை அவர்போகாமல் இருப்பதே அவருக்கு நன்று. இது அவருக்கும் தெரியும். ஆதலால் அநேகமாய் அவரும் போகமாட்டார் என்றுதான் கொள்ள வேண்டும்.

குடி அரசு கிடைக்குமிடம்.

திருப்பூர்.
ஆர். கருப்புசாமி,
பல்லடம் ரோடு.

சாத்தூர்.
எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

இங்கிலீஷ் 'சிசர் விட்சு' குதிரைப் பந்தய லாட்டரி.

14-10-31-ல் நியூவ் மார்க்கட்டில் 'மியூட்சுவல் இளப்பாரால் நடக்கும் பிரைசுக்கு கொடுப்பது 90,000 பவுன். டிக்கட் 1-க்கு ரூ. 4-8-0 3-க்கு ரூ 13. டிக்கட்டிற்கு முன் பணத்துடன் முந்துங்கள்!

அதிகாரம்பெற்ற எஜண்டு:—
S. K. வரதராஜலு,
ஆனந்தநிலயம், திருச்செங்கோடு S. I.

பிரிவு உபசாரம்.

போர்டு பெண் பாடசாலை, குண்ணத்தூர்.

14-7-31ந்தேதி மாலை 4மணிக்கு ஷை பாடசாலைத்தலைமை உபாத்தியாயனி திருமதி தாயம்மாள் அவர்கள் மாறுதல் செய்திருப்பதை முன்னிட்டு பிரிவு உபசார விழா நடைபெற்றது. ஷை விழாவிற்கு ஆண்பாடசாலைத் தலைமை ஆசிரியர் தலைமை வகித்தார். ஆசிரியர் பி. எஸ். கந்தசுவாமி தலைமை உபாத்தியாயனியம்மையாரின் வேலைத் திறமையை எடுத்துக்கூறி ஓர் பிரிவு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார். பின்னர் மாஜிமதவிலக்குப்பிரசாரகர் திரு. சங்கரையா கிராமவாசிகளின் சார்பாக பிரிவுவந்தனோபசார சொற்பொழிவாற்ற இறுதியில் தாம் பூலசந்தனாதிகளுடனும் தேக்கச்சேரியுடனும் கூட்டம் கலைந்தது என ஒருநிருபர் எழுதுகிறார்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு

O. S. No 865 of 1930.
E. P. R. No 120 of 1931.

கள்பா அவனாசியிலிருக்கும் அளகப்ப செட்டியார் குமாரர் பழ. வீர. சுப்பிரமணியஞ் செட்டியார்—வாதி

அவனாசி தாலூகா சின்னேரி பாளையததிலிருக்கும் தேவாய்த்தோட்டம் மாரப்ப கவுண்டன் மக்கள் நஞ்சப்பக்கவுண்டன் 1. பெரிச்சி கவுண்டன் 2 ஷையூர் 1-ம் பிரதிவாதி நஞ்சப்பகவுண்டன் மகன் ராமக்கவுண்டன் 4. —1, 2, 4, பிரதிவாதிகள்.

ஷை 1 2. 4. பிரதிவாதிகளுக்குத்தெரிவிக்கும் நோட்டிசு.

ஷை நெம்பரில் உங்கள் சொத்துக்களை ஜப்தி செய்ததை ஏலம் போட வேணுமாயும், ஏல இஸ்தியாரில் கண்ட ஷாத்துக்களை நிரணயப்பதற்கும் வாதி மனுதாக்கல் செய்திருப்பதால் அதைப் பற்றி உமக்கேதாவது ஆக்ஷேபணையிருந்தால் வக்கீல் மூலியமாவது நேரிலாவது 1931 வருஷம் ஜுலைமீ 24௳ காலை 10மணிக்கு ஆஜராகித் தெரிவிக்கவும். இல்லாதவரை ஒருதலை பக்ஷமாக தீர்மானிக்கப்படும் என்கின்ற சங்கதி இதன் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(Sd) M. K. Govindarajulu Chettiar, Counsel for Decree-Holder.
Tirupur, 14—7—31.

ஓர் விளக்கம்.

அன்புமிக்க நண்பர் திரு. டி. ஜி. வெங்கடாசலம் அவர்களுக்கு,

தாங்கள் குடி அரசு மாலை 7-மலர் 9-பக்கம், 17ல் 'முன்னுக்குப் பின் முரண்பாடு' என்ற தலைப்பின் கீழ் குறிப்பிட்ட சந்தேகங்களுக்கு யானும் எனது விளக்கத்தை வணக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றினையும் முறையோடு செய்து வருவோர்க்கு அவற்றினின்றெழும் ஆனந்தமே வீடாகையால் திருவள்ளுவ நாயனார் 'மோட்சமென்னும் மோச' வீட்டைக் கற்பித்து மதி மயங்கச்செய்யாமலும் அக்கற்பிதத்தால் மக்கள் ஏமாறு இருக்கும்படியாகவும் கருதியே நம் சுயமரியாதைத் தலைவர்கள் சொல்லுவது போல் நமது கடமையை மட்டும் சொல்லியிருக்கிறார். கடமையைச்செய்வோர்க்கு அதனின்றும் நற்பயன் சித்திக்குமாகையாலும், அவர் மோட்சமொன்றென்றிருப்பதாக நம்பாததாலும் 'வீடு' என்னும் பகுதியை விடுத்தாரெனத்தகும்

யாதனின் யாதனின் நீங்கியானோத
லதனி னிதனி னிலன்

ஒருவன் விபரீதத்தினின்றும் எவ்வளவு விலகிக் கொள்ளுகிறானோ அவ்வளவிற்கு அதனாலுண்டாகும் துன்பங்களினின்றும் (கவலையினின்றும்) நீங்கியவனாவான். அதாவது மனதையடக்கி ஒருமைப்படுத்தி இன்புறுதலே வீடெனப்படும்.

தாம் வீழ்வார்... ... ...

என்ற முதலடியுடைய குறளிலும் இக்கருத்தே அடங்கியிருக்கிறது. எப்படியெனில் தம்மால் விரும்பப்பட்ட மக்களிரது மெல்லிய தோள்களில் துயிலுவதாலுண்டாகும் இன்பம் (கற்பிக்கப்பட்ட அதாவது இல்லாதொன்றை உருவிக்கப் பட்ட) எந்த இன்பத்திற்கும் (இந்திரனது பொன்னாட்டிற்கும்) பெரிது என்பதே. கனவிற்காணும் கனிகளை விட கையிலிருக்கும் காய் பெரிதன்றோ! திருவள்ளுவர் இந்திரனது பொன்னாடு இருப்பதாக நம்பாவிட்டாலும் மக்களுக்குள்ளிருக்கும் மயக்கத்தை நீக்கும்பொருட்டு பெரிதினும் பெரிதாக இவ்வுலகத்தை எடுத்துக்காட்டினார். இந்திரனது பொன்னாட்டைப்பெரிதாகக் கருதுவது மக்களது மயக்கம். அதை நீக்குவான் பொருட்டு அதனினும் பெரிதாக இச்சகத்தை எடுத்துக் காட்டினார்.

தெய்வம் தொழாள்... ... ...

என்னும் குறளிலும் நாயனார் 'தெய்வம்' என்ற சாதாரண மக்களால் கொள்ளப்படும் கடவுளை நம்பவில்லை. அதாவது கற்பிக்கப்பட்ட கடவுளென்னும் இல்லாப்பொருளை வணங்குவதைவிட இல்லாள் தான் கடமையைச் செய்வதே சாலச்சிறப்புளது என்றே சொல்லியிருக்கிறார். தொழுதல் என்பதற்கு கடனைச்செய்தல் என்று பொருள் கொள்வதே பொருந்தும்.

தெய்வத்தாலாகா... ... ...

கடவுளால் எக்காரியத்தையும் செய்ய முடியுமென்பது குருட்டு நம்பிக்கை. இவ்விதம் மக்கள் மயங்கி ஒவ்வொன்றையும் 'கடவுள் செயல்' 'விதி' என்று சொல்லுவதைக்கண்டிக்கவே (சர்வ வல்லமையுள்ள) கடவுளாலாகாத காரியமொன்றுண்டானாலும் அதை நாம் நம் முயற்சியால் செய்து முடிக்கலாமென்று சொல்லி மக்களைக் கடவுளுக்கும் பெரிதாகமதிக்கப்பட்ட பொருளுக்கும் பெரியவர்களாகவும் சக்தியுள்ளவர்களாகவும்கூறி மக்களுக்குள் உறங்கிக்கிடக்கும் தன்னம்பிக்கை, பொறுப்பு, முதலிய சுயமரியாதைத் தத்துவங்களை விளக்கியிருக்கிறார்.

தெய்வம் தொழான்... ... ...

என்னும் குறளில் கணவனை மனைவியின் கடவுளென்று நமது நாயனார் சொல்லவேயில்லை. தொழுது அதாவது கும்பிட்டு வருவதைப்பார்க்கிலும் அவன் விரும்பியவாறு நற்கருமங்களில் பங்கெடுத்துக்கொண்டு அவனுக்குத்துணையாயிருப்பதே இல்லாள் கடமையாம். சரஸ்வதி (கல்வியை) வணங்குதல்-சரஸ்வதி பூஜையில் நாம் புத்தகங்களை வைத்து மிகுந்த பக்தியுடன் பூஜை செய்தாலும் கல்வி பரவாதது நமது முயற்சிக் குறைவாலேயாகும். தினம் ஆறுவேளை புஷ்பம் சாற்றி பூஜை செய்வதைவிட அரைப்பக்கம் படிப்பதே கடமையைச் செய்ததாகும். அஃதேபோல் மற்றவைகளிலும்.

'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் 'கடவுள்' என்னும் பதத்திற்கு 'அறிவு' என்பதே பொருள். 'அறிவு பெற்றால் சுகம் பெறலாம்' என்றார் வள்ளுவர். 'சுயமரியாதை பெற்றால் சுயராஜியம்' பெறலாம் என்றார் நம் பெரியார். இருவர் கருத்தும் ஒன்றே.

ஜீவகன்.

திருப்பூர் அனுப்பு பாளையத்தில் சகோதரிகள் சங்கம் திறப்பு விழா.

ரங்கம்மாள் உபன்யாசம். 1000 பெண்கள் விஜயம்.

திருப்பூருக்கு அடுத்த அனுப்புபாளையத்தில் சென்ற மாதக்கடைசியில் பெரிய பெண்கள் கூட்டம் ஒன்றுகூடி அவ்வூரில் சகோதரிகள்சங்கம்என்பதாக ஒன்று, ஈரோடு பெண்பாடசாலை உபாத்தியாயனி திருமதி ரங்கம்மாள் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதுசமயம் திருமதி ரங்கம்மாள் அவர்கள் ஒரு சொற்பொழிவாற்றினார்கள். (அது அடுத்த வாரம் வெளிவரும்)

பிறகு சங்கத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டது.

திருமதிகள், பிரசிடெண்ட் வசம்மாள். வைஸ்பிரசிடெண்ட்டுகள் பொன்னம்மாள். அம்மன்னி அம்மாள், கிருஷ்ணம்மாள், காரியதரிசிகள். சீரங்கம்மாள், தெய்வானை அம்மாள் நிர்வாகசபை அங்கத்தினர்கள் மீனாக்ஷி அம்மாள், காமாக்ஷி அம்மாள், காணம்மாள், மீனாக்ஷி அம்மாள், விசாலாக்ஷி அம்மாள், க. லக்ஷ்மி அம்மாள், கு. ஈஸ்வரி அம்மாள் முதலியவர்கள். இரவு 11மணிவரை கூட்டம் நடந்தது.

இக்கூட்டத்திற்கு முக்கியஸ்தராய் இருந்து முயற்சி எடுத்து நடத்தி வைத்தவர் திரு. எம். கே. கே. குமாரசாமி அவர்களும், கே. வி. கே. வீரயன் அவர்களும் மற்றும் பல சுயமரியாதை வாலிபர்களே யாகும்.

(ஒரு நிருபர்)

ஓர் வேண்டுகோள்.

ரூபாய் 2000 இனாம்!

'குடி அரசு' பத்திரிகையின்முக்கிய கொள்கையாகிய சுயமரியாதை நம் தென்னாட்டில் பரவி மக்களுக்கு கொன்று தொட்டு நம்பி வாழ்க்கைக்கு சாதகமாய் அமைத்துக்கொண்ட பழைய புராண கொள்கையை மறுத்து அவற்றின் மூலமாகிய இந்துமதத்தை வேரைக்களைந்து எடுத்து எரிய முயற்சிப்பதை படித்தவர் முதல் பாமரர்வரை அறிந்ததொன்றாகும்.

குடி அரசு இதழில் இதிகாசங்களையும் மற்ற பல புராணங்களையும் மறுத்து பல கட்டுரைகள் வெளிவந்தன. அவைகளை தனித்தனி மலர்களாக செய்து, மக்களுக்கு நல்கி சுயமரியாதை இயக்கத்தை காட்டுதீபோல் பரப்புகிறார்கள். புராணங்களும் இதிகாசங்களும் ஒழிந்தால் அவற்றை ஆதாரமாக கொண்ட இந்துமதம் தானாய் அழிந்துவிடுமென்பதை அறியாததார்?

சுயமரியாதை இயக்கத்தார் நிகழ்த்திவரும், சொற்பொழிவுகளையும் கட்டுரைகளையும் வரைந்து அவற்றின் ஆயுதமாகிய, குடியரசு, குமரன், முன்னேற்றம், புதுவை முரசு. சண்டமாருதம், நாடார் குல மித்திரன், தமிழன் என்னும் இதழ்களில் வெளிப்படுத்தி மக்களின் மனதை மாற்றுகின்றனர். அக்கட்டுரைகளை மறுத்து பழைய கொள்கைகள், புராணங்கள், இதிகாசங்கள், சரியே என அறிவுக்குப் பொருந்துமாறு சொல்பவரிருப்பரென்று இவ்வேழ் ஆண்டாக, எதிர்பார்த்து ஏமாந்தவர்களில் நானும் ஒருவனாதுமென அறிவித்து, மீண்டும் சொல்வதாவது, எனது இளம்பருவ முதல் நீண்டநாளாய் நம்பி வந்த யொன்றை முறை அறியாது விடுவது எனில் மனமிசையுமோ? ஆதலால் ஊக்கத்தோடு பத்திரிகைகளை கவனித்தேன். சுயமரியாதை இயக்கத்தை மறுக்கும் கொள்கையோடு பல பத்திரிகை வெளிவந்தன. பின்னால் அவை யிருக்குமிடமே தெரியாதொழிந்தன. பல பெரியார்கள் மறுப்புகள் வெளியிட்டனர். ஆனால் அவைகள் ஏற்றவாறும் ஒப்புமாறுமில்லை. இதனை குறித்து பல பெரியார்களையும், தலைவர்களையும் சந்தித்து இவ்விஷயங்களைப்பற்றி ஆராய்ந்ததில் அவர்கள் எனக்குரைத்த சமாதானம் பின்வருமாறு. "சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் முற்றிலும் தப்பிதமென தக்க ஆதாரத்தோடு மறுப்புகள் வரையும் பெரியார்கள் பலருள்ளனர். ஆனால் அவர்களுக்குப் "பத்திரிகை வசதியும், பண வசதியுமில்லை" என்று சொல்லுகிறார்கள். மேல்கண்ட குறைகளை நான் சரிப்படுத்துகிறேன் என்று இதனால் அறிவிக்கிறேன்.

நான் வசிக்கும் ஜோலார்பேட்டை வசதியுள்ள இடம். எனது வீட்டிற்கு எதிரில் பெரியார்கள் தங்குவதற்கென சுகாதாரத்திற்கு எவ்வித இடையூறுமில்லாது கட்டடம் அமைத்திருக்கிறேன். மேல் கண்டதற்கு இசைந்து மறுப்புகள் வரைய மனமிருப்பவர் இங்கு தங்கலாம். உண்ணல், உடுத்தல் முதலியவை அவர்பழக்கத்திற்கு ஏற்றவாறு அளிக்க ஒருப்படுகிறேன். அவர்களுக்கு தனிப்பத்திரிகையோ அல்லது எந்த பத்திரிகையில் எழுத வசதி வேண்டுமோ அவையும் அளிக்கிறேன். வைதீக, சுயமரியாதை கட்சிகளில் உள்ள இரு பெரியாரை பொதுவாக நியமித்து அவர்கள்பால் நன்கொடை ரூ. 2000 அளித்து சரியென ஒப்பிய முடிவில் அத்தொகை அளிக்குமாறு இசைகிறேன். தகுந்த அறிவுள்ளவர்கள் கடித மூலமாகவோ, பத்திரிகைகளிலோ அறிவிக்க அல்லது நேரில்வர வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
வரதராஜு முதலியார்
கன்ருக்டர், ஜோலார்பேட்டை.

சென்னையில் "குடி அரசு" பத்திரிகையும், புஸ்தகங்களும் கிடைக்குமிடம்.
T. சுப்ரமணியம்,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீ விலலிபுத்தூர் மடவார் விளாகம் வைத்தியனாத சுவாமி பள்ளி அறையில் சிவகாமி அம்மன் தாலி பரிமுதல்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் மடவார் விளாகம் வைத்தியனாத சுவாமி கோவிலில் 31-5-31 இரவு பள்ளியறையில் வழக்கம் போல் வைத்தியனாத சுவாமி, சிவகாமிஅம்மன் என்ற இரண்டு செம்பு விக்ரகத்தையும் சேர்த்து போட்டு கதவுகளை எல்லாம் பூட்டிவிட்டு பட்டர் ஐயர் என்ற (சிறைவார்டர்) சாவிகளை எடுத்துக்கொண்டு வீடு சேர்ந்தாராம். மறுநாள் காலையில் கோவிலைத் திறந்து (கைதிகளாகிய) சிவகாமிஅம்மனையும் வைத்தியனாத சுவாமியையும் பார்க்கையில் அம்மன் தாலியையும், உடையையும், சுவாமி உடையையும் காணவில்லையாம்! மற்றும் திரைமுதலான துணிகளும் பொசுக்கபட்டு இருந்ததாம். பரிதாபம்! என்னே சுவாமியின் சக்தி! இந்த தாலி பரிகொடுத்த சுவாமியை மொட்டை அடித்து வெள்ளை சீலை கட்ட வைப்பதா? அல்லது இனி ஒரு கல்யாணம் செய்து சேர்த்து கொள்வதா? பட்டர் திருவாக்கு எப்படியோ? அம்மன் தாலியை சாமிபக்கத்தில் இருந்தும் அறுத்த திருடனின் சக்தியே சக்திகல்லுக்கும், செம்புக்கும் கொண்டுபோய்காசைக்கொட்டும் ஆஸ்திகர்கள் இனியாவது சாமிகளின் சக்தியை அறிந்து, கோவில் கலமனைத்தும் பள்ளிகள் செய்வோமென முன்வருவார்களா?

உண்மை உரைப்போன்.

சிலோன் வெலிவிறு எஸ்டேட். சுயமரியாதைத் திருமணம்.

திருநெல்வேலி ஜில்லா மேல செவல் திரு. எ. பி. சுப்பையா அவர்கட்கும் வெலிவிறு எஸ்டேட் திருமதி. எஸ். வி. லோகாம்பாளுக்கும் சீர்திருத்த சுயமரியாதைத்திருமணம் 6-7-31ல் திருவாளர் எ. எ. அழகுமுத்து அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்களாலும் மற்றும் சுயமரியாதைப்பற்றுள்ள பெரியார்களாலும் 'சுயமரியாதை' என்பதுபற்றி சொற்பொழிவாற்றி திருமணம் இனிது நிறைவேறியதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருப்பத்தூர்.

ஆதிதிராவிடர் சங்கம்.

இச்சங்கத்தின் நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் 5-7-31 தேதிமாலை 7 மணிக்கு திரு. கா. பெ. கதிர்வேல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி சங்கத்தின் அறிக்கை வாசித்தபின் பல அன்பர்கள் பேசியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

நாகபட்டணம்.

புரோகிதம் ஒழிந்த திதி.

இவ்வூர் சுயமரியாதைச் சங்க அங்கத்தினர் திரு. ஜி. சௌரிராஜலு என்பவர் தன் தகப்பனார் இறந்த இறுதிச்சடங்கை 8-7-31 தேதியில் சுயமரியாதைக்கொள்கைப்படி யாதொருவித சடங்குகளின்றி நடந்தேறியது. அது சமயம் சமபந்திபோஜனம்ஒன்றும் நடந்தது. திரு. சௌரிராஜலு "குடி அரசு"க்கு நன்கொடையாக ரூபாய் ஒன்று கொடுத்துதவினார். பலத்த எதிர்ப்பிற்கிடையே இவ்விதம் செய்ய முன் வந்தது போற்றற்குரியது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மட்டற்ற வீர்யம்!

ஒரு வேளை மருந்தில் குணம்.

நமது மருந்தை குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம். இன்றே நமது பிரசித்திபெற்றசகதிலேஹ்யமும் தங்கபஸ்பமும் சாப்பிடுங்கள். நரம்பு தளர்ச்சி, வீர்யக்குறைவு நபுஸ்கத்வம் முதலியவற்றை உடனே பறக்கடிக்கும். விலை ரூ. 5—0—0 நாள்.

Neo Sakthi & Co.,
10 th Beat
Vepery Madras.

பஞ்சமா பாதகங்கள்

எவை?
ஏன் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

குளத்தூர்.

வாலிப நாடார் ஐக்கிய சங்கம் மூன்றுவதாண்டு நிறைவுவிழா, 17-7-31 தேதி வெள்ளிக்கிழமை பகல் 1-30 மணி முதல் 7-மணி வரை தர்மபரிபாலன சங்கத்தின் முன்பாக அமைக்கும் கொட்டகையில் தூத்துக்குடி உயர்திரு. அரி. அ. சு. துரைசாமி அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும். அது சமயம் பல அன்பர்கள் பேசுவார்களென பிரசிடெண்டு மு. மு. வெ. முத்தய்யா நாடார் எழுதுகிறார்.

மக்களிரவதைப்பது

வியாதியா? விதியா?

ஆலசியமே விதியாய் முடியும்.

வாழ்நாளை வீணாக்கும் வெட்டை நோய் கொடியது எவ்வளவு நாள்பட்ட நோயானாலும் திருவாரூர் டாக்டர் கண்ணுசாமியவர்களின் ரஸவெள்ள பற்பம் சாப்பிடு.

40 நாள் மருந்து ரூ. 30—0—0.

ஏழைகளுக்குப் பாதிவிலை.

டாக்டர் ஜி. கண்ணுசாமி,
ஷண்முகானந்த வைத்தியசாலை திருவாரூர்.
S. I. R.

ஓர் அதிர்ஷ்ட ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணையை உபயோகியுங்கள்.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்று தர்மார்த்தமாக குறைந்த விலைக்கு வெளியிட்டு வருகிறது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டைவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கெர்ப,—வித்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, தொனால், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீக்கங்கள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, குதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (விரிக்கின் பெருகும்) அனந்த வெட்டைவாய்வு ரோகிகளும், 3 நேரம் கம், பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள் பாலிய தேசசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியக்ஷம்.

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள தூர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் பிரம்ம முடிகோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ஏழைகளுக்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும் வேண்டும்.

பிரம்மமுடி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	0—8—0
மனு நீதி மருமம்	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	0—2—0
சோதிடப் புரட்டு.	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு)	0—2—0
சுயமரியாதைப் பாடல்	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	0—4—ʋ
ஞானசூரியன்	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம்	0—8—9
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	0—2—0
*குறள்	0—8—0
* இயற்கைமதம்	0—8—0
* சிதம்பர ரகசியம்	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள்	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது]	0—6—0
* ஆராய்ச்சி அணிகலம்	0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட்	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி. கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.

*ராஜாத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.

*காஸ்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, எடயதெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
ஜெனரல் நியூஸ் ஏஜண்ட்
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாச்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

P. R. C. எல்லப்பன்,
மரக்கடை வியாபாரம்,
கொசததெரு, காஞ்சீபுரம்.

A. S. முருகேசம, பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
3, செங்கல்வாராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.

A. R. M. சுந்திரபாண்டியன்
கடை வீதி,
அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.

*B. றங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜிமுகமது ஷேக்உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.

*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குரிச்சி.

C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்களூர் Cant.

M. N. M. பாவலர்,
நியூஸ் ஏஜண்ட், விழுப்புரம்.

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
தலையூர்.

முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஜலண்டு,
கொழும்பு.

A. S. பரமசிவம்
நியூஸ் ஏஜண்ட்,
பம்பலபிட்டியா,
கொழும்பு.

எட்வர்ட்பால்
திருமலாபுரம்

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.

S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்.

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்

S. C. கந்தசாமி,
26, குமாரசாமி செட்டி வீதி,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்

சிதம்பரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதர்ஸ்டோர் மேலவீதி

சாத்தான் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்

பட்டுக்கோட்டை
கே. சாரங்கபாணி
கொண்டப்பநாயடுபாளையம்

ஸ்ரீவில்லிப்புத்தூர்.
பி. ஞானதேசிகம்

மாயவரம். எம். கலியாணசுந்திர
முதலியார் கதர்ஸ்டோர்,

* இந்த புள்ளியுள்ள விளம்பரதாரர்களிடம் குடி அரசு பதிப்பக புஸ்தகங்களும் கிடைக்கும்.

கீழ்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ரல் ஸ்டேஷன்.
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்,
சேலம்.
தஞ்சாவூர்.
பௌரிங்பெட்.
எக்மூர்.
ஜோலார்பேட்டை.
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்,

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
7?, Serangoon Road

கோலாலம்பூர்.

R. S. Naidu,
86, Ampang St

O. M. Ali Saiboo & Co,
2?, Java Stree

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சோ. முருகப்பர்
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'
வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0
ஆசிரியர்: S. குருசாமி B.A.
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு „ 5—0—0
ஆசிரியர்: சு. அ. அழகர்த்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0
ஆசிரியர்: அ. பொன்னம்பலம்
மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமனாதபுரம் ஜில்லா

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்

சித்தர் பார்மஸி

விஷகடிகளினுலுண்டான ஊரல் தடிப்பு பத்து குணமடையும். 3 நாள் சாப்பிடும் விஷமை ரூ. 2. குதபற்பம், நாட்பட்ட வயிற்று வலி, வாய்வு ரோகங்கள் 7 வேளையில் குணமடையும். ரூ. 3-8-0. கேட்லாக் இனம்.

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
கோவில்பட்டி, S. I. R.

ஏழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஔஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமானல் பழனி சி. எம், சாமி

மகா வீரிய **தங்க பஸ்பம்** சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

காமரூபிலேகியம் தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ. 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும், மேல்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C மஹாலயப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

உண்மை விளக்கம பதிப்பகத்தில் அச்சிடப்பட்டதேகுமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.